சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ) (தமிழ் - பாகம்-4)

1. 36தத்துவங்களின் செயல்பாட்டுமுறை.
2. யோகத்தில் ஷட்சக்ரேசர்களைக் கடக்கும்முறை.
3. ஆகமக்கிரியைகளுக்கேற்ற காலம்.
4. ஆலயநித்யபூசையின் பரிகாரசெயல்கள்.
5. ஆகமம் கூறும் உலகஅமைதிச்செயல்கள்.
6. ஆகமத்தில் நியாஸவகைகளின்முறை.

பாகம்-4

நூலாசிரியர் - வி. சோமசேகர சிவாசார்யர்

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை - சென்னை-1.
சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் - சென்னை-1.

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ) (தமிழ் - பாகம்-4)

2010ம் ஆண்டின் பின்மோத, ஆகம சிறப்புச் சொற்பொழிவுகள்

1. 36தத்துவங்களின் செயல்பாட்டுமுறை.
2. யோகத்தில் ஷட்சக்ரேசா்களைக் கடக்கும்முறை.
3. ஆகமக்கிரியைகளுக்கேற்ற காலம்.
4. ஆலயநித்யபூசையின் பரிகாரசெயல்கள்.
5. ஆகமம் கூறும் உலகஅமைதிச்செயல்கள்.
6. ஆகமத்தில் நியாஸவகைகளின்முறை.

கருத்தவை நடத்துநர் & கட்டுரை சேகரித்தவர்
சிவஸ்ரீ வி. **சோமசேகர சிவாசார்யார்** M.A.,
குருமுதல்வர் சைவாகம கலாசார வித்யாகேந்திரம்,
சென்னை-600 001.

நூல் தொகுப்பாளர் & நூல் பரிசோதகர்
வேதாந்த சிரோமணி, சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ Dr. T. S. **ஷண்முக சிவாசார்யார்** M.A..P. hd.,
நிறுவனர் & தலைவர்
ஸ்வாமி ஸதாசிவோம் சிவாகம ஞானகேந்திரம்,
ஸ்ரீஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன், சென்னை-600 001.

நூல் வெளியீட்டாளர்
சிவஸ்ரீ T. S. **காளிதாஸ் சிவாசார்யார்**
அர்ச்சகர், சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் கோயில்,
சிவசார்யர் அறக்கட்டளை நிறுவனர் & ஆலயஆசார்யார்.

சென்னை-1, தம்புசெட்டித்தெரு, புதுஎண்.207ல் இயங்கி வரும் சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில் சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன் இணைந்து மாதந்தோறும் நடத்திவந்த சிவாகம சிறப்புச்சொற்பொழிவு நிகழ்ச்சி களில் பேசிக்கட்டுரை அளித்தவர்களுக்கு "சிவாகம வாசஸ்பதி" எனும் விருதுஅளித்துப்பாராட்டி, இந்நூல் வெளியிடப்பட்டது.

வெளியீடு: **சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும்**
சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)
207/101, தம்புசெட்டி தெரு, சென்னை-1.

CENTRE FOR SHAIVA STUDIES

உ

நூல் வெளியீட்டுக் குறிப்பு

சிவாகம கட்டுரைத் திரட்டு (தமிழ் – பாகம்–4)

நூலின் பெயர்	: ஆகமார்த்த ப்ரபந்தமஞ்ஜரீ
நூலின் மொழி	: தமிழ் மற்றும் சமஸ்கிருதம்
நூலின் எழுத்து	: தமிழ்
நூலின் அளவு	: 5.5" x 8.5"
நூலின் எண்ணிக்கை	: 100
வெளியீடு வரிசை எண்	: 9
நூலின் பதிப்பு எண்	: முதற்பதிப்பு
நூலின் பக்கம்	: 138
கட்டுரை சேகரித்தவர்	: சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர்
தொகுப்பு ஆசிரியர், நூல்வடிவமைப்பு & திருத்தம்	: சிவஸ்ரீ Dr. தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
பதிப்பு உரிமை	: சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ சிவாசார்யர்
வெளியீட்டு நாள்	: 25.12.2011
நூல்கணிணிப் பதிவு	: சிவாசார்யர் அறக்கட்டளை
வெளியீடு	: மேதா சக்ரீணீ கோஷ்டம்
நூற் தொகுப்பு	: சிவாசார்யர் அறக்கட்டளை
வெளியிடுவோர்	: சிவஸ்ரீ தி.ஸா. ஸ்வாமி ஸதாசிவோம் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் சிவஸ்ரீ மு. கார்த்திகேய குருக்கள்
மீள்பதிப்பு & திருத்தம்	: சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர்
இரண்டாம் பதிப்புகாலம்	: சோபக்ருத்–ஞு தை–மீ 26–உ. சுக்ரவாரம்.
இரண்டாம் பதிப்பு நாள்	: 09–02–2024 தை அமாவாசை புண்யதினம்.
புத்தகத்தின் விலை	: **விலை ரூ.300/-**
புத்தகம் கிடைக்கும் இடம்	: சேகரித்தவர்–வெளியிட்டவர் அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352

உரிமை : © இந்த புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக் கூடாது.

Copyright © All reserved including the rights of reproduction in whole or in part in any form.

உ

CENTRE FOR SHAIVA STUDIES

சிவாகம கட்டுரைத் திரட்டு (பாகம்-4)
(அரைஆண்டு அயனமலர்)

நூலின் உள்ளடக்கம்

1. ஞானதீப நமஸ்காரம் 4
2. கோமாதா ஸ்துதி 4
3. ப்ராதஸ்மரணம் 5
4. ஆசார்யவந்தனம் 6
5. இஷ்டதேவதா வந்தனம் 7
6. திருமுறைத்துதிகள் 10
7. ஆசியுரை 14
8. வாழ்த்துரை 15
9. நூல்முன்னுரை 16
10. மதிப்புரை 17
11. நூல்முகவுரை 19
12. தொகுப்புரை 21
13. நூல் – கட்டுரையாளர் அறிமுகம் மற்றும் கட்டுரைகள்
    1. ஷட்திரிம்சத் தத்துவ ப்ரவிருத்தி விவரணம் (36 தத்துவ செயல் முறை விளக்கம்) 24
    2. சிவயோக ஷட்சக்ர காரணேச தியாகக் கிரமம் 55
    3. ஆகம க்ரியாணாம் யோக்யகால விதானம் 81
    4. ஆலய நித்திய பூஜா ப்ராயச்சித்த விதானம் 97
    5. சைவாகமோக்த லோகசாந்திகர கிரியாபேத விவரணம் 118
    6. சிவாகமங்கள் உபதேசிக்கும் மந்திரந்யாஸமும் அதன் தத்துவங்களும் 127
14. வாழ்த்து 136
15. வெளியிட்ட நூல்கள் 137

[stamp]

ஞானதீப நமஸ்காரம்

(காலை மாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம் செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயு ராரோக்ய ஸம்பத: |
சத்ருபுத்தி விநாசாய தீபஜ்யோதிர்! நமோ(அ)ஸ்து தே ||

***

கோமாதா ஸ்துதி. (பசுவணக்கத் துதிகள்)

இந்த அபூர்வமான ஸ்தோத்திரத்தைச் சொல்லி கோபூஜையைச் செய்து, பிரதக்ஷிணம் செய்தால், அளவற்ற புண்யங்களும், சகலபாக்யங்களும் ஏற்படும். இதனைக்கூறிப் பணிந்து வாசகர்கள் பயன்பெற வேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவ்ருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம: 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

CENTRE FOR SHAIVA STUDIES

ப்ராதஸ்மரணம் (காலைஇறைவணக்கம்)

ப்ராதர் நமாமி கணநாத மநாத பந்தும் –
சிந்தூர பூர பரிசோபித கண்ட யுக்மம் |
உத்தண்ட விக்ன பரிகண்டன சண்டதண்டம் –
ஆகண்டலாதி சுரநாயக ப்ருந்த வந்த்யம் || 1

ப்ரஹ்மா முராரிஸ் த்ரிபுராந்தகாரி –
பானுஸ் சசீ பூமி சுதோ புதஸ் ச |
குருஸ் ச சுக்ரஸ் சனி ராகு கேதவ: –
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் || 2

ப்ராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம் –
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம் |
திவ்யா யுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ர ஹஸ்தாம் –
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம் || 3

ப்ராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட –
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம் |
ப்ரஹ்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீல லீலாம் –
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம் || 4

ப்ராதர் பஜாமி பவதா மபிலாஷ த்[3]தாத்ரீம் –
த்[4]தாத்ரீம் ஸமஸ்த ஜகதாம் துரிதாப ஹந்த்ரீம் |
ஸம்ஸார ப[3]ந்தன விமோசன ஹேது பூதாம் –
மாயாம் பராம் ஸமதி[4]கம்ய பரஸ்ய விஷ்ணோ: || 5



18பத்ததி ஆசார்ய ப்ரணதி: ஸ்ரீ குருப்யோ நம:

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்புர் ப்ரம்ம சம்புஸ் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவா(அ)த ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ் சைவா(அ)ஷ்டாதசா சார்ய புங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்க தர்சிப்யோ ஆசார்யேப்யோ (அ)ஸ்து மே நதி:.

பக்தசுந்தரமூர்த்திஸ்தவ:- கேயூர குண்டல கிரீட விபூஷி தாங்கம் -
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம் ।
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம் -
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம் ॥

சைவ ஸந்தான ஆசார்யர்கள்

CENTRE FOR SHAIVA STUDIES

இஷ்டதேவதாவந்தனம்



ஓம் கணேசாய நம:

குணாதீத மாத்யம் சிதானந்த ரூபம் –
சிதாபாஸகம் ஸர்வகம் ஞானகம்யம்.
முனித்யேய மாகாச ரூபம் பரேசம் –
பரப்ரஹ்ம ரூபம் கணேசம் பஜே(அ)ஹம்.

ஓம் ஷண்முகாய நம:

குந்தேந்து மந்த ஸ்மித சுந்தரா ஸ்யம் –
வந்தாரு பூதேவ வரை ருபா ஸ்யம்.
ப்ருந்தாரகா ராதி ஜனை ரசா ஸ்யம் –
வந்தே பவானீ தநயம் ஷடா ஸ்யம்.

ஓம் சங்கராய நம:

தவள மய சரீரம் ஸர்ப்ப சூலஞ் ச பாசம் –
பரசு மனல கட்கம் கேடகம் வஜ்ர ஹஸ்தம்.
அபய வரத ஹஸ்தம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் –
பணி சசி ஜல மௌளிம் தேவதேவம் நமாமி.

ஓம் தக்ஷிணாமூர்த்தயே நம:

கபர்திநம் சந்த்ர கலா வதம்ஸம் –
த்ரிநேத்ர மிந்து ப்ரதிமா நநோ ஜ்வலம்.
சதுர் புஜம் ஞானத மக்ஷ சூத்ரம் –
புஸ்தாக்னி ஹஸ்தம் ஹ்ருதி பாவயேத் சிவம்.

ஓம் நடேசாய நம:

க்ருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் –
ஜடாதரம் பார்வதி வாம பாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்த ரூபம் –
சிதம்ப ரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஓம் லலிதாம்பாயை நம:

ஸ்ரீம் பதபூர்ண மஹா மநு ரூபே –
ஸ்ரீ சிவகாமி மஹேச்வர ஜாயே .
ஸ்ரீ குஹ வந்தித பாத பயோஜே –
ஸ்ரீ லலிதா பர மேசி நமஸ்தே.

ஓம் க்ருஷ்ணாய நம:

இந்தீவர ச்யாமள கோமலாங்கம் –
இந்த்ராதி தேவார்ச் சித பாத பத்மம்.
ஸந்தான கல்ப த்ருமம் ஆச்ரிதானாம் –
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி .

ஓம் விஷ்ணவே நம:



மேக ச்யாமம் பீத கௌசேய வாஸம் –
ஸ்ரீவத் ஸாங்கம் கௌஸ்துபோத் பாஸிதாங்கம்.
புண்யோ பேதம் புண்டரீகாய தாக்ஷம் –
விஷ்ணும் வந்தே ஸர்வ லோகைக நாதம்.

ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:

ஸரஸிஜ நயனே ஸரோஜ ஹஸ்தே –
தவளதரா ம்சுக கந்த மால்ய சோபே.
பகவதி ஹரி வல்லபே மனோக்ஞே –
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம்.

ஓம் துர்க்காயை நம:

நமஸ்தே சரண்யே சிவே ஸாநுகம்பே –
நமஸ்தே ஜகத் வ்யாபிகே விச்வரூபே.
நமஸ்தே ஜகத் வந்த்ய பாதாரவிந்தே –
நமஸ்தே ஜகத் தாரிணி த்ராஹி துர்கே.

ஓம் ஸரஸ்வத்யை நம:

சுராசுர சேவித பாத பங்கஜா–
கரே விராஜத் கமநீய புஸ்தகா.
விரிஞ்சி பத்னீ கமலாஸந ஸ்திதா–
ஸரஸ்வதீ ந்ருத்யது வாசி மே ஸதா.

ஓம் ஹயக்ரீவாய நம:

ஞானா னந்த மயம் தேவம் –
நிர்மல ஸ்படிகா க்ருதிம்.
ஆதாரம் ஸர்வ வித்யானாம் –
ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

ஓம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாய நம:

யஸ்யா (அ)பவத் பக்தஜனா (ஆ)ர்த்தி ஹந்து: –
பித்ருத்வம் அன்யேஷு அவிசார்ய தூர்ணம்.
ஸ்தம்பே (அ)வதாரம் தம் அநந்ய லப்யம் –
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே.

ஓம் மஹாசாஸ்த்ரே நம:

ஹரிவரா ஸநம் விச்வ மோஹனம் –
ஹரிததீ ச்வரம் ஆராத்ய பாதுகம்.
அரிவிம ர்தநம் நித்ய நர்த்தனம் –
ஹரிஹரா த்மஜம் தேவ மாச்ரயே.

ஓம் பைரவாய நம:

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம் –
கராம் புஜைஸ் ஸந்தததம் த்ரிநேத்ரம்.
திகம் பரம் பஸ்ம விபூஷி தாங்கம் –
நமாம் யஹம் பைரவ மிந்து சூடம்.

ஓம் ஹநுமதே நம:

அசேஷ லங்கா பதி ஸைன்ய ஹந்தா –
ஸ்ரீராம ஸேவா சரணைக கர்த்தா.
அசேஷ துக்காஹத லோக கோப்தா –
த்வஸௌ ஹநூமான் தவ ஸௌக்ய கர்த்தா.

உ

திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி ! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

திருமுறைத்துதிகள்

விநாயகர் துதி

(உமாபதி சிவாசார்யார் அருளியது)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

நால்வர் துதி

(உமாபதி சிவாசார்யார் அருளியது)

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத் தாள் போற்றி

அண்ணாமலையார் துதி (தேவாரம்)

(திருஞானசம்பந்தர் அருளிது)

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங் கள் எரித்த அன்று மூவர்க் கருள் செய்தார்
தூமா மழை நின் றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந் தணையும் சாரல் அண்ணா மலையாரே.

திருவாசகம் - (மாணிக்கவாசகர்)

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையா னைப் பாடுதுங்காண் அம்மானாய்.

திருவிசைப்பா - திருமுறை-9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ஆதிதாளம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

திருப்பல்லாண்டு - திருமுறை-9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ரூபகம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம் - திருமுறை-12 (சேக்கிழார்)

ராகம் : மத்யமாவதி விருத்தம்

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

அபிராமி அந்தாதி

ஞானமும் நல்வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

தியானத்தில் நிலைபெற

கண்ணியது உன்புகழ் கற்பது உன்; நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில்; பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,
காத்தும், அழித்தும் திரிபவராம்; கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.

திருப்புகழ்

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலத் தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே
வரத்துறை நீதர்க் கொருசேயே
வயித்திய நாதப் பெருமாளே.



சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

ஆசியுரை

ஸ்ரீ சிவசைவாச்சாரியராகிய

ஸ்ரீ சீர்காழி சட்டநாத சுவாமிகள் மடம்

கோமளீஸ்வரன்பேட்டை கோயில் தெரு

மவுண்ட்ரோடு, சென்னை-600 002.

போன் : 65180106

சிவஸ்ரீ. T.S.சதாசிவோம் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.காளிதாஸ் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.சண்முக சிவாசாரியர் அவர்களுக்கு

ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் கிருபா கடாக்ஷத்தினால் என்றும் அநேக ஆசீர்வாதங்களை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களின் சிவாச்சாரியர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சார்யர் பௌண்டேஷன் மூலமாக கடந்த இரண்டு வருடங்களாக சிவாகமத்திற்கும் வரும்கால சிவர்ச்சார்ய இளைஞர்களின் பூஜா விஷயங்களுக்கு உதவியாக நடைபெற்று வரும் ஆகம சொற்பொழிவுக்கும் பேரறிஞர்களின் வருகை தரும் நம்முடைய சமுதாயத்திற்கும் பேருதவியாக அமைந்து என்றும் நம்முடைய ஆதிசைவ சமூகத்திற்கும் இவ்வுலகத்திற்கும் என்றும் துணை நிற்க ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் பேரருள் துணை நிற்க ஆசீர்வாதம் செய்கின்றோம்.

15/12/11
சென்னை-2

இப்படிக்கு

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

மீமாம்ஸ், வ்யாகரண சிரோமணி **சிவஸ்ரீ தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்**

பரம்பரை .பூஜை ஸ்தானீகர்

அருள்மிகு குளிர்ந்த நாயகி உடனுறை ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில்

திருமழிசை, சென்னை, தொலைபேசி 044 26496007

வாழ்த்துரை

எனது ஸஹோதரர் தெய்வத்திரு. தி.ஷ.ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களின் லக்ஷியங்களை நிறைவேற்றும் விதமாக அவரது திருக்குமாரர்கள் தந்தையாரின் பெயரில் அறக்கட்டளைகள் அமைத்து பொதுநலத் தொண்டுகளையும், சிவாகமசொற்பொழிவுகளையும் இன்னும் பல நற்காரியங்களையும் செய்து வருவது எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பிகையின் பேரருளே. மாதந்தோறும் சிறந்த ஆகம வல்லுனர்களை கொண்டு அவர்களின் சொற்பொழிவுகளை பதிவு செய்ததோடு மட்டுமல்லாமல், கட்டுரைகளாகவும் பெற்று வருங்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையுமாறு இந்த புத்தகத்தினை தொகுத்து அளித்திருக்கிறார்கள். "சூத்ரே மணிகணா இவ" என்றபடி பல மணிகளை ஒரு நூல் இணைத்திருப்பது போல், இதுபோன்ற பல நறுமலர்களை சிறந்த முறையில் தொகுத்து அளித்த சிவஸ்ரீ ஸோமசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், புத்தகத்தை பதிப்பித்த அறக்கட்டளை நிர்வாகத்தினருக்கும் எனது அன்பான வாழ்த்துகள். இது போன்று பல மலர்கள் இந்த அகண்ட ஞானவ்ருக்ஷத்தில் இருந்து பூத்து, இருளால் சூழப்பட்டிருக்கும் இவ்வுலக மக்களுக்கு ஒளிதர எல்லாம் வல்ல எனது ஈசன் குளிந்த நாயகி உடனுறை ஒத்தாண்டேச்வர சுவாமியை வேண்டி பணிகின்றேன்.

அன்புடன்

தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்

ஸாஹித்ய சிரோமணி. ஆகமப்பிரவீனர். சைவாகம வித்யா ரத்னம்

சிவஸ்ரீ. வி. சந்திரசேகர சிவாசார்யர்

சைவாகமப் பேராசிரியர் (ஓய்வு)

ஸ்ரீ வெங்கடேஸ்வர வேதசாஸ்த்திர ஆகமவித்யாகேந்திரம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஏ2, ஆனந்தி அடுக்ககம், 33/17, சாலைத் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.

தேதி : 21-12-2011

ஓம் ஸ்ரீ குருப்யோ நம :
நமோ வாமார்த ஜானயே.

சென்னை, தம்புச்செட்டி தெருவில் கோயில் கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துவரும் **அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் பிராதான அர்ச்சகரும், "சிவாசார்ய குல திலகம்", "சாக்த ரத்னாகரம்"** போன்ற விருதுகளைப் பெற்றவரும், இந்து மதத்தின் குரு என்கிற முறையில் அயல்நாட்டுக்கு சென்று ஐக்கிய நாடுகளின் சபையில் நமது இந்துமதத்தின் சிறப்பையும், சைவ-சமயத்தின் மேன்மையையும் எடுத்துரைத்துப் பெரும்புகழ் பெற்றவருமான சிவாசார்ய குல பூஷணம் **சிவஸ்ரீ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்** அவர்களுடைய அருளாசியுடன் அவருடைய குமாரர்களால் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில், கடந்த இரண்டு வருடங்களாக பிரதிமாதம் சைவாகம விற்பன்னரான ஒரு சிவாசாரியார், சைவாகம ஞான, கிரியா, சர்யா, யோக பாதங்களில் கூறப்பட்ட விஷயங்களை சிறப்பாக உரையாற்றியவற்றை கட்டுரைகளாக எழுதி அவை தொகுக்கப்பட்டு மலராக வெளியிடப்படுகிறது.

இந்த விழாவில், இரண்டு ஆண்டுகளில் பிரதிமாதம் உரையாற்றிய சிவாசார்யர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருதும் வழங்கப்படுகிறது.

பொது ஜனங்களுக்கு ஆன்மிகத்தில் அதிகப்பற்று உண்டாக வேண்டுமென்பதும், ஆதிசைவ குலத்தில் பிறந்த சிவாசார்ய சிறுவர்களுக்கு சிவாகமங்களைக் கற்பதிலும், ஆலயத்தில் அர்ச்சகராக பணிபுரிவதில் ஆர்வம் உண்டாகவேண்டுமென்பதுமே இதுபோன்ற விழாக்களின் நோக்கமாகும்.

எனவே இதுபோன்ற ஆன்மிக விழாக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளாகிய அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் திருவடிகளை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

இப்படிக்கு,
ஸாஹித்திய சிரோமணி ஆகமப்பிரவீணர்
சைவாகம வித்யா ரத்னம்
V. சந்திரசேகர சிவாசார்யர்

Phone : 2498042

The Madras Sanskrit College & S.S.V. Patasala

(Affilated to University of Madras)

[Recognised by Rashtriya Sanskrit Sansthan, The Ministry of Human Resource Development, Govt. of India, New Delhi, Under Adarsh Sanskrit Mahavidyalaya Scheme]

Dr. N.V. DEVIPRASAD
Principal

84, ROYAPETTAH HIGH ROAD,
MYLAPORE, CHENNAI - 600 004.
E-mail : mds.sanskritcollege@gmail.co

மதிப்புரை

மனிதனுடைய வாழ்க்கையில் அடைய வேண்டியவை நான்கு - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம். மனிதனால் அடையப்படவேண்டியவை என்பதினால் இவை நான்கும் புருஷார்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு புருஷார்த்தங்களை அடைவதிலும் ஆன்மீகம் நிறைந்திருக்க வேண்டும். புனிதத் தன்மையுடன் போற்றப்படவேண்டும். இந்த நான்கு வகைகளிலும் கடைசியாக கூறப்பட்டுள்ள மோக்ஷம்தான் மனித வாழ்க்கையின் லக்ஷியம். மற்றநாட்டவர்களை விட நம் நாட்டவர்களுக்கு இதுதான் சிறப்பு. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பது பெரியோர்களின் வாக்கு. நமது பிறவியைத் தொடங்கி அனைத்து கார்யங்களும் பரமேஸ்வரனுடைய அருளால் தான் நிகழ்கின்றன. எவ்வாறு உயிரினங்கள் பிறவியிலிருந்து கடைசி வரை ப்ராண வாயுவை ஸ்வாசிக்கின்றனவோ அதுபோல் ஈசனிடம் பக்தி, ஆன்மீக சிந்தனை வாழ்க்கை முழுவதும் நிறைந்திருக்கவேண்டும். இது தான் வேதங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

இத்தகைய ஆன்மீக சிந்தனை செழித்தோங்கி நிற்கத்தான் அனாதி காலமாக கோயில்கள் கட்டப்பட்டு வேதாகம சாஸ்த்ரங்கள் அறிந்த சிவாசார்ய பெருமக்களால் சாஸ்த்ரவிதிகளின்படி செவ்வனே பூஜை செய்யப்பட்டு வருகின்றன. வேதவிதிகளின் படியும், சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவையான ஆகமங்களின் விதிமுறைகளின் படியும் பூஜை முதலான சடங்குகள் நடத்தப்படுவதனால் மட்டுமே கோவில்களும், அங்கிருக்கு மூர்த்திகளும் சிறப்பு மிக்கவையாகவும், மகிமைக்கொண்டவையாகவும், நாட்டு மக்களுக்கு நலம் தருபவையாகவும் அமையும். நாட்டில் அமைதி, மகிழ்ச்சி, சுகபோகங்கள், தர்மம், ஆன்மீக சிந்தனை செழிக்க முறைதவறாது நடக்கும் பூஜைகளோடு விளங்கும் ஆலயங்கள்தான் காரணம். ஈசன் அருள் இல்லையென்றால் நம் மனதில் பக்தியே தோன்றாது.

"திவஸம் திவாஸார்தம் வா முஹுூர்த்தம் வா க்ஷணம் லவம்
நஹி அலப்த ப்ரஸாதஸ்ய பக்திர்பவதி சங்கரே!!

ஒரு நாளோ அல்லது அரை நாளோ கடைசி பக்ஷமாக ஒரு கணமோ, சிவபெருமானிடம் பக்தி ஏற்படவேண்டுமென்றால் இறையருள் இன்றி ஏற்படாது என்று மஹாபாரதம் கூறுகின்றது. பூஜை முறைகளும் சிவஞானமும் சைவாகமங்களை அறிவதன் மூலமாகத்தான் உண்டாகும்.

"பரமாப்த பரமேஸ்வர ப்ரணீதத்வேனைவ வேதாகமானாஞ்ச
ப்ராமாண்யம்

என சைவாகமங்களின் மகிமை சைவபரிபாஷை என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. சைவாகமங்கள் பல இருந்தாலும் வேத வழியை பின்பற்றுகின்ற ஆகமங்களைத்தான் சான்றாக எடுத்துக்கொள்ள வேண்டுமென காமிகாகமத்தின் கூற்று.

சைவாகமோபி த்விவித: ச்ரௌதோ (அ)ஸ்ரௌதஸ் ஸஸ்ம்ருத:
ச்ருதிஸாரமய: ச்ரௌத: ஸ்வதந்த்ர இதரோமத:

நாளடைவில் சர்யா, க்ரியா, யோக, ஞான என்ற பாதங்கள் அடங்கிய சைவாகமத்தின் நுணுக்கங்களை அறிந்த சிவாசார்ய பெருமக்களும், சான்றோர்களும் குறைந்து கொண்டே இருக்கின்ற இச்சூழ்நிலையில் ஆலயங்களுக்கு ஜீர்ணோத்தாரணம் போல் புத்துணர்ச்சி மிகமிக அவசியமான ஒன்று.

கல்லூரிகளிலும், பல்கலைகழகங்களிலும், புத்துணர்வு பயிற்சி என்னும் கருத்தரங்குகள் என்றும், சொற்பொழிவுகள் என்று பல நடத்தப்படுவது போல் சிவாசார்யர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கும் வகையில் பல கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், இளம் மாணாக்கர்களுக்கு பயிற்சி முதலியவை நடத்தப்படவேண்டும்.

இப்பெரும் முயற்சியில் மஹேஸ்வரனின் இச்சாசக்தி, ஞானசக்தி, க்ரியாசக்தி ஸ்வரூபினியான, சென்னையில் எழுந்தருளி பக்தர்களின் கற்பக வ்ருக்ஷமாக விளங்கும் ஸ்ரீகாளிகாம்பாளின் பரம பக்தரும், அம்பாளுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டவரும், சிவாசார்ய குல திலகம், சைவாகமக்கடல் சிவஸ்ரீ தி.ஸா. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களுடைய புத்திரமாமணிகள் சிவஸ்ரீ தி.ஸா. ஸதாசிவோம் சிவாசார்யர், சிவஸ்ரீ தி.ஸா.காளிதாச சிவாசார்யர் மற்றும் சிவஸ்ரீ டாக்டர் தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் அவர்களும், மிகுந்த ஆர்வம் கொண்டு ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் சைவாகம சொற்பொழிவுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துவது மட்டுமல்லாமல் பல சைவாகம நூல்களையும் அச்சிட்டு சைவாகம வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வருகின்றனர் என்பது மிகவும் போற்றத்தக்கது. வெறும் சொற்பொழிவுகள் அமைப்பதோடு நின்று விடாமல், காலம் காலமாய் நிலைத்து நிற்கவும் தலைச்சிறந்த சிவாசார்ய சைவாகம புலவர்களின் ஞானத்தாலும் கருத்துக்கட்டுரைகளாலும் இளையத்தலைமுறை மற்றும் பொதுமக்கள் அறிவதன் பொருட்டும் புத்தக வடிவமாக அச்சிட்டிருப்பது தங்கத்திற்கு வாசமும் சேர்வது போலாகும். சொற்பொழிவாற்றிய பன்னிரெண்டு புலவர்களும் பன்னிரெண்டு சிவாகம ஞானசூரியர்கள் ஆவர். இவர்களின் சொற்பொழிவுகள் கட்டுரைகள் ஆகிய கதிர்களின் ஒளியினால் இளம் சிவாசார்யர்களின் நெஞ்சத்தில் மலமாகிய அக்ஞானம் நீக்கப்பட்டு ஞானஒளி பிரகாசிக்கும் என நினைக்கிறேன்.

இவ்வனைத்து கட்டுரைகளையும் மிகவும் சிரமப்பட்டு தொகுத்து வழங்கிய ஆகமப்ரவீன, சிவாகமசார்வபௌம, வ்யாகரண சிரோமணி முதலிய பிருதங்களால் போற்றப்பட்ட தன்னிகரற்ற சைவாகம வித்வான் சைவாகம கலாசார கேந்திரத்தின் முதல்வர் ப்ரம்ம ஸ்ரீ சோமசேகர சிவாசார்யர் அவர்களின் இறைப்பணி மிக மிக பாராட்டத்தக்கதாகும். இந்நிறுவனங்களின் நிர்வாகிகளும் பரமேஸ்வரனின் அருள் பெற்று மேன்மேலும் தொண்டுபுரிய வேண்டும் என ஈஸ்வரனை ப்ரார்த்திக்றேன்.

சுபமஸ்து

அன்புடன்

Dr. N.V. தேவி பிரசாத் M.A., Phd.

Dr. N.V. Devi Prasad
Sahitya Siromani, M.A.,Ph.D.
PRINCIPAL
The Madras Sanskrit College
Mylapore, Chennai-600 004.

நூல் முகவுரை

சிவனருளால் சிவபுண்ணியச்செயல்கள் தழைத்திடும்பொருட்டு, சென்னை சிவாசார்யார் அறக்கட்டளை பல சமயத்தொண்டுகளைச் செய்வதுடன், ஞானவேள்வி-யாகிய ஆகமஞான உபதேசரூபமான சிறப்புச்சொற்பொழிவுஒன்றை மாதந்தோறும் நிகழ்த்திவருவது காலத்திற்குத் தேவையானதும், எதிர்காலத்திற்கு உதவக்கூயதுமாக உள்ளதால் போற்றுதற்கு உரியதாகஉள்ளது. சிவாசாரியர் குலபூஷணமாகவிளங்கிய ஸ்ரீ ஸாம்பமூர்த்திசிவாசார்யர் அவர்களின் குமாரர்கள் மாதம் ஒரு சிவாகமஅறிஞர்களை அறிமுகப்படுத்தி, கௌரவித்துவருவது சாலப்பொருத்தமான சிறப்புப்பணியாகஉள்ளது. இத்துடன் மாதந்தோறும் பேசப்படும் சிவாகமகருத்துக்களை ஆண்டுதோறும் மலராகத் தொகுத்து வெளியிட்டுவருவது எதிர்காலத்திற்கு உதவக்கூடிய, செயற்கரிய அறப்பணியாகிறது. இவ்விதம் நடப்பதில் மூன்றாம்ஆண்டான 2011-ல் நடைபெற்ற பன்னிருமாதபேச்சுகளின் கட்டுரைகளைவெளியிட, நூல்வடிவில் தொகுத்தளித்திடு-வதற்கு என்னைத்தேர்வுசெய்து பேச்சுக்கட்டுரைகளை அளித்தனர். அவைகள் கிரந்தம், நாகரம், தமிழ் ஆகியவற்றில் பலவகை எழுத்துக்களில் கைஏடுகளாகவும், ஒரு சிலகட்டுரைகள் மூலசான்றுகள் மட்டுமாகவும், சிலகட்டுரை தமிழ்உரை மட்டுமாகவும், சிலகட்டுரை கலந்தும்விளங்கின. மேலும், ஒரேவடிவில்இல்லாமல், பேச்சுப்பொருள்கள் பலவாறாக கருத்துசேமித்தவண்ணமாக, சிறுகுறிப்புகளாக முறைமாறியும் இருந்தன. இக்கேந்திரத்தில் முழுநேரபணியாளர்கள், கணினிஅறிந்தவர்கள், பணியில் இல்லாத-தாலும், சிலர் ஈடுபாடுஇல்லாமல் இருந்தமையாலும் இவற்றை, இருமொழியையும் ஒரேதமிழ்எழுத்தில் தட்டச்சுசெய்துஉள்ளோம். இதனால் சமஸ்கிருதம் அறிந்தவர்களும், அதனை அறியாதவர்களும், இதிலுள்ள சான்றுகளை எளிதில் அறிந்துகொள்ளமுடியும். மேலும், ஒரு தலைப்பில் விரிவாக பேசப்பட்டமையால், இக்கட்டுரைகள் பலநூல்களின் மேற்கோள்களையும், சான்றுகளையும் பெற்றுஇருப்பது, கல்விபயில்வோருக்கு மிகவும் பயனுள்ளதாக, அமைந்துஉள்ளது. இம்மலரில் ஒவ்வொரு கட்டுரைக்கான பேச்சுப்-பொருளும், சிறுசிறுஉட்பிரிகளின்கீழ், சிறுசிறுபகுகளில் சமயம் பற்றி அறிய ஆர்வமுள்ள-வர்களுக்கு ஏற்றவகையிலும், எளிதில் யாவரும் விளங்கிக்கொள்ளுமாறும், கட்டுரை-யாளரின்கருத்தும், நோக்கமும் சிதைவுறாமலும், கருத்துமாறாமலும், தலைப்புத்தொடர்பு உடையதாகவும், பலதலையங்கங்களில் தொகுத்து, பிரித்து, முறைப்படுத்திஉள்ளது சிறப்புஅம்சமாகும். இந்த வடிவஅமைப்பு ஆகமபாடசாலை மாணவர்களுக்கும்,

போதிக்கும்ஆசிரியர்களுக்கும், தமிழில் ஆகமகருத்துக்களின் எழுத்துத்தேர்வு, பேச்சுப்-போட்டி இவற்றிற்கு, வினாக்களை தயாரிக்கவும், விடைகளைஅறியவும், எளிதில் செய்தியை எடுத்துக்கையாளவும், பகுத்து, மனதில்பதித்துக்கொள்ளவும் மிகவும் ஏற்ற அமைப்பாகும் எனலாம். இந்துசமய ஆகமகருத்துக்களை எளியமுறையில் தமிழில் அறிய விரும்புவோருக்கு, இக்கட்டுரைத் தொப்புநூலானது அரியபலகருத்துக்களைப் பல்வேறு சான்றுகளுடன் அறியபெரிதும்உதவும் என்பதில் வேறுகருத்து இருக்கமுடியாது. கட்டுரையைஎழுதிஅளிக்காதவர்களின் பேச்சுப்பொருளும், பதிவிலிருந்து குறிப்பு எடுக்கப்பட்டு, குறைபடாவண்ணம், ஆண்டின் பன்னிருமாதகட்டுரைகளும் ஒரேவடிவில் பொருத்தமாகதொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் மும்முறை பிழைநீக்கத் திருத்தம் செய்யப்பட்டப்போதிலும், கணினிப்பதிப்பில் ஏற்படும் குறைகளால் ஏற்படும் சிலகுறைகளைக்காண்போர், பிழைநீக்கிப்பொருத்தருள வேண்டுகிறேன். சமஸ்கிருதத்திலும், ஆங்கிலம், பிரஞ்ச்சு முதலிய பிறமொழிகளிலும், பெரியநூல்கள் பல இருப்பினும் அவற்றின்பொருளை பட்டப்படிப்பு இல்லாத பாமரமக்களும், இந்துசமயத்தின் பலதரப்பட்டபொதுமக்களும் அவற்றை எளிதில் அறிந்திடஇயலாது. சமயநூலின்படியான சடங்குகளின் விளக்கத்தை நிகழ்ச்சிகளில் மட்டுமே அவ்வப்பொழுது விளக்கப்-படுவதால் அறியமுடியும். இக்குறையைப் போக்கிடவும், அறியபல ஆகமகருத்துக்களை தலையங்கமாகக்கொண்டு மூன்றுஆண்டுகளாக முற்றிலும், எளியதமிழில் கட்டுரை வடிவிலேயே இந்நூல் திட்டமிட்டுநடத்தப்பட்ட கட்டுரைகளின் திரட்டாக வெளியிடப்பட்டு உள்ளதால், இது இந்துசமயமக்கள் அனைவருக்கும் உதவிடும் எனலாம். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய, அறியவேண்டிய சமயசெய்திகள்நிறைந்த சிவஞானமாகிய அறிவுக்களஞ்சியமாக இந்தநூல்திகழும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வடிவமைத்துத் தொகுத்திட்டதில் பெருமிதமும், மகிழ்ச்சியும் கொண்டு, நூலும், சமயமும் சிறக்க வாழ்த்தி, நன்றி தெரிவித்து வணங்குகிறேன்.

இங்ஙனம்,
சமயப்பணியில் உள்ள,
வி. சோமசேகர சிவாசார்யர்
முதல்வர், S.K.V.K.சென்னை.

வாழ்க சீர்அடியாரெல்லாம்

உ
ஸ்ரீ காளிகாம்பாள் துணை

Vedantha Siromani, Vedantha Visharada
Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,

DIRECTOR
SWAMI SADASIVOM SIVAGAMA JNANA KENDRAM
(A unit of Sri Sambamurthy Sivacharyar Foundation)
E-mail : adisaiva@sivacharya.org

76/96 Ramaswamy Street, Muthialpet,
Chennai - 600 001.
✆: 0091-44 -2526 1320
Web: www.sivacharya.org

உ

ஸ்ரீ குருவருள் துணை

தொகுப்புரை

எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் பேரருளினால் எனது தந்தையார் தெய்வஸ்ரீ தி.ஸா. சாம்பமூர்த்தி சிவாசார்யரின் லக்ஷியங்களை, நானும் எனது சகோதரர்களும் தந்தையாரின் பெயரில் நிறுவிய தர்ம ஸ்தாபனங்களின் வாயிலாக நிறைவேற்றி வருகிறோம். எங்கள் குடும்பத்தாரின் பேராசான் K.A. ஸபாரத்ன சிவாசார்யர் அவர்கள், சைவாகமங்களை பற்றி ஆச்சர்யமாக கூறும் பொழுது இவை எல்லாம் எப்படி இவர் சொல்லுகிறார் இவ்வளவு விஷயங்கள் நமது ஆகமங்களில் இருக்கின்றனவா? இவற்றை எல்லாம் நாம் அறியமுடியுமா? என்ற கேள்வி சிறுவயதில் எனது மனதில் நிரம்பி இருந்தன. அவற்றிற்கான விடைகள் எனது ஆசார்யரான சிவஸ்ரீ V. சந்திரசேகர சிவாசார்யர் அவர்களின் தீக்ஷை விசேஷத்தினால் நல்ல ஒரு ஆசானாகவும், வழி காட்டியாகவும் சிவஸ்ரீ V. சோமசேகர சிவாசார்யர் அவர்கள் அமைந்தார். சிறுவயது முதற்கொண்டே எனது சஹோதரர் ஸ்வாமி ஸதாசிவோம் அவர்களின் வழிகாட்டுதளின்படி ஆலயங்களில் எங்களால் முடிந்த சிறு சிறு சேவைகளை செய்து வருவது வழக்கம். தற்போழுது ஆசானின் நல்வழி காட்டுதலினால் நாம் செய்யக் கூடிய ஒவ்வொரு க்ரியைக்கும் அர்த்தங்களும் பலன்களும் தெளிவாக புரிகின்றன. ஆதிசைவ பெருமக்களும் சைவ சமய அபிமானிகளும் தெளிந்து அறிந்து பயன்பெற கூடிய வகையில் எங்களது கேந்திரத்தின் சார்பாக மாதந்தோறும் நடைபெற்ற சிவாகம சொற்பொழிவுகளின் கட்டுரைகளை தொகுத்து அளிப்பதில் பெறு மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு காரணங்களால் சிலரால் கட்டுரைகளை அளிக்க முடியாமல்போனது. நானும் அடுத்த பதிப்பில் அதனை வெளியிடலாம் என கூறியபோது, எனது ஆசான் கட்டுரைகள் முழுமையாக இடம் பெறவில்லை எனில் மலரை ஆர்வமுடன் படிக்கக் கூடிய மாணவர்களுக்கும் அறிஞர்களும் ஏமாற்றம் அடைவார்கள் என்று எண்ணி அவர் சிரமம் பாராமல் விடுப்பட்ட கட்டுரைகளை எழுதி பூர்த்தி செய்தார். எங்களது அழைப்பை ஏற்று சிறப்பாக சொற்பொழிவு ஆற்றிய அனைத்து சிவாசார்ய பெருமக்களுக்கும் எனது ஆசானுக்கும் எங்களது அறக்கட்டளை சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

ஆசியுரை அளித்த சென்னை கோமளீஸ்வரன்பேட்டை சைவ மடாதிபதி சிவஸ்ரீ சீர்காழி சட்டநாத பாலசுப்ரமண்ய சிவாசார்ய ஸ்வாமிகளுக்கும், வாழ்த்துரை அளித்த எனது பெரிய தகப்பனர் சிவஸ்ரீ T.S. சச்சிதானந்த சிவாசார்யர்

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

Vedantha Siromani, Vedantha Visharada

Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,

DIRECTOR
SWAMI SADASIVOM SIVAGAMA JNANA KENDRAM
(A unit of Sri Sambamurthy Sivacharyar Foundation)
E-mail : adisaiva@sivacharya.org

76/96 Ramaswamy Street, Muthialpet,
Chennai - 600 001.
✆: 0091-44 -2526 1320
Web: www.sivacharya.org

அவர்களுக்கும், முன்னுரை அளித்த எனது ஆசார்யர் சிவஸ்ரீ V. சந்திரசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், மதிப்புரை அளித்து எங்களை கௌரவித்தது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் நாங்கள் ஆற்றக் கூடிய பணிகளுக்கும் உறு துணையாக இருப்பேன் என்று எங்களை ஊக்கப் படுத்திய மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத கல்லூரி முதல்வர் ப்ரம்மஸ்ரீ Dr. N.V. தேவிப்ரஸாத் அவர்களுக்கும், மஹாபாரதத்தில் பீஷ்ம பிதாமஹரை போன்று எங்களது அனைத்து காரியங்களுக்கும் தலைவராக வழி நடத்தி கொண்டு இருக்கும் எனது பெரிய தகப்பனார் சிவஸ்ரீ தி.ஷ. வாகீச சிவாசார்யர் அவர்களுக்தும் எனது நமஸ்காரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்புத்தகத்தை குறைந்த நேரத்தில் சிறந்த முறையில் கணினியில் தயார் செய்து கொடுத்த அம்பிகை `லேமினேஷன் நிறுவனத்திர்க்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது கேந்திரம் மேலும் மேலும் தந்தையாரின் லக்ஷியங்களை சிறந்த முறையில் நிறைவேற்றிட இதுகாலமும் எங்களுக்கு ஊக்கமளித்து உதவி செய்த அறக்கட்டளை சார்ந்தவர்களுக்கும் அனைத்து சிவநேய செல்வர்களுக்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். சொற்பொழிவுகளை சிறந்த முறையில் படமாக்கிய நாளைய சந்ததியினர், பெரியோர்களின் குரல்களை கேட்டும்படி பதிவு செய்த திரு. V.S. அர்ஜுன் குழுவினருக்கு நன்றியை பதிவு செய்து கொள்கிறேன். 2010 ஆண்டில் பேசிய அறிஞர்கள் உரையை தொகுத்து அளித்திட வாய்ப்பு அளித்த எனது ஸஹோதரர் திரு.காளிதாஸ சிவாசார்யருக்கு எனது நன்றிகள். திருத்தம் பார்ப்பதற்கு உதவிய G. ரமேஷ் சிவாசார்யர் D. அஸ்வத்தாமசிவம், V. விமலசிவம், C. வேங்கடராம சிவம் ஆகியோர்க்கும் மாதம்தோறும் சொற்பொழிவுகளை சிறப்பாக ஏற்பாடு செய்தும், அனைவருக்கும் தொடர்பு கொள்ள செய்தும் உதவிய திரு. V. சுப்பையா, R. விக்னேஷ் சிவம் அவர்களுக்கும் திரு. மஹேந்த்ரன் அவர்களுக்கும், திரு. M. விக்னேஷ் அவர்களுக்கும் ஒளி ஒலி அமைத்துக்கொடுத்த திரு. சீனி மற்றும் திரு கணபதி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய இக்காரியங்களை எல்லாம் பார்த்து ரசித்து சந்தோஷம் அடைந்து இருக்கவேண்டிய, எனினும் சூக்ஷ்ம ரூபத்தில் இருந்து ஆசீர்வதித்து வரும் எங்களது பேராசான் தெய்வத்திரு சபாரத்ன சிவாசார்யர் அவர்களுக்கும், எனது தந்தையார் தெய்வஸ்ரீ தி.ஷ சாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களுக்கும் எனது மூத்த சஹோதரர் தெய்வதிரு தி.ஷா. முனுசாமி சிவாசார்யர் அவர்களுக்கும் எனது குருநாதர் காஞ்சீபுரம் தெய்வத்திரு S. உமாபதி சிவாசார்யர் அவர்களுக்கும் இம்மலரை சமர்ப்பிக்கின்றேன். தோஷங்களை எங்களுக்கு தெரிவிப்பின் அடுத்த பதிப்பில் சிறந்த முறையில் அளிப்போம் என்று உறுதிஅளிக்கின்றேன்.

அண்ணாமலையார் அடிமை
தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
24/12/2011



உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஷட்திரிம்சத் தத்துவ ப்ரவிருத்தி விவரணம்

(36 தத்துவ செயல் முறை விளக்கம்)

ஆகமப்ரவீணர் & வ்யாகரண சிரோமணி.
வேலூர். சிவஸ்ரீ B. கனகஷண்முக சிவாசார்யர் எம்.ஏ.,
ஸ்ரீஜலகண்டேச்வரர் ஆலய ஆகமாசார்யர்.

முன்னுரை:

உலகங்களைப் படைக்கும்போது இறைவனானவர் இருவிதமான உலகங்களைப் படைக்கிறார். ஒன்று அர்த்தப்ரபஞ்சம், மற்றொன்று சப்தப்ரபஞ்சம் ஆகும். இதனை பொருளுலகம், சொல்லுலகம் என்றும் கூறலாம். வர்ணம், பதம், மந்திரம் ஆகியவை சொல்லுலகம் ஆகும். கலைகள், தத்துவங்கள், புவனங்கள் ஆகியவை பொருளுலகம் ஆகும். இந்த ஆறையும் தான் "ஷடத்வா" என்று கூறுகிறோம். இந்த ஆறில் ஒன்றாக விளங்குகின்ற "தத்வாத்வாவானது" முப்பத்தாறு தத்துவங்களால் ஆனது. "ஷட்திரிம்சத் தத்வ விக்ஞானம் நாந்யசாஸ்த்ரேஷு வித்யதே" என்ற சான்றின்படி, மற்ற சாஸ்திரங் களிலே முப்பத்தாறுதத்துவங்கள் சொல்லப்படவில்லை. நமது சைவசாஸத்திரத்திற்கே உரிய, ஒரு தனிச்சிறப்பு முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்டு விளங்குவது ஆகும். இந்த முப்பத்தாறு தத்துவங்கள் தோன்றும் முறை, (தத்துவோத்பத்தி விளக்கம்), அவைகளின் செயல்பாட்டுமுறை, அவைகளின் பயன்பாடு ஆகியவற்றையெல்லாம் பற்றி "ஷட்த்ரிம்சத் தத்வ ப்ரவ்ருத்தி விவரணம்" என்னும் தலைப்பில் எனது சிற்றறிவுக்கு எட்டியபடி கட்டுரையாகத் தொகுத்து எழுதும் முயற்சியினை மேற்கொள்ளுகிறேன்.

முப்பொருள்:

பதி, பசு, பாசம் என்னும் மூன்று பதார்த்தங்களைப் பற்றி ஆராய்கின்றது சைவசித்தாந்தம். "சைவாகமேஷு முக்யம் பதி பசு பாசா: இதி த்ரிதயம்" என்பது தத்வப்ரகாசநூலின் வாக்கியம். அந்த மூன்றுபொருள்களிலே அனாதிமலமுக்தனாகத் திகழ்பவன் சிவன். அனாதிமலபத்தனாகத் திகழ்பவன் பசுவாகிய ஆன்மா.

அனாதிமல பத்தத்வாத் கிஞ்சிக்ஞோ அணுர் மயோ தித: |
அனாதிமல முக்தத்வாத் ஸர்வக்ஞோ அஸௌ சிவஸ் தத: ||

என்கிறது கிரணாகமம். அந்த ஆன்மாவைப் பற்றி நிற்பவை பாசங்கள். ஆணவமலம், கர்மமலம், மாயாமலம் ஆகிய மூன்று மலங்களும் ஆன்மாவைச் சார்ந்து நிற்கின்றன.

ஆன்மாக்களின் மூவகைப் பிரிவு

ஆன்மாக்கள் மலசம்பந்தத்திற்கு ஏற்றவாறு மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுவார்கள். ஆணவமலம் மட்டுமுடையவர்கள் "விக்ஞானகலர்" எனப்படுபவர். ஆணவமலம், கன்மமலம் என்னும் இருமலம் உடையவர்கள் "ப்ரளயாகலர்" ஆவார்கள். ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் ஆகிய மூன்றுமலத்தோடு கூடியிருப்பவர்கள் "ஸகலர்" என்று சொல்லப்படுகிறார்கள்.

"மலயுக்தஸ்துதத்ராத்ய: மலகர்மயுதஸ் த்விதீய ஸ்யாத்
மலமாயா கர்மயுதஸ் ஸகல:"

என்பது தத்துவபிரகாசவாக்கியம்.

"விக்ஞானகல ஸம்ஞ பிரளயாகல ஸம்ஞகோ(அ)த ஸகலாக்ய: –
த்ரிவிதோஅயம் புருஷ: ஸ்யா தேகோத்தர பந்த ஸம்பந்தாத்"

என்று சைவரஹஸியம் என்னும் நூலிலேயும் கூறப்பட்டுள்ளது.

தத்துவங்களின் மூவகைப்பிரிவு

இந்த மூன்றுவகையான ஆன்மாக்களில் "விக்ஞானகலர்" சுத்தாத்வாவில் இருக்ககூடியவர்கள். "ப்ரளயாகலர்" மிச்ராத்வாவில் இருப்பவர்கள். "ஸகலர்" அசுத்தாத்வவாசிகள் ஆவார்கள். அவ்வாறே தத்துவங்களும், 1. சுத்த தத்துவங்கள், 2. சுத்தாசுத்த தத்துவங்கள், 3. அசுத்த தத்துவங்கள் என்று மூன்று வகைகளாக ஆகின்றன. சுத்தாசுத்ததத்துவங்கள் ஏழு. சுத்ததத்துவங்கள் ஐந்து, அசுத்த தத்துவங்கள் இருபத்துநான்கு, ஆக தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும். சுத்ததத்துவங்கள் சிவதத்துவம் என்றும், சுத்தாசுத்த தத்துவங்கள் வித்யாதத்துவம் என்றும், அசுத்ததத்துவங்கள் ஆத்மதத்துவம் என்றும் அழைக்கப்படும். சுத்ததத்துவங்கள் ஐந்தும், சிவதத்துவம் என்னும் பெயருடன் "ப்ரேரககாண்டம்" ஆக விளங்கும். போஜ யித்ருகாண்டம் சுத்தாசுத்த தத்துவங்கள் ஏழும் வித்யாதத்வம் என்ற பெயருடன் போககாண்டம் என்று விளங்கும். அசுத்ததத்துவங்கள் இருபத்துநான்கும் ஆத்மதத்துவம் என்னும் பெயருடன் "போக்ய காண்டம்" என்று சொல்லப்படும்.

தனக்குக்கீழ் உள்ள எல்லா தத்துவங்களுக்கும் காரணமாக இருந்து கொண்டு, அந்த தத்துவங்களையெல்லாம் ஆட்சிசெலுத்திக்கொண்டு விளங்குவதால், சுத்ததத்துவங்களுக்குப் பிரேரககாண்டம் என்று பெயர். ஆன்மாக்களுக்கு விஷயத்தை அறியக்கூடிய தன்மையை உண்டாக்கி, பிரகாசப்படுத்துவதால், சுத்தாசுத்ததத்துவங்களுக்கு போஜயித்ரு காண்டம் என்று பெயர். ஆன்மாக்களுக்கு அனுபவிக்கக் கூடிய விஷயங்களாக இருப்பதால் அசுத்ததத்துவங்களுக்கு போக்கியகாண்டம் அல்லது போககாண்டம் என்பது பெயராகும்.

அத தத்வ ஸமூகம் ச த்ரிவிதா ச்ருணு பார்வதி |
சதுர்விம்சதி தத்வாநாம் அசுத்தம் போக்யகாண்டகம் ||
ஆத்மதத்வ மிதி க்யாதம் வித்யாதத்வ மதச் ச்ருணு |
தத்வம் மிச்ர மிதி க்யாதம் போககாண்டம் ச ஸப்தகம் ||
சுத்தவித்யேச ஸாதாக்யம் சக்திஸ் சிவ மிதி ஸ்ம்ருதம் |
ப்ரேரகம் சுத்ததத்வாக்யம் ஸ்வதந்த்ரம் சிவ விக்ரஹகம் ||
அசுத்தம் போக்யகாண்டம் ச ஆத்மதத்வஸ்ய நாமகம் |
மிச்ரம் போஜயித்ருகண்டம் வித்யாதத்வார்த்த நாமகம் ||
ப்ரேரகம் சுத்தகாண்டம் ச சிவதத்வஸ்ய நாமகம் |

என்று சிந்தியாகமத்தில் தத்துவங்களின் பொதுவான பிரிவு கூறப்படுகின்றது.

ஐந்து சுத்தத்தின் கீழேழ் சுத்தாசுத்தம் மசுத்தந்
தந்திடும் புமான் கீழெண்மூன்றாய தத்துவஞ்சீவர்க்கு
வந்திடும் பிரேர காண்ட மருவு போசயித்திரத்தோடு
அந்த மில் அணுக்களுக்குப் போக்கிய காண்டமாமே”

என்று ஞானாவரண விளக்கம் என்ற நூலும் இதே கருத்தினை கூறுவதைக் காணலாம்.

தத்துவங்கள் முப்பத்தாறு

1. சிவதத்துவம் 2. சக்திதத்துவம் 3. சுதாசிவ தத்துவம் 4. ஈசுவர தத்துவம் 5. சுத்தவித்யாதத்துவம் என்னும் ஐந்தும் சுத்ததத்துவங்கள். 1. மாயா தத்துவம், 2. கால தத்துவம், 3. நியதி தத்துவம், 4. கலா தத்துவம், 5. வித்யா தத்துவம், 6. ராக தத்துவம், 7. புருஷ தத்துவம் ஆகிய ஏழு தத்துவங்களும் சுத்தாசுத்த தத்துவங்கள் அல்லது மிச்ர தத்துவங்கள் 1. பிரகிருதி தத்துவம், 2. குண தத்துவம், 3. புத்தி தத்துவம், 4. அஹங்கார தத்துவம், 5. மனஸ் தத்துவம், 6. ச்ரோத்ர தத்துவம், 7. த்வக் தத்துவம், 8. சக்ஷுஸ் தத்துவம், 9. ஜிஹ்வா

தத்துவம், 10. நாஸா தத்துவம், 11. வாக் தத்துவம், 12. பாணி தத்துவம், 13. பாத தத்துவம், 14. பாயு தத்துவம், 15. உபஸ்த தத்துவம், 16. சப்த தத்துவம், 17. ஸ்பர்ச தத்துவம், 18. ரூப தத்துவம், 19. ரஸ தத்துவம், 20. கந்த தத்துவம், 21. ஆகாச தத்துவம், 22. வாயு தத்துவம், 23. தேஜஸ் தத்துவம், 24. ஜல தத்துவம், 25. ப்ருத்வீ தத்துவம், ஆகிய இருபத்து நான்கு தத்துவங்களும் அசுத்ததத்துவங்களாகும். சொல்லப்பட்ட இவைகளை எண்ணிப் பார்த்தோமானால், இருபத்தைந்து வரும். ஆனாலும் அசுத்ததத்துவங்கள் இருபத்து நான்கு என்றுதான் சொல்லவேண்டும். என்ன காரணம்? பிரகிருதி தத்துவத்திற்கும் குணதத்துவத்திற்கும் அதிகபேதம் கிடையாது. ஆகையால் இரண்டையும் ஒன்றாகக் கணக்கிடவேண்டும். தத்துவ வரிசையில் குணதத்துவம் படிக்கப்பட்டாலும், கணக்கில்வராது. பிரகிருதி தத்துவத்திற்கும் குணதத்துவத்திற்கும் அதிகவேறுபாடு இல்லாததால், இரண்டையும் ஒன்றாகச்சேர்த்துதான் கணக்கிட வேண்டும், என்பது சித்தாந்தமாகையால் இரண்டையும் ஒன்றுசேர்த்து, இருபத்துநான்கு தத்துவங்கள் என்றுதான் சொல்லப்படவேண்டும். ஆகவேதான் நிர்வாணதீக்ஷையில் குணதத்துவத்திற்கு தனியாக புவனங்கள் சொல்லப்படவில்லை. ஸ்ரீ கண்டாதி புவனங்கள், பிரகிருதிதத்துவ குணதத்துவங்களுக்கு உண்டு, என்று இரண்டையும் சேர்த்தே சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த கருத்து,

ப்ரக்ருதேர் குணதத்வம் து வித்யேத நச வஸ்துத: |
ஸைவ த்ரிதா விபக்தா து ஸ்ரீகண்டேந மஹாத்மநா ||

என்று பௌஷ்கராகமத்திலும்

புருஷஸ்ய போகஹேதோர் ப்ரதானதோ விம்சதிர் பவேத் த்ரியதிகா |
யஸ்மாத் ப்ரக்ருதி குணாநாம் நாத்யந்தம் வஸ்துதோ பேத: ||

என்று தத்துவப்பிரகாசத்திலும் கூறப்படுவதைக் காணலாம்.

ஆகவே தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும்.

"சுத்தாநி பஞ்ச தத்வாநி தேஷு ஸ்மரந்தி சிவதத்வம் |
சக்தி ஸதாசிவ தத்வே ஈஸ்வர வித்யா தத்வே ச ||
பும்ஸோக்ஞ கர்த்ருதாத மாயாதஸ் தத்வ பஞ்சகம் பவதி |
காலோ நியதிஸ் ச ததா கலா ச வித்யா ச ராகஸ் ச ||
அவ்யக்தம் மாயாதோ குணதத்வம் ததனு புத்யஹங்காரௌ |
சேதொ தீ கர்மேந்த்ரிய தந்மாத்ராத் யநு பஞ்சபூதாநி ||

என்று தத்துவப்பிரகாசம் குணதத்துவத்தையும் சேர்த்து. தத்துவங்களைக் கணக்கிடுவதைக் காணலாம். இறைவன் சிருஷ்டியையும்,

சம்ஹாரத்தையும் செய்வதற்குக் காரணம் இறைவன் சிருஷ்டியையும் சம்ஹாரத்தையும் ஆன்மாக்களின்மேல் உள்ள கருணையினால்தான் செய்து அருளுகின்றார். ஆன்மாக்கள் அவரவர்செய்த கர்மபலனை அனுபவிக்கவேண்டும்.

"ப்ராரப்தம் போகதோ நச்யேத்" என்ற வசனத்தின்படி. கர்ம பலன் அனுபவிக்காமல் தீராது. கர்மபலனை அனுபவித்தால்தான் இருவினையொப்பாகிற மலபரிபாகம் ஏற்பட்டு அவர்கள் மோக்ஷத்தை அடையமுடியும். கர்மபலனை அனுபவிக்கச்செய்து, அவர்களை மோக்ஷமடையச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தினால் தான் கருணைப்பெருங்கடலாகிய சிவபெருமான் லோகசிருஷ்டியில் ஈடுபடுகின்றார். அதேபோல சம்ஸாரத்தில் சதா திரிந்து கொண்டிருக்கும் ஆன்மாக்கள் ஓய்வுகொள்ள வேண்டும். அந்த ஆன்மாக்கள் செய்த கர்மாக்கள் பக்குவமடைந்து பலனைத்தரும் நிலையை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் ஒடுக்குவித்தலாகிய ஸம்ஹாரத்தையும் செய்துஅருளுகின்றார். இதனை சித்தாந்தசாராவளி எனும் நூல்

"விச்ராந்த்யை பவிநாம் ச கின்னமனஸாம் பாகாய கர்மாவளேர்
மாயா வாக்பவ ஸம்பவாய குருதே சம்புர் மகா ஸம்ஹ்ருதிம் |
சிஷ்யந்தே பசவஸ் ஸசக்தி ரமலச் சம்புச் ச மாயா த்வயம்
ச்ருஷ்டியாத்யம் தயயா ததச்ச குருதே போகாய பும்ஸாம் புன: ||

என்று கூறும் இதே கருத்தினை தத்வபிரகாசமும்

மாயா புருஷஸ் சிவ இத் யெதத் த்ரிதயம் மஹார்த்த ஸம்ஹாரே |
அவசிஷ்யதே புனஸ் தத் ப்ரவர்ததே பூர்வவத் சிருஷ்டௌ ஸம்ஸாரே|
ப்ரபுக் க்ருபயா ஹ்யபின்னாநாம் நிகிலாநாம் ப்ராணிநாம் |
குருதே மஹார்த்த ஸம்ஹ்ருதி மேதேஷா மேவ விச்ராந்த்யை |
கர்ம விபாசந ஹேதோர் பசு தயயா புனரபீ ஹ பரமேச: |
சிருஷ்டிம் விதாய தேஷாம் கர்ம விபாசயதி தேஹ ப்ருதாம் ||

என்றுகூறும். ஆகவே, ஆன்மாக்கள் அனுபவிக்கவேண்டும் என்பதற்காகத்தான் சிருஷ்டியைச்செய்து கர்மபலனை பரமேஸ்வரன் அருளுகின்றார்.

தத்துவங்களைக் கருவிகளாகப் படைத்தல்.

அவ்வாறு லோகசிருஷ்டியில் ஈடுபடுகின்ற சர்வேச்வரனானவர் ஆன்மாக்கள் அனுபவிப்பதற்காக, தனு, கரண, புவன, போகங்களை சிருஷ்டிசெய்கிறார். தனு என்பது, அனுபவபிப்பதற்கு முக்கியமான பாஞ்சபௌதிகமான சரீரம், கரணம் என்பது, அனுபவிப்பதற்கு

சாதனங்களாக கருவிகளாக இருக்கக்கூடிய இந்திரியங்கள் முதலான தத்துவங்கள். புவனம் என்பது உலகம். போகம் என்பது அவ்வுலகத்தில் உள்ள அனுபவிக்கத் தகுந்த வஸ்துக்களை அனுபவித்தல் ஆகும். ஆன்மாக்கள் போகங்களை அனுபவிப்பதற்கு கருவிகளாகத்தான் தத்துவங்களை சிருஷ்டிசெய்கின்றார். இதனை

போகேந பரிணமயிதும் கர்மாணி கருணாநிதி: பதிஸ் ஸ்ருஜதி |
பாவம் தத்வம் புவநம் பூதம் ப்ராத்யயிக மபி ஸர்கம் ||

தத்வ பதவிளக்கம்

தத்துவம் என்றால் என்ன?

"தஸ்ய பாவ: தத்வம்" என்னும் வ்யுத்பத்தியினால் தத்துவ பதம் உண்டாகின்றது. "கடஸ்ய பாவ: = கடத்வம், படஸ்ய பாவ: = படத்வம்" முதலான கடபட தர்மங்களைச் சொல்லும் பதங்களை காண்கிறோம். தச்சப்தத்தோடுகூடிய, தத்துவபதம் போலவே, கடத்வம், படத்வம் முதலான அனேகபதங்கள் இருக்கின்றன. ஆகவே முப்பத்தாறு தத்துவங்கள்தான் என்று எப்படி? நிச்சயமாகக் கூறமுடியும். கடத்வம், படத்வம் முதலான சொற்களையும், தத்துவமாகக் கொள்ளவேண்டுமா? என்ற சந்தேகம் உண்டாகும். இவ்வாறு யாராவது கேட்பார்களானால் அவர்களுக்காகவே தத்துவபதத்தின் விளக்கத்தை, ஈசான குருதேவ பத்ததி இவ்வாறு கூறுகின்றது.

"ஷட்திரிம்ச தேவ தத்வாநீத் யேவம் கேந நியம்யதே |
தஸ்ய பாவஸ் ஸ்ம்ருதஸ் தத்வம் தத் கடாதௌ ச த்ருச்யதே ||
கஸ்சி தேவம் யதி ப்ரூயாத் தத்ர தத்வம் நிருஜ்யதே |

என்ற கேள்வியை எழுப்பி, தத்துவபதநிர்வசனத்தையும் கூறுகின்றது. தத்பாவம் என்று வ்யுத்பத்தியில் உள்ள தச்சப்தத்திற்கு புவனங்களில் பிரளயகாலம் வரையில் வியாபித்து நிற்கக்கூடியது என்பது பொருளாகும் என்று சிறப்பாகப் பொருள் கூறுகிறது.

தச்சப்தப் ப்ரக்ருதார்த்தே ஸ்யாத் த்வம் பதம் தஸ்ய பாவகம் |
ஸந்ததம் ச யத் ததத்வம் ச தத்வம் ஸ்தித மாப்ரளயாவதி ||

என்று ஈசான குருதேவ பத்ததியானது தத்துவபத விளக்கத்தினைக் கூறும். இதிலுள்ள "ததத்துவம்" மற்றும் "ஸந்ததத்வம்" என்னும் இரு சொல்லுக்கும் உள்ள பொருளை, அழகாக எடுத்துக்கூறி தத்துவ பத இலக்கணத்தை தத்வசித்தி எனும் நூலானது, வரையறுத்துச் சொல்லும்.

ததத்வாத் ஸந்ததத்வாச் ச தத்வாநீதி ததோ விது: |
ததத்வம் தேசதோ வ்யாப்தி: ஸந்ததத்வம் ச காலத: ||

லக்ஷாதி வ்யோமச வ்யாபி தத்வமாப்ரளயாத் ஸ்திதம் |
அன்யதா ஸ்தம்ப கும்பாத்ய மபி தத்வம் ப்ரஸஜ்யதே ||

என்பது தத்வசித்திவாக்யம். ஆகவே தேசத்தினாலும் காலத்தினாலும் ப்ரளயகாலம் வரையில் வியாபித்து நிற்கக்கூடியது எதுவோ அதுதான் தத்துவமாகும் என்றபடியால், கடத்வம், படத்வம் முதலான, கட, பட தர்மங்கள் அழியக்கூடியவைகள். ஆதலால் அவைகள் தத்துவங்கள் அல்ல. ஆகமாட்டா, என்பதை அறியவேண்டும். இதே கருத்தினை

ஆப்ரளயம் ப்ரதிஷ்டதி ஸர்வேஷாம் போகதாயி புவனாநாம் |
தத் தத்வ நாமதேயம் ந சரீர கடாதிகம் தத்வம் ||

என்று தத்துவப்பிரகாசமும் கூறும். இதனையே. "சார்ந்துயிர் போக மாரத் துன்னிச் சங்காரமட்டும் தோற்றுதத்துவங்கள்" என்று ஞானவரணவிளக்கமும் தத்துவங்களின் இலக்கணத்தைக் கூறும்.

படைக்கும் சிவனின் மூன்றுநிலை

சிவனுக்கு லயம், போகம், அதிகாரம் என்னும் மூன்றுநிலைகளும் உண்டு என்பது ஆகமங்களுடைய வாக்கு.

லய போகாதி காராக்ய த்ரி தத்வோக்த நிபந்தன: |
பதார்த்தப் பதி நாமா (அ)ஸௌ ப்ரதமப் பரிகீர்த்தித: ||

என்பது மதங்காகமத்தின் சூத்திரவாக்கியம் ஆகும்.

லயநிலை, போகநிலை, அதிகாரநிலை, என்றால் என்ன?

சிருஷ்டித்த அனைத்தையும் ஒடுக்கிக் கொண்டு இருக்கும் நிலையே லயநிலையாகும். சம்ஹாரத்திற்குப் பிறகு, உலக சிருஷ்டிக்கு முக்கிய உபாதானகாரணமாகிய, மாயையைக் காப்பது போகநிலையாகும். மறுபடியும் சிருஷ்டியில் ஈடுபடும்போது, படைப்பதில் தனது அதிகாரத்தைச் செலுத்துவது அதிகார நிலையாகும்.

மஹாசம்ஹார காலத்தில், மஹாமாயையாகின்ற பிந்துவில், அனைத்தும் அடங்கியிருக்கின்ற நிலையில், லயம், போகம், அதிகாரம் ஆகிய செயல்களும், அதில் அடங்கி இருக்கும். பிந்துவோடு கலக்கும் சிவசக்தியும் லயபோகாதிகாரமாக மூன்று பெயருடன் விளங்கும். சிவனும் சக்தியும் பிரிந்து இருப்பதில்லை. "ஆக்ஞயா ஸமவேதயா" என்ற வசனப்படி சக்தியானது சமவாய சம்பந்தத்தினாலே சிவனோடு சேர்ந்து இருக்கின்றது. ஆகவே அந்தசக்திக்கு ஏற்பட்ட லயபோகாதிகாரமான மூன்றுநிலைகளும், சிவனுக்கும் உண்டாகின்றது. உலகில், நெருப்பு கொளுத்துகிறது.

ஆனால் தேவதத்தன் கொளுத்துகிறான், என்பது உலகவழக்கு. இதில் கொளுத்தும் செயல் எதில் இருக்கிறது? நெருப்பில் இருக்கிறது. கொளுத்தும் செயல் தேவதத்தனிடம் இருக்கிறதா? என்றால் இல்லை. ஆனாலும் உபசாரமாக தேவதத்தன் கொளுத்துகிறான் என்றே சொல்லுகிறோம். அதுபோலவே லயாதி அவஸ்தைகள் பிந்துவில் இருந்தாலும், பிந்துவோடு கலந்த, சக்தியின்சம்பந்தத்தினாலே, சிவனுக்கு லயபோகாதிகார நாமங்கள் ஏற்படுகின்றன, என்று சித்தாந்தசாராவளி வ்யாக்யானத்தில், கூறப்பட்டிருக்கிறது. இதனை திரிலோசன சிவாசாரியார் அவர்கள்,

தத்ர க்ஷுப்தே பவேத் போக: பிந்தா வானந்த ரூபிணி |
க்ஷுப்தே (அ)திகாரோ தேவஸ்ய லயோ (அ)திக்ராந்த பிந்துக: ||
ஏகைவ கலு சித்சக்தி: சிவஸ்ய ஸமவாயிநீ |
த்ரிவிதோ (உ)பாதி ஸம்பேதாத் லய போகாதிகாரிணீ |
அதை தயாபி ஸம்பந்தா தேகோ தேவஸ் திரிதா பவேத் ||
சிவஸ் ஸதாசிவோ (அ) தீசோ லய போகாதிகாரவாந் |

என்று கூறுவார்கள்.

சிவதத்துவம். (முதலாவது தத்வம்)

மஹாப்ரளயகாலத்தில் ஏற்கெனவே உண்டான தனு, கரண, புவனங்கள் எல்லாம் பிந்துவில் ஒடுங்குகின்றன. அப்போது பிந்துவைக் கடந்து நிற்கின்ற சிவன், லயசிவன் என்னும் பெயரை அடைகின்றார்.

உபஸம்ஹ்ருத கார்யாத்மா யதா பிந்துர் வ்யவஸ்தித: |
ததா லயாஹ்வயம் தத்வம் சிவதத்வம் ததேவ ஹி ||

என்று பௌஷ்கராகமம் கூறும். (கேவல) தனித்த ஞானஸ்வரூபமாக இருக்கின்றசிவனே சிவதத்துவம் என்னும் பெயரை அடைகின்றார்.

வ்யாபக மேகம் நித்யம் காரண மகிலஸ்ய தத்வ ஜாதஸ்ய | ஞான
க்ரியா ஸ்வரூபம் சிவ தத்வம் ஜகது ராசார்யா: ||

என்று தத்வப்ரகாசம் சிவதத்வலக்ஷணத்தைத் கூறும். இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி ஆகிய மூன்றுசக்திகளும், சிவதத்துவத்தில் இருந்துகொண்டு, சிவனால் அதிஷ்டிக்கப்பட்டு, லோகசிருஷ்டியில் ஈடுபடுகிறது. ஆகையினால் பரமேச்வரன் அனைவருக்கும் அனுக்ரஹம் செய்யும் அதிகரணமாக இருக்கின்றார், இதனை

அஸ்மின் நிலீய நிகிலா: இச்சாத்யா: ஸ்வகம் கார்யம் |
குர்வந்தி தேந ததிதம் ஸர்வாநு க்ராஹகம் ப்ராஹு: ||

என்று தத்வப்ரகாசம் கூறுகின்றது.

சக்தி தத்துவம் (இரண்டாவது தத்துவம்)

உலகத்தை மறுபடியும் சிருஷ்டிக்கவேண்டும் என்ற, விருப்பம் உண்டாகும்போது, பரமேஸ்வரனின் முதல்பார்வையினால் உண்டாவது சக்திதத்துவமாகும். சிவதத்துவமும் சக்திதத்துவமும் வெவ்வேறு அல்ல ஒன்றுதான். இருந்தாலும் ஒன்றாக பரிணாமத்தை அடைகின்றது.

சிதசிதனுக்ரஹ ஹேதோர் அஸ்ய ஸிஸ்ருஷோர் ய ஆத்ய உன்மேஷ: |
தத் சக்தி தத்வ மபிஹித மவிபாகா பந்ந மஸ்யைவ ||

என்று தத்துவபிரகாசம் சக்திதத்துவ லக்ஷணத்தை கூறும்.

ஸதாசிவ தத்துவம் (மூன்றாவது சுத்ததத்துவம்)

சதாசிவதத்துவத்தை சிருஷ்டிக்கவேண்டும் என்று பரமேஸ்வரன் விரும்பியவுடனே, ஞானசக்தியும், கிரியாசக்தியும் அளவில் சமமாக இருந்துகொண்டு, செயல்படும்நிலையில் சிவன் போகாவஸ்தையை அடைகின்றார். சதாசிவதத்துவம் என்னும் பெயரையும் அடைகின்றார்.

ஞான க்ரியாக்ய சக்த்யோ ரபகர்ஷோத் கர்ஷயோ ரபாவேந |
யப் ப்ரஸரஸ் தம் ப்ராஹுர் ஸதாசிவாக்யம் புதாஸ் தத்வம் ||

என்று தத்துவப்ரகாசம் சதாசிவதத்துவ லக்ஷணத்தைக் கூறும்.

ஈசுவர தத்துவம் (நான்காவது சுத்ததத்துவம்)

ஈசுவரதத்துவத்தை சிருஷ்டிக்க வேண்டுமென்று விரும்பியவுடன், சிவனுடைய சக்தியானது, ஞானசக்தி குறைவாகவும் கிரியாசக்தி அதிகமாகவும் இருந்துகொண்டு செயல்படும். அப்போது சிவனே அதிகாராவஸ்தையில் ஈசுவரதத்துவம் என்னும் பெயரை அடைகிறார்.

நயக்பவதி யத்ர சக்திர் ஞானாக்யோ த்ரிக்ததாம் க்ரியா பஜதே |
ஈச்வரதத்வம் ததிஹ ப்ரோக்தம் ஸர்வார்த்த கர்த்ரு ஸதா ||

என்பது தத்வப்ரகாசத்தில் உள்ள ஈசுவரதத்துவ லக்ஷணமாகும்.

சுத்த வித்யா தத்துவம் (ஐந்தாவது சுத்ததத்துவம்)

சுத்தவித்யா தத்துவத்தை சிருஷ்டிக்க விரும்பும்போது சிவனுடைய சக்தியானது கிரியாசக்தி குறைவாகவும், ஞானசக்தி அதிகமாவும் இருந்துகொண்டு செயல்படும். அப்போது சிவன் அதிகாரவஸ்தையில் சுத்தவித்யா தத்துவம் என்னும் பெயரை அடைகிறார்.

ந்யக்பவதி கர்த்ரு சக்திர் ஞானாக்யோ த்ரேக மச்னுதே யத்ர |
தத் தத்வம் வித்யாக்யம் ப்ரகாசகம் ஞான ரூபத்வாத் ||

என்று தத்துவப்பிரகாசம் சுத்தவித்யாதத்துவலக்ஷணம் கூறும்.

தயோப் ப்ரஸரதோஸ் ஸாம்யே தத்வாத்மா ஸ்யாத் ஸதாசிவ: |
ஈசே (அ) திக க்ரியா சக்த்யா வித்யா ஞானா திரிக்தயா ||

என்று பௌஷ்கராகமம் சதாசிவாதத்துவ லக்ஷணம் கூறும்.

இந்த ஐந்து தத்துவங்களும் சிவதத்துவமாகவே சொல்லப்படுகின்றன. சக்தியின் வ்யாபாரபேதத்தினால்தான், ஐந்துதத்துவங்களாக பரிணமிக்கின்றது என்பதை

தத்வம் வஸ்துத: ஏகம் சிவஸம்ஞும் சித்ரசக்தி சத கசிதம்: |
சக்தி வ்யாப்ருதி பேதாத் தஸ்யைதே கல்பிதா: பேதா: ||

என்று தத்துவப்பிரகாசம் கூறுகின்றது. சிவதத்துவங்களே இவைகள். அத்துடன் காலமாகிற தத்துவம் சுத்ததத்துவங்களுக்கு இல்லாததினாலே முன்பின் தோற்றக் கிரமமும் கிடையாது. சக்தியின் குறைவு, அதிகம், சமம் என்னும் வ்யாபார பேதத்தினாலேதான், சாஸ்திரத்தில் முன்பின்முறை கற்பிக்கப்பட்டது.

பஞ்சாநாமப் ஏஷாம் ந ஹி க்ரமோ (அ) ஸ்தீஹ கால ரஹிதத்வாத்|
வ்யாபார வசாத் தேஷாம் விஹிதா கலு கல்பநா சாஸ்த்ரே ||

இதனை தத்துவப்பபிரகாசத்திலே காணலாம். இதே கருத்தினை

"ஞானமே ஆனபோது சிவன், தொழில் ஞானம் ஒக்கின்
ஈனமில் சதாசிவன் போப் ஈசனாம் தொழிலது ஏறின்
ஊனமேல் கிரியை வித்தை உருத்திரன் இலயம் போகம்
ஆனபேர் அதிகாரத்தோடு அதிகரணத்தன் ஆமே."

"வித்தையோடு ஈசர் சாதாக்கியம் சக்தி சிவங்கள் ஐந்தும்
சுத்த தத்துவம் சிவன் தன் சுதந்திர வடிவ மாகும்
நித்தமென்று ரைப்பார் காலம் நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலே"

என்று அருணந்தி சிவாசாரியர் விளக்குவார்.

மாயா தத்துவம் (முதலாவது மிச்ரதத்துவம்)

சுத்தாசுத்தாத்வாவிற்கு உபாதானகாரணம் என்று விளங்குவது மாயை எனும் தத்துவமாகும். பரமேஸ்வரர் அனந்தேஸ்வரரின் வ யிலாக மாயையைக் கலந்து, மாயையைக் கருவியாகக் கொண்டு தனு, கரண, புவனங்களை, ஸ்ருஷ்டிசெய்கின்றார். மாயையின் ஸ்வரூபம் சூஷ்மமாகவும், நித்தியமாகவும் இருக்கும். மாயையிலிருந்து தனு, கரண, புவனங்கள் எல்லாம் தோன்றுவதால் அவைகள் மாயேயம் என்றழைக்கப்படுகின்றன. காரியமான தனுகரணாதிகள் அசேதனங்கள். ஆகவே காரணமான மாயையும் அசேதனமானது. ஆன்மாக்களுக்கு மயக்கத்தையும், மோகத்தையும், அளிப்பதால் மாயைக்கு மோஹினீ என்று மற்றொரு பெயரும் உண்டு. இது மஹா ஸம்ஹாரகாலத்தில் எல்லா ஆன்மாக்களையும், தன்னுள்ளே அடக்கிக் கொண்டு விளங்கும்.

மாயாக்யம் சித்ரசக்த்யா பரிகத மகலம் கஷ்ட வர்த்மைக பீஜம் –
நித்யம் கர்மாந்தரோதி ஸ்வக்ருதி நிவஸநம் தத்க்ருதேர் வ்யாபகம்ச |
கார்யா(அ)சித்வ ப்ரகாசா தசித சிவகரம் மோஹகம் ஸ்வாப காலே-
ஸர்வாத்மா வாஸ மேவம் பரமபி ச ஸிதம் காரணம் போதகம் தத் ||

என்று மாயாதத்வலக்ஷணத்தை சிந்தாந்தசாராவளி எனும் நூல் கூறும். இந்த உலகத்தோற்றத்திற்கு விதை போன்றது மாயா தத்துவமாகும். விதையிலே சூக்ஷமமாகப் பிரித்து அறியமுடியாதபடி மரமானது எவ்வாறு இருக்கின்றதோ, அதுபோல சம்ஹாரகாலத்தில் மாயையில் கலாதிதத்துவங்கள் எல்லாம் ஒடுங்கி இருக்கின்றன.

நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற் கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய் புவன போகம் தனு கரணமும் உயிர்க் காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே”

என்பது சிவஞானசித்தியார் நூலின் இலக்கணக்கூற்று.

ப்ரளயே லீநதேஹஸ்ய கர்மிணோ ரணோ ரஹர்முகே தேஹாதேர்–
காரணம் மாயா சூக்ஷ்ம ஸ்தூலாத் மகஸ்ய து |
கலாதி க்ஷிதி பர்யந்த மவிபக்தி புரஸ்ஸரம் –
விபக்தத்வாத் யதா பீஜே ஸ்கந்த பர்ண பலாதிகம் ||

என்று பௌஷ்கராகமம் கூறும்.

கர்மாண் யவேக்ஷ்ய சம்பூர் மாயாம் விக்ஷோப்ய சக்திரீபி ஸ்வாபி: |
ப்ரதி புருஷம் போகார்த்தம் வ்யூம்ஷி கரணாநி சா(ஆ)தத்தே ||

என்பது தத்துவப்ரகாச நூலின் வாக்கியம் ஆகும்.

கலா தத்துவம் (இரண்டாவது மிச்ரதத்துவம்)

மாயையிலிருந்து உண்டாகக்கூடியது கலாதத்துவம். "கல" "க்ஷேபே" என்னும் தாதுவில் இருந்து கலை என்னும் சொல் உண்டாகும். "க்ஷேபம்" என்றால் ப்ரோத்ஸரணம் அதாவது நீங்கச்செய்தல், பிரகாசிக்கச்செய்தல் என்று பொருள். "கலா மல நிவர்த்தனாத்" என்று பௌஷ்கரம் கூறும். ஆன்மாவினுடைய கர்த்ருத்வ சக்தியாகிய செயலாற்றலைப் பிரகாசிக்கச்செய்வது இந்த கலாதத்துவத்தின் (செயல்) வ்யாபாரமாகும். ஸஹஜமான ஆணவமலத்தினால் மறைக்கப்பட்ட ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தினால் கர்த்ருத்துவசக்தி பிரகாசிக்காவிட்டால், விஷயத்தை அனுபவிக்கக்கூடிய செயலில் ஈடுபடாது, இருளாகஉள்ள ஒருபிரசேத்தில் ஒருமின்மினிப்பூச்சி வருமானால், அந்த (கடும்) இருளில், சிறிது வெளிச்சம் உண்டாகும். பாசிபடர்ந்த ஒருகுளத்தில் ஒருகல்லைப் போட்டால், அந்த நடுவில் பாசிவிலகி தண்ணீர் கொஞ்சமாகத் தெரியும். அதுபோல் ஆணவமலத்தினை கொஞ்சம்நீக்கி ஆன்மாவின் செயலாற்றலை பிரகாசிக்கச்செய்வது இந்த கலாதத்துவத்தின் செயலாகும்.

கர்த்ருசக்தி ரணோர் நித்யா விப்வீ சேஸ்வர சக்தி வத் |
தமச்சன்ன தயா (அ)ர்த்தேஷு நாபாதி நிரநுக்ரஹா |
ததனுக்ராஹகம் தத்வம் கலபாக்யம் தைஜஸம் ஹத: |
மாயாம் விக்ஷோப்ய குருதே ப்ரவ்ருத்யங்கம் பரம் ஹி தத் |
தேந ப்ரதீப கல்பேந ததாச்சன்ன சிதே ரணோ: |
ப்ரகாசயத் யேகதேசம் விதார்ய திமிரம் கனம் |
இத் யேத துபயம் விப்ரா: ஸம்பூயா நயவத் ஸ்திதம் |
போக க்ரியாவிதௌ ஜந்தோர் நிஜகு: கர்த்ரு காரகம் ||

என்பது மிருகேந்திர ஆகமவசனம்.

மாயாதஸ் ததநு கலா மலம் ந்ருணா மேகதஸ்து கலயித்வா |
வ்யஞ்ஜயதி கர்த்ருசக்திம் கலேதி தேநேஹ கதிதேயம் ||

என்பது தத்துவப்பிரகாசத்தின் கலாதத்துவலக்ஷண வசனமாகும்.

வித்யாதத்துவம் (மூன்றாவது மிச்ரதத்துவம்)

கலாதத்துவத்திலிருந்து உண்டாவது வித்யாதத்துவம். ஆன்மாக்களின் ஞானசக்தியை பிரகாசிக்கச்செய்து, விஷயங்களை அறிய வைப்பது, வித்யாதத்துவத்தின் செயலாகும். கலா தத்துவத்தினால் செயலாற்றல் முனைப்பாக இருந்தாலும், பொருளை அறிந்தால்தானே அனுபவிக்க முடியும். அவ்வாறு பொருட்களை அறிவதற்கு ஞானசக்தியை பிரகாசப்படுத்தி அறிவாற்றலை உண்டாக்கி பொருளை அறிந்துகொள்ள உதவுகின்றது இந்த வித்யாதத்துவம்.

ஏவம் வ்யக்த க்ரியா சக்திர் தித்ருக்ஷுர் கோசரந் த்ருச: |
வ்யஜ்யதே (அ) க்ரஹ ஸாபேக்ஷாம் ஸ்வயம் த்ரஷ்டு மசக்நுவன் |
ததர்த்தம் க்ஷோபயித்வேச: கலா மேவாஜநி க்ஷமாம் |
தத்வம் வித்யாக்ய மஸ்ருஜத் காரணம் பரமாத்மந: |
தேந ப்ராகாச ரூபேண ஞானசக்தி ப்ரரோசிநா |
ஸர்வ காரக நிஷ்பாத்ய மவைதி விஷயம் பரம் ||

என்று பௌஷ்கராகமம் கூறும். இந்த வித்யாதத்துவமானது ஞானசக்தியின் மறைப்பை உடைத்து, ஆன்மாக்கள் விஷயங்களை அறிவதற்கு காரணமாக இருக்கின்றது. ஆகவே இது ஆன்மாவிற்கு முக்கியமான கரணமாகும். (கருவி) என்ற கருத்தினை

"உத்புத்த கர்த்ருசக்தே: பும்ஸ: விஷய ப்ரதர்சந நிமித்தம் |
வித்யா தத்வம் சூதே ப்ரகாசரூபம் கலை வைஷா |
ஆவரணம் பித்வைஷா ஞானாக்யாயா: ஸ்வகர்மணா சக்தே: |
தர்சயதி விஷய ஜாதம் கரணம் ஸேஹாத்மநப் பரமம் ||

என்று தத்துவப்ரகாசம் வித்யாதத்வச்செயலைக்கூறும்.

காது முதலான இந்திரியங்களின் வாயிலாக, சப்தாதி விஷயங்களை அறிவது புத்தியாகும். அந்த புத்தியினாலேயே விஷயக்ஞானம் உண்டாகும்போது இந்த வித்யாதத்துவம் எதற்கு? என்ற கேள்வி உண்டாகும். ஆன்மாக்களுக்கு காரணமாகவும் போக்யமாகவும் இருக்கக்கூடிய ஒரேதத்துவம் புத்திதத்துவமாகும்.

"புத்திஸ் ஸா புருஷஸ்ய காதிகரணைஸ் ஸங்க்ராஹிகா போக்யகா"

என்பது சித்தாந்தசாராவளிக்கூற்று. அதாவது ஞானேந்திரியங்கள் வாயிலாக விஷயங்களை உள்வாங்கும்போது, புத்தி கரணமாகும். உள்வாங்கிய விஷயத்தோடு சுகதுக்காநுரூபமாக பரிணமித்து "நான் சுகமாக இருக்கிறேன். நான் சுகமாக இருக்கிறேன்" என்று தன்மயமாகவே ஆகி, பிரதிபிம்பம்போல பதிந்துவிடுவதால், புத்தி

போக்யமாகவும் (புசிக்கும் வஸ்துவாகவும்) ஆகும். ஆகவே சத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களையுடைய புத்தியானது சுகதுக்க ரூபமாக பரிணமித்து ஆன்மாவிற்கு போக்கியமாகவும் ஆகின்றது. அப்போது வித்யாதத்துவமானது, அதனை அறிவதற்கு கரணமாக ஆகின்றது. விஷயங்களை கிரஹிக்கும்போது, புத்தி கரணம், புத்தியினால் கிரஹிக்கப்பட்ட விஷயங்களோடு புத்தியையும் சேர்த்து அறிவதற்கு வித்தை கரணமாக ஆகின்றது. தத்துவப்பிரகாசம், இதனை

புத்திர் யதாஸ்ய போக்யா சுகாதிரூபா ததா பவேத் கரணம் |
வித்யை வம் கரணம் ஸயாத் விஷய க்ரஹணே புனர் புத்தி: ||

எனக்கூறும். ஆகவே, இந்திரியங்களால் உண்டான விஷயக்ஞானத்தை விஷயக்ஞானத்தோடு கூடிய புத்தி தத்துவத்தினால் ஆன்மா இதனை கிரஹிக்கின்றது. புத்தியை அறிகின்றான் என்பது தாத்பர்யமாகும். வித்யா என்பது,

ததோ வித்யா கலாதத்வா தபூத் போகார்த்த மாத்மன: |
கலயா கர்த்ரு யுக்தஸ்ய புத்திலக்ஷண கர்மண: |
ஆலோசநே யத் கரணம் ஸா வித்யா சிவசாஸநே |
சுகதுக்கச் சக்ஷூராத்யை: க்ரமேணார்த்தே நிதர்சிதே |
புத்யந் தைர் நிச்சிதார்தைஸ் தாம் புமான் ஸம்வேத்தி வித்யயா |

என்று மிருகேந்திராகமம் கூறும்.

ராகதத்துவம் (நான்காவது மிச்ரதத்துவம்)

அடுத்ததாக கலாதத்துவத்திலிருந்தே ராகதத்துவம் உண்டாகின்றது. ஆத்மாவில் இருக்கும் இச்சாசக்தியை வெளிப்படுத்த விஷயத்தில் அபிலாஷையை ஆசையை உண்டாக்குவது.

காலதத்துவம் (ஐந்தாவது மிச்ரதத்துவம்)

ஸ்ருஷ்டிக் கிரமத்தில் காலதத்துவம் முதலில் தோன்றியிருந்தாலும், ப்ரவ்ருத்தி க்ரமத்தில் கலைமுதலான தத்துவங்களுக்குப்பிறகு சொல்லப்பட்டிருக்கிறது.

கலாதிபிஸ் த்ரிபிஸ் தத்வை: ப்ரவ்ருத்தம் புருஷம் தத: |
லவ த்ருட்யாதிபிக் கால: கலயத் யாத்ம வ்ருத்திபி: ||

என்று மூன்றுதத்துவங்களுக்குப் பிறகுதான் காலதத்துவம் ப்ரவ்ருத்திக்கின்றது என்பதை பௌஷ்கராகமம் கூறும். தார்க்கிகர்கள் காலம் நித்யம் என்று கூறுவார்கள். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று காலம் அனேகமாக இருப்பதால் இது அநித்தியம் என்பது நமது சித்தாந்தம். "அசேதநந்வே ஸதி அனேகத்வாத்

அநித்யம்" அசேதனமாகவும் அனேகமாகவும் இருப்பதால் இது அநித்யமாகும் என்கிறது ஆகமம்.

நாநாவித சக்திமயீ ஸா ஜநயதி காலதத்வ மேவாதௌ |
பாவி பவத் பூத மயம் கலயதி ஜகதேஷ: காலோ (அ)த: ||

என்று தத்வப்ரகாசமும் கூறியுள்ளது.

காலோ பூதபவத் விபாவி விக்ருத: ஜாத: புரா (அ)த்ரேசிது: |
சக்த்யா க்ஷிப்ர சிராதி போத கலநாத் பும்ஸ: க்ஷிபத் யாதித: ||

என்று சித்தாந்தசாராவளியும் காலதத்துவ லக்ஷணம் கூறுகின்றது. ஆகவே க்ஷணம், லவம், த்ருடி முதலான பேதங்களால் ஆன்மாக்களுக்கு முகூர்த்தகாலம், க்ஷணகாலம் போன்ற வ்யவஹாரத்தை கால செய்ய ஆன்மாக்களுக்கு கருவியாக விளங்குவது காலதத்துவமாகும்.

நியதி தத்துவம் (ஆறாவது மிச்ரதத்துவம்)

"நியாமன காரணம்" நியதிதத்துவ லக்ஷணம் ஆகும். மாயையிலிருந்து உண்டாவது நியதிதத்துவம். ஆன்மாக்கள் அவரவர் செய்த கர்மபலன், அவரவர்களையே அடையுமாறு கூட்டிவைப்பது நியதிதத்துவத்தின் செயலாகும். ஆன்மாக்கள் அவரவர் செய்த கர்மபலனை அவரவர்களே அனுபவிக்க வேண்டும். ஒருவருடையது, வேறொருவருக்கு சேரக்கூடாது என்று தடுக்கவே, நியதிதத்துவம் உண்டாகின்றது. அத்துடன் அவனுக்கு கர்மபலனை அனுபவிக்க இஷ்டமில்லாவிட்டாலும் கூட அவனோடு அவன்செய்த கர்மபலனைச் சேர்த்துவைக்கின்றது. இதனை,

போகாயாபி ப்ருவ்ருத்தஸ்ய கலா வித்யாதி வ்ருத்திபி: |
கர்மணா மார்ஜிதாநாம் து பலாபஹரணே ஸதி |
தத்விநாசே ப்ரவ்ருத்தோ (அ)யம் நியதிச் சிவசாஸனே |
அபிபோகேஷ் வநிச்சந்தம் நியோஜயதி ஸா பலாத் |
ஸ்வார்ஜிதேஷ் வேவ நேஹாந்யை ரார்ஜிதேஷு கதாசன |
யுதி ஸா ந பவேத் அன்யே புஞ்ஜீரம் ஆர்ஜிதம் பரை: ||

என்று பௌஷ்கராகமம் கூறும்.

"நியதிர் நியமன ரூபா மாயாத: ஸாப் யனந்தரம் பவதி |
நியமயதி யேந நிகிலம் தேநேயம் நியதி ரித்யுக்தா ||

என்று தத்துவப்ரகாசம் நியதிதத்துவலக்ஷணத்தைக் கூறும். எள்ளில்தான் எண்ணெய்வரும். மண்ணில் வராது. நெல்லில்

தான்அரிசி வரும். பயறு முதலான தான்யங்களில் வராது. பசுவின் மடியில்தான் பால் வரும். மற்ற அவயங்களில் வருவதில்லை என்பது உலகத்தில் உள்ள நியதியாகும். அதுபோல அந்தந்த ஆன்மாக்கள் செய்த கர்மபலன் அந்தந்த ஆன்மாக்களைத்தான் சேரும். மற்ற ஆன்மாக்களைச் சேராது என்று சொல்ல ஒரு கட்டுப்பாடு அவச்யமாகும். அதுதான் நியதிதத்துவம். மற்றவர் சொத்தைத் திருடினால் குற்றமாகும். தண்டனை உண்டு என்று அரசநீதி இல்லாமலிருந்தால் என்னவாகும்? ஒருவர் செய்த விவசாயத்தின் பயனை வேறொருவர் அனுபவிப்பார். அதுபோல இந்த நியதிதத்துவம் இல்லையானால் ஒருவர்செய்த கர்மபலனை வேறொருவர் அனுபவிக்க நேரும். ஆகவே நியதிதத்துவம் அவசியம் அங்கீகரிக்கப்படவேண்டும் இக்கருத்தினை,

ராஜாக்ஞா மந்தரா யத்வத் புஞ்ஜதே தஸ்ய வ: பரை: |
ஆர்ஜிதாநி ததை வேயம் அஸாமஞ்ஜஸ்ய நாசிகா ||

(அஸாமஞ்ஜஸ்யம் = அநியாயம்) என்று பௌஷ்கராகமம் கூறும். ஆகவே ஆன்மாவானவன் கலாதத்துவத்தினால் செயலில் ஈடுபடும் தன்மையை அடைகிறான். கலாதத்துவத்தினால் விஷயக்ஞானத்தை அடைகிறான். வித்யா ராக தத்துவத்தினால் அறிந்த விஷயங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையை அடைகிறான். அப்போது ப்ரகிருதியில் இருந்து உண்டான குணம், புத்தி முதலான அந்தக்கரணங்களோடும், ச்ரோத்ராதி பாஹ்ய கரணங்களோடும் சேர்ந்து, பாஞ்சபௌதிகமான சரீரத்தினை அடைந்து, விஷயங்களை அனுபவிக்கின்றான்.

அவ்வாறு அனுபவிக்க வரும்போது, நியதிதத்துவத்தினால், தான் செய்த கர்மபலனையே அனுபவிக்க வேண்டுமாறு கட்டுப் படுத்தப்படுகிறான். அப்போது காலதத்துவமும் ஆத்மாவோடு இருந்துக்கொண்டு, காலத்தை அறிந்துகொள்ள உதவியாக இருக்கின்றது. இந்த கருத்தினை கிரணாகமம் கூறுவதாவது,

கலோத்பலித ஸாமர்த்ய: வித்யாக்யாபித கோசர: |
ராகோ (அ) பி ரஞ்ஜகத்வேந ப்ரதாநேந குணாத்மநா |
புத்யாதி கரணாநீக ஸம்பந்தாத் புத்யதே பசு: |
ததோ நியதி ஸம்ச்லேஷாத் ஸ்வார்ஜிதே து நியம்யதே |
காலோ (அ) பி கால ஸங்க்யாகே பவேத் ததனுஷங்கத: ||

என்று கலாதி தத்துவங்கள் ஆத்மாக்களுக்கும் பிரவ்ருத்திக்கும் முறையைக் கூறும்.

புருஷதத்துவம் (ஏழாவது மிச்ரதத்துவம்)

ஆன்மாவானது கலை முதலான ஐந்து தத்துவங்களோடு சேர்ந்து விஷயங்களை அனுபவிக்கும் தன்மையை அடையும்போது புருஷதத்துவம் என்னும் பெயரினை அடைகின்றது. "புரி சயனாத் புருஷ:" என்ற வ்யுத்பத்தியினால் உண்டாவது புருஷசப்தம் ஆகும். ப்ரகிருதி முதலான இருபத்துநான்கு தத்துவமயமான பட்டினத்தில் வசிப்பவன் என்னும் பொருளை உடையது புருஷ சப்தமாகும். ஒரு தத்துவமாகக் கொண்டு தத்துவக்கணக்கில் எடுத்துகொண்டு இருந்தாலும் புருஷதத்துவம் ஒரு தத்துவமல்ல. ஐந்து தத்துவங்களோடு சேர்ந்து இருக்கும்போது புருஷதத்துவம் என்னும் பெயரை ஆன்மாவானது அடைகின்றது. ஆகவேதான் புருஷதத்துவத்தின் புவனங்கள் ராகதத்துவத்திற்கு கீழே ஷடத்வந்யாசத்தில் காணலாம். எல்லாம் சொல்லப்பட்டுள்ளன.

தத்வை ரேபிக் கலிதோ போக்த்ருத்வ தசாம் யதா பகுர் நீத: |
புருஷாக்யதாம் ததா(அ)யம் லபதே தத்வேஷு கணநாம் ச ||

என்பது தத்வப்பிரகாசத்தின் புருஷதத்துவ லக்ஷண வாக்கியமாகும்.

ஏழு வித்யாதத்துவங்களின் செயல்படும் முறை

ஆன்மாக்கள் போகங்களை உணர்ந்து, அனுபவிக்கச்செய்ய இந்த ஏழுதத்துவங்களும் அவசியமாகின்றன. அறிவித்தால் மட்டும் அறியும் தன்மை கொண்ட ஆன்மாக்களுக்கு, இந்த தத்துவங்கள் அறியும் ஆற்றலை பிரகாசப்படுதெதுவதால் இவைகளுக்கு **வித்யாதத்தவங்கள்** என்பது பெயராகும்.

உயிர்களுக்கு **1. காலதத்துவம்** அந்தந்த காலத்தினை அறிவிக்கும். **2. நியதிதத்துவம்** கர்ம வினைப்பயன் கர்மாவைச் செய்தவனையே சேருமாறு நியமிக்கும். **3. கலாதத்தும்** ஆணவத்ததைச் சிறிது நீக்கி, கிரியாசக்தியை வெளிப்படுத்தும். **4. வித்யாதத்துவம்** ஞானசக்தியை வெளிப்படுத்தி, விஷயத்தை விளங்கச்செய்யும். **5. ராகதத்துவம்** இச்சாசக்தியை வெளிப்படச்செய்து, அந்தபொருளில் ஆசையைத் தோற்றுவிக்கும். **6. (ஆன்மா) புருஷதத்துவம்** இந்த ஐந்து பெயரையும் அடைந்து போகங்களை அனுபவிக்கும். **7. மாயாதத்துவமானது** நிலையற்றபொருளை, நிலையான பொருள்போலத் தோன்றச்செய்து மயக்கத்தை ஏற்படுத்தும். இந்த ஏழு தத்துவங்கள் செய்யும் செயல்பாட்டினை, உண்மை விளக்கம் எனும் நூலில்

"எல்லை, பல், புதுமை, எப்போதும் நிச்சயித்தல்,
அல்லல் தரும் கிரியை, ஆன்மாவுக்கு – ஒல்லை
அறிவு, ஆசை, ஐம்புலனும் ஆனவரும் காலம்
குறியா மயக்கு என்று கொள்"
என்று மனவாசகங்கடந்தார் கூறுவார்.

பிரகிருதி தத்துவம் (அசுத்தத்வஉபாதானம்)

கலாதத்துவத்திலிருந்து உண்டாகக்கூடியது பிரகிருதிதத்துவமாகும். உபாதானகாரணமாக விளங்குவது பிரகிருதிதத்துவமாகும். இதற்கு "பிரகிருதிமாயை" என்றும் "ப்ரதானம்" என்றும் "ப்ரயோக்த்ரீ" என்றும் பல பெயர்கள் உண்டு. ஸ்ரீகண்டருத்ரரின் வாயிலாக, பிரகிருதிமாயையைக் கருவியாகக் கொண்டு, அசுத்தாத்வாவை சிருஷ்டிசெய்பவர் பரமேஸ்வரனாவார். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களும் வ்யக்தமாகத் தெரியாமல் சூக்ஷ்மமாக அடங்கி இருப்பதனால் இதற்கு அவ்யக்தம் என்னும் பெயரும் உண்டு. பொன்னில் வளையல், தோடு முதலான ஆபரணங்கள் வ்யக்தமாகத் தெரியாமல் சூஷ்மமாக அடங்கியிருப்பதுபோல பிரகிருதியில் மூன்று குணங்களும் அடங்கியிருக்கின்றன.

புருஷஸ்ய ஹி போகார்த்தம் கலைவ தஸ்மாத் ப்ரஸூயதே (அ) வ்யக்தம் |
அனபி வ்யக்த குணத்வாத் அவ்யப தேச்யம் த தவ்யக்தம் ||

என்று தத்துவப்ரகாசம் பிரகிருதிதத்துவ லக்ஷணத்தைக் கூறும்.

சத்துவாதி குணங்களையுடைய குணதத்துவமே, சத்துவாதி குணங்களை சூக்ஷ்மமாக அடக்கிவைத்திருக்கும். பிரகிருதி தத்துவமாக ஆகாது. அசேதனமாகவும், அனேகமாகவும் இருப்பதால் குணதத்துவத்திற்கு காரணமான வேறொரு தத்துவம் தேவை யாகின்றது. முக்குணங்களையும் சூக்ஷ்மமாகத் தன்னிடத்திலே அடக்கி வைத்துள்ள பிரகிருதிதத்துவம் முக்குணங்களும் வ்யக்தமாகத் தெரியும்படி குணதத்துவத்தை உண்டு பண்ணுகின்றது. ரிஷிகளின் கேள்விக்கு சுவாமி பதில் கூறுவது போல வரும் பௌஷ்கராகம வாக்கியம்

குணாத் யவனி பர்யந்தம் தத்வ ஜாதம் யதோ (அ) பவத் |
ததவ்யக்த மிதி ப்ரோக்தம் க்ஷோப்யம் ஸ்ரீகண்ட விப்ரமை: ||
ரிஷய: குணா ஏவ ஸமாவஸ்தாம் ப்ராப்தா ப்ரக்ருதி ருச்யதே |
தத் கதம் ததுபாதானம் ப்ரக்ருதி: ப்ரதிபாத்யதே |

என்னும் ரிஷிகளின் சந்தேகத்திற்கு. பதிலாக

ஈச்வர: ந குணாநாம் ஸமாவஸ்தா ப்ரக்ருதிச் சிவாசஸநே |
அசேதநத்வாத் அனேகத்வாத் குணாநாம் முனிபுங்கவா: ||
த்ருஷ்டம் காரணபூர்வம் து தத்து ப்ரக்ருதி ஸங்கதம் |

என்று வருகின்றது.

குணதத்துவம்

பிரக்ருதிதத்துவத்திலிருந்து முக்குணங்களோடு கூடி குணதத்துவம் உண்டாகின்றது. நிர்மலமான உருவம்கொண் சத்துவ குணத்தின் வ்யாபாரம் ப்ரகாசரூபமாக அனைத்தையு அறிவிக்கும் செயலாகும். சலஸ்வபாவம்கொண்ட ரஜோகுணத்தி வ்யாபாரம் செயலில் ஈடுபடுதல் ஆகிய பாரமாயிருத்தல் ஆகும். தமே குணத்தின் செயல் சோம்பலாக இருப்பதாகும். "ப்ரக்யா வ்யாபா நியமரூபம்" என்று வரும். இந்த மூன்றுகுணங்களும் ஆத்மாவி இருந்துகொண்டு, சுகதுக்காதிகளை உண்டாக்கும். சத்துவகுண சுகத்தை உண்டாக்கும். ரஜோகுணம் துக்கத்தை உண்டாக்கும். தமே குணம் மயக்கத்தை உண்டாக்கும். இதனை தத்துவப்ரகாசம்

அவ்யக்தாத் குணதத்வம் ப்ரக்யா வ்யாபார நியம ரூப மிஹ |
ஸத்வம் ரஜஸ் தமோ (அ) பி சுக துக்கே மோஹ இத் யபி ச ||

என்று குணதத்துவலக்ஷணத்தைக் கூறுகின்றது.

புத்தி தத்துவம்

குணதத்துவத்திலிருந்து புத்திதத்துவம் உண்டாகின்றது. இது வெள்ளிதான் கிளிஞ்சல் அல்ல என்று நிச்சயமான அறிவுபோல சப்தாதி விஷயங்களில் பகுத்துஅறியும் நிச்சயமான அறிவைக்கொண்டு விளங்குவது புத்திதத்துவமாகும்.

"பாவயந்தி யதோ லிங்கம் ததோ பாவா: ப்ரகீர்த்திதா:" என்ற பௌஷ்கரவசனப்படி ஆன்மாவிற்கு காலத்தை அதாவது பிரகாசத்தை ஏற்படுத்தக் கூடியவைகள் [4]பாவங்களாகும். புத்தியில் பதிந்து இருக்கக்கூடியவைகளாவன, தர்மாதிகள் எட்டும் [4]பாவங்களாகும். முக்குணங்களாகின்ற குணத்தில் இருந்து உண்டாவதால் இதுவும் முக்குணங்களைக் கொண்டதாக அமையும். சாத்துவிக புத்தியின் பாவங்கள் தர்மம், ஞானம், வைராக்யம், ஐஸ்வர்யம் ஆகிய நான்குமாகும். அதர்மம், அக்ஞானம், அனைச்வர்யம் என்னும் மூன்றும் தாமஸபாவங்களாகும். அவைராக்யம் ராஜஸபாவமாகும்.

பவதி குணத்ரயதோ தீர் விஷயாத் யவஸாய ரூபிணீ சேஹ |
ஸாபி த்ரிவிதா குணத: ப்ரோக்தா கர்மானு ஸாரேன ||

என்று தத்துவப்ரகாசம் புத்திலக்ஷணம் கூறும். அவரவர் செய்த கர்ம வினைக்கு ஏற்றவாறு புத்தியும் மூன்றாக அமையும். முன் ஜன்மத்திலே புண்ணியம் செய்தவனாகில் அவனுக்கு சாத்துவிகமான புத்தியாகும். பாவம்செய்தவனாகில் ராஜஸபுத்தியாகும். புண்ணியம்பாவம் இரண்டையும் கலந்துசெய்திருப்பானேயாகில் அவனுக்கு தாமச புத்தியாகும்.

ஆன்மாவானது புத்தியோடு சேருகின்றது. புத்தியானது இந்திரியங்களோடு சேருகின்றது. இந்திரியங்கள் விஷயங்களோடு சேருகின்றது. அப்போதுதான் ஆத்மாவிற்கு விஷயஞானம் ஏற்படுகின்து. புத்தி விஷயங்களோடு சேர்ந்து, கண்ணாடியில் பிரதி பிம்பம் போல படிந்துவிடுவதால், ஆன்மாவிற்கு போக்யமாகவும் ஆகின்றது. ஆகவேதான் விஷயங்களை கிரஹிக்கும், விஷயமாக போக்யமாகவும் புத்தி செயல்படும் என்பதனை "ஸங்க்ராஹிகா போக்யகா" என்று சித்தாந்தசாராவளி கூறும். ஐம்பதுவகையான ப்ரத்யயங்களும் புத்திக்கு தர்மாதிபாவங்களால் உண்டாகின்றன. "ஸப்ரத்யயா பாவகா" என்று சித்தாந்தசாராவளி கூறும்.

அஹங்கார தத்துவம்

புத்திதத்துவத்திலிருந்து உண்டாவது அஹங்காரதத்துவம் ஆகும். நான் அறிகிறேன், நான் செய்கிறேன் என்று தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ளும் எண்ணத்தைத் தருவது அஹங்கார தத்துவமாகும். அது 1. ஜீவனாஹங்காரம், 2. ஸம்ரம்பாஹங்காரம், 3. கர்வாஹங்காரம் என்று மூன்றுபாகமாகப் பிரிவை உடையது.

1. "அஹம் கரோமி" = அதாவது நான் செய்கிறேன் என்பது "ஸம்ரம்பாஹங்காரம்" 2. "அஹம் ஜீவாமி" = அதாவது நான் உயிருடன் இருக்கிறேன் என்பது "ஜீவனாஹங்காரம்" 3. "ப்ரபலோஸ்மி ரூபவானஸ்மி" = அதாவது நான் பலசாலியாக இருக்கிறேன். என்பது "கர்வாஹங்காரமாகும்" அழகனாகஇருக்கிறேன். இந்த வாக்கியங்களைப் பார்த்தோமானால், தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டும் தனதுசெயலை, முன்னிலைப்படுத்திக்கொண்டும், தன்னிடமுள்ள குணத்தை முன்னிலைப்படுத்தித்கொண்டும் அஹங்காரதத்துவம் செயல்படுவதைக் காணலாம்.

இந்த அஹங்காரதத்துவம் இருந்தால்தான் ஆன்மா விஷயங்களை அனுபவிக்கமுடியும். ஏனென்றால் ஆன்மாவானது குணமில்லாதது. சேயல் இல்லாதது. ஊதாஸீனஸ்வபாவம் கொண்டது. அறிவித்தால் மட்டுமே அறியும் தன்மையைக் கொண்டது.

அசேதநோ விபுர் நித்ய: குணஹீநோ (அ) க்ரியோ (அ) ப்ரபு: |
வ்யாகாத போகசக்திச் ச போத்யச் சோத்யோ (அ)கல: பசு: ||

என்று ஸ்வாயம்புவாகமம் ஆன்மலக்ஷணத்தைக்கூறும். ஆகவே ஆன்மாவானது கேட்பதுஇல்லை, பார்ப்பதுஇல்லை, செயலில் ஈடுபடுவதும் கிடையாது. அப்போது இந்த அஹங்கார தத்துவமானது காது முதலான இந்திரியங்களால் உண்டான சப்தாதிகளையும் புத்தியினால் உண்டான ஞானத்தையும், நான் பார்க்கிறேன். நான் செய்கிறேன். நான் அறிகிறேன் என்னும் போதத்தோடு ஆன்மாவைச் சேர்க்கின்றது.

ஸ்யாத் த்ரிவிதோ (அ) ஹங்கார: ஜீவன ஸம்ரம்ப கர்வ ரூபோ (அ)யம் |
ஸம்பேதா தஸ்ய ஸதோ விஷயோ வ்யவஹார்யதா மேதி ||

என்று தத்துவப்ரகாசம் அஹங்காரலக்ஷணம் கூறும்.

முக்குணங்களின் சம்பந்தத்தால், சாத்துவிக, ராஜச, தாமஸமாகப் பிரிந்த இந்த அஹங்காரதத்துவமானது. தைஜஸாஹங்காரம், வைகாரிகாஹங்காரம், பூதாதிகாஹங்காரம் என்னும் பெயர்களோடும் விளங்கும். அதாவது சாத்துவிகாஹங்காரம், தைஜஸாஹங்காரம், பூதாதிகாஹங்காரம் எனவும் அழைக்கப்படும். சத்துவாதி குணங்களின் குறைவு மிகுதியாலே இப்படிப்பட்ட பெயர்வித்தியாசத்தை அடைகின்றது. இந்தகருத்தை

ஸ ச த்ரிவித உத்திஷ்ட: ப்ரதமஸ் தத்ர தைஜஸ: |
வைகாரிகோ த்விதீய: ஸ்யாத் ததா பூதாதிக: பர: |
ஸத்வே நோத்க்ருஷ்ட பாகோ (அ) ஸௌ ஸதைஜஸ இஹோச்யதே|
ஐவக்ருதோ ரஜஸோத்க்ருஷ்ட: பூதாதிஸ் தமஸாதிக: ||

என்று பௌஷ்கராகமம் கூறும்.

ஸாத்விக ராஜஸ தாமஸ பேதேந ஸஜாயதே புனஸ் த்ரேதா |
ஸச வைகாரிக தைஜஸ் பூதாதிக நாமபிஸ் ஸமுச்வசிதி ||

என்று தத்துவப்பிரகாசம் அஹங்காரதத்துவ லாக்ஷணம் கூறும்.

மனஸ்தத்துவம்

முன்புசொன்ன மூன்றுவிதமான அஹங்காரங்களில், தைஜஸஹாங்காரத்திலிருந்து மனஸ்தத்துவம் உண்டாகின்றது. இந்திரிய விஷயங்களை ஆன்மா அறிவதற்கு கருவியாக இருக்கக்கூடியது மனஸ்தத்துவம். கண் ஒரு பொருளை பார்த்துக்கொண்டிருந்தாலும் மனம்சேராவிடில் இது இன்னபொருள் என்னும் ஞானம் உண்டாகாது. மனம் வேகமாக சஞ்சாரம் செய்யக்கூடியது. ஆகவேதான் ருசி, வாசனை, அழகு முதலான அனேக தன்மையுள்ள ஒரு பொருளை அனுபவிக்கும்போது, அந்தந்த விஷயங்களை கிரஹிக்கும் கண் முதலான இந்திரியங்களில் வேகமாகச்சென்று ருசி, வாசனை, உருவம் முதலானவற்றை அறிவு உண்டாக்குகின்றது. நூறு தாமரைஇதழ்களில் க்ஷணகாலத்தில் ஊசியினால் துளை செய்துவிட முடியும். அதுபோல் சூக்ஷ்மகதியினாலே ஒரேசமயத்திதல் எல்லாஇந்திரியங்களிலும் மனம் சஞ்சரித்து விஷயங்களை அறியக்காரணமாக இருக்கின்றது. இதனை

"தேவ ப்ரவர்த்தகம் சீக்ரசாரி ஸங்கல்பதர்மி ச"

என்று மிருகேந்திரம் மனஸ்தத்துவத்தைக்கூறும். தாமரை இதழ்களில் ஊசியானது ஒரேசமயத்தில் துளையிடுவது போலத் தோன்றுகிறது. அதுபோல இந்திரியவிஷயங்களை ஒவ்வொன்றாக அறிவித்தாலும் ஒரேசமயத்தில், அறிவிப்பதுபோலத் தோன்றுகிறது. இது மனம் சஞ்சரிப்பதால்தான் சாத்தியமாகும். இதனை வேகமாக

ஞானம் ததக்ஷ ஸம்யோகாத் தத்க்ரம யோகிதயா க்ரமாத் |
ததாப் யாபாதி யுகபத் நச ஸஞ்சரணாத் ருதே ||

என்று மிருகேந்திராகமம் கூறும்.

ஆன்மா, இந்திரியங்கள், விஷயங்கள், எல்லாம் இருந்தாலும், மனம் சம்பந்தப்படாவிட்டால் விஷயக்ஞானம் உண்டாவதில்லை. மனமானது இந்திரியங்களோடு சேர்ந்துகொண்டு விஷயத்தை அறிவிக்கும். அத்துடன் ஆத்மாவிற்கு உள்ளேயும் ஸங்கல்பரூபமாக இருக்கும். ஆகவேதான் மனஸ் அந்தக்கரணங்களின் ஒன்றாகவும் இருக்கும். அதேசமயம் ஆன்மாவிற்கு உள்ளே ஸங்கல்பரூபமாக எண்ணம் ரூபமாகவும் விளங்கும்.

ஒரு பசுமாட்டைப் பார்த்துவிட்டு, இது பசுமாடு என்று அறிந்தபிறகு, வேறொரு சமயம் பசுமாட்டைக் காணும்போது, முன்பு அறிந்தோமே அதே பசுமாடு என்று அறிந்துக்கொள்ளும் செயல், மனமானது எண்ண

வடிவில் ஆத்மாவில் பதிந்துவிடுவதால் ஏற்படுகின்றது. இதனை

கிஞ்ச ஸாஸ்நாதி மத்பிண்டே கோசப்தம் அனுபூய யத் |
பூயஸ் தத் ஸத்ருசே த்ருஷ்டே தச்சப்தோச்சார ஹேதுகம் ||
தந் மனக் கத்யதே தந்த்ரே விகல்ப ப்ரத்யயாத்மகம் |

என்று பௌஷ்கரம் கூறும்.

ஆகவேதான் அந்தக்கரணமாகவும், இந்திரியங்களுக்கு அதிஷ்டானமாகவும் இருவிதமாகச் செயல்படும் இதனை (மனதை)

த்விதா(அ)திகாரி தச் சித்தம் போக்துர் போகோபபாதகம் |
பஹிஷ்கரண பாவேந ஸ்வோசிதேந யதஸ் ததா ||
இந்திரியாணாந்து ஸாமர்த்யம் ஸங்கல்பே நாத்மவர்திநா |
கரோத் யந்தே ஸ்திதம் பூய: தேநாந்தக்கரணம் மன: ||

என்று மதங்கஆகமத்தில் வருகின்றது.

ஞானேந்திரியங்கள் (அறிவு புலன்கள் ஐந்து)

தைஜஸாஹங்காரத்தில் இருந்து மனஸ்தத்துவம் உண்டான பிறகு ஞானேந்திரியங்களும் உண்டாகின்றன.

ச்ரோத்ரம் த்வக் சக்ஷுர் ஜிஹ்வா ச நாஸிகேந்த்ரிய பஞ்சகம் |
ச்ரோத்ரேண க்ருஹ்யதே ச்ப்த: ஸபர்சஸ் து ஸ்பர்சநேந ச |
ரூபஸ்ய க்ராஹகம் சக்ஷு: ரஸநாயா ரஸே மதி: |
க்ராணேந்திரியந் து கந்தஸ்ய க்ராஹகம் பரிகீர்திதம் ||

என்று ஞானேந்திரியங்களைக் காமிகம் கூறும். 1. சுரோத்ரம் 2. த்வக், 3. சக்ஷு, 4. ஜிஹ்வா, 5. க்ராணம் இவை முறையே 1. செவி 2. தோல் 3. கண் 4. நாக்கு 5. மூக்கு எனும் ஐந்தும் அறிவுப்புலன்கள் அதாவது ஞானேந்திரியங்கள் எனப்படும். இந்த ஐந்து இந்திரியங்களும் சப்தம், ஸ்பரிசம், ரூபம்,ரஸம், கந்தம் அதாவது முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமாகிய விஷயங்களை கிரஹிக்கும். ஆகவே காது முதலான இந்திரியங்களுக்கு ஓசை முதலானவை விஷயங்களாகும். இந்த விஷயங்களை அறிவதே காது முதலான இந்திரியங்களின் வியாபாரமாகும். காது முதலான கருவிகள் ஐந்தும் மனதோடு கூடிநின்று சப்தம் முதலான விஷயக்ஞானத்தை ஆன்மாவிற்கு உண்டாக்குகின்றது.

புத்யக்ஷாணி க்ஷீ;ரோத்ரம் த்வக் த்ருக் ஜிஹ்வா ச நாஸா ச |
கிராஹ்யாஸ் தேஷாம் சப்த: ஸபர்சோ ரூபம் ரஸச் ச கந்தச் ச |
இத் யேதேஷாம் விஷயா: க்ரமேண பஞ்சாபி பஞ்சாநாம் |
சப்தாதீநாம் து க்ரஹணம் வ்யாபாரப் பரிகீர்த்தித: |

க்ரமேணேஷாம் என்பது தத்துவபிரகாசவசனம். ஆகவே காதுகளுக்கு சப்தம் விஷயமாகும். சப்தத்தை அறிவதே காதுகளின் வ்யாபாரமாகும் என்பது போல, மற்ற இந்திரியங்களுக்கும் அறியவேண்டும். இந்திரியங்கள் என்றால் என்ன? கண், காது முதலான அவயங்களே இந்திரியங்களா? என்றால் கிடையாது. நமக்குப் புலனாகும் கண், காது முதலான அவயங்களுக்கு வேறாக அவற்றின் சக்தியாக விளங்குவதே இந்திரியங்களாகும். கண்கள் இருந்தாலும் குருடனுக்கு அவனுடைய கண்கள் உருவத்தை காட்டுவதிலவ்லை. காதுகள் இருந்தாலும் செவிடனுக்கு அவனுடைய காதுகள் ஓசையை அறிவிப்பதில்லை. ஆகவே அவயங்களுக்கு வேறாக இந்திரியங்களில் இருக்கும் சக்தியே இந்திரியமாகும். இதனை

ச்ரோத்ராத்யம் விக்ரஹாங்கம் ஸ்வவிஷய நிநத ஸ்பர்ச ரூபாதி போதான்–
சித்தர்த்தம் கர்த்ருபாவா னுஸரணபலத: பஞ்சகம் நுக்கரோதி |

என்று சித்தாந்தசாராவளி கூறும்.

புத்தீந் திரியாணி கத்யந்தே ச்ரோத்ரம் த்வக் சக்ஷுரேவ ச |
ஜிஹ்வா க்ராணம் ச பஞ்சேதி சுப்ரஸித்தாநி தாநி து ||
ப்ரத்யக்ஷ விஷயத்வேன தேஷாம் ஸித்தேர் ந யுக்தய: |
கத்யந்தே தாந் யஹங்காராத் உபஜாதாநி ஸாத்விகாத் ||

என்று பௌஷ்கராகமம் கூறும்.

ஞானேந்திரியங்கள் நன்றாய் உரைக்கக் கேள்
ஊனமிகு பூதம் உற்று இடமா ஈனமாம்
சத்தாதியை அறியும் தானம் செவிதோலக் கண்
ஆத்தாலுமூக் கென்ற அரி”

என்று ஞானேந்திரியங்களை உண்மைவிளக்கத்திலே மனவாச கங்கடந்தார் கூறுவார்.

கர்மேந்திரியங்கள் (செயற்புலன்கள் ஐந்து)

ராஜஸத்தின் கூறான வைகாரிகாஹங்காரத்திலிருந்து கர்மேந்தி ரியங்கள் உண்டாகின்றன. வாக்கு, பாணி, பாத, பாயு, உபஸ்தம் ஆகிய, வாய், கை, கால், எருவாய், கருவாய் ஆகிய ஐந்துக்கும் கர்மேந்திரியங்கள் என்று பெயர். ஞானேந்திரியங்கள் விஷய ஞானத்ததை உண்டாக்குகின்றன. கர்மேந்திரியங்கள் தொழிலைச் செய்கின்றன. இவற்றைத் தொழிற்கருவிகள் எனலாம். 1. வசனம் 2. ஆதானம் 3. விஹரணம் (கமனம்) 4. உத்சர்கம் (விசர்கம்)

5. ஆனந்தம் ஆகின்ற, பேசுதல், எடுத்தல், நடத்தல், விடுதல், சுகித்தல் ஆகிய ஐந்தும் கர்மேந்திரியங்களின் தொழில்கள் (செயல்கள்) என்று எடுத்துக்கொள்ளவேண்டும். முன் பிறவியின் செய்தபாவத்தின் பயனாக, ஊமை, நொண்டி, முடமாகப் பிறந்தவர்களுக்கு பேசுதல், நடத்தல், எடுத்தல் முதலான செயல் கிடையாது. வாய்இருந்தாலும் ஊமைக்கு பேசுதல் கிடையாது. கால்கள் இருந்தாலும் நொண்டிக்கு நடத்தல் கிடையாது. கைகள் இருந்தாலும் முடவனுக்கு எடுத்தல் கிடையாது. ஆகவே வாய்முதலானவற்றிற்கும் வேறாக, அந்தந்த அவயவங்களின்சக்தியே கர்மேந்திரியங்கள் ஆகும். இந்த கருத்தினை

வாகாதீநாம் வதாந்யத்வம் பதே ஸத்யப் யதத்குணா: |

என்று மிருகேந்திரம் கூறும்.

வாக்பாணி பாத பாயூ பஸ்தா: கர்மேந்த்ரியாணி ஸ்யு: |
வசனாதான விஹரணோத் ஸர்கானந்தாச்ச கர்மைஷாம் ||

என்று தத்துவப்ரகாசம் கூறும்.

அந்தக்கரணங்களும் பஹிக்கரணங்களும் (அகக்கருவிகளும் புறக்கருவிகளும்)

பிரகிருதியிலிருந்து உண்டான தத்துவங்களில், ஆன்மாவிற்கு உள்ளேஇருந்து கொண்டு, செயல்படும் கருவிகள் அந்தக் கரணங்களாகும். வெளியிலிருந்துகொண்டு செயல்படும் கருவிகள் பாஹ்யகரணங்களாகும். புத்தி, அஹங்காரம், மனசு ஆகிய மூன்றும் அந்தக்கரணங்களாகும். இவற்றோடு குணத்தையும் சேர்த்தது அந்தக்கரணங்கள் நான்கு என்று பாடபேதத்தினால் சொல்லுவதும் உண்டு.

மனோ (அ)ஹங்கார புத்திச் ச த்ரிதா (அ)ந்தக் கரணம் விது: |

என்று அசிந்த்யவிசுவ சாதாக்யமும்,

மனோ புத்திர ஹம்காரஸ் சித்தம் சேதி சதுஷ்டயம் |
அந்தக்கரண மேவோக்தம் க்ஷேத்ரக்ஞஸ்ய ததோ(அ)பிச ||

என்று ஸித்ததந்திரமும் கூறும். அந்தக்கரணம் நான்கினுள் ஞானேந்திரிய, கர்மேந்திரியங்களின் வாயிலாக, விஷயங்களில் மனம் பதியும், புத்தி இது மனம் பற்றியதை இன்னது என்று நிச்சயிக்கும். நிச்ச யித்த அதனை, நான் இதனை அறிவேன், இதனை செய்வேன் என்று அஹங்காரம் முன்வரும், சித்தமாகிற குணம் அந்த விஷயத்ததைக் கவர்ந்து, நினைவுவடிவில் வைத்துக்கொள்ளும் இதனை

அந்தக்கரணம் அடைவே உரைக்கக் கேள்
அந்த மனம் புத்தியுடன் ஆங்காரம் சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பலகால் எழுந்திருந்து அங்கு
உற்றது சிந்திக்கு உணர்"

என்று உண்மைவிளக்கத்தில் காணலாம்.

தன்மாத்திரைகள்

தாமஸத்தின்கூறான பூதாதிகாஹங்காரத்தில் இருந்து, தன்மாத் திரைகள் தோன்றுகின்றன. சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய ஐந்தும் தன்மாத்திரைகள் எனப்படுபவை ஆகும்.

"தாவதீ மாத்ரா: தன்மாத்ரா" என்ற இலக்கணப்படி சப்தாதிகள் ஐந்தும், இவைகளில் சூக்ஷ்மமாக அடங்கியிருப்பதால் இவைகளுக்கு தன்மாத்திரை என்றுபெயர். சப்தாதிகளில் ஒவ்வொரு குணம் அதிகரித்து, ஆகாசாதி பஞ்சபூதங்கள் தோன்றுகின்றன. முதலில் சப்ததன்மாத்திரையில் இருந்து ஆகாசம் தோன்றும். சப்தத்தோடு கூடிய ஸ்பர்சதன்மாத்திரையிலே இருந்து வாயு தோன்றும். சப்தம் ஸ்பர்சத்தோடு கூடிய ரூபதன்மாத்திரையில் இருந்து அக்னி தோன்றும். சப்தம், ஸ்பர்சம், ரூபம் இவற்றோடு கூடிய ரஸமாத்திரையில் இருந்து, ஜலம் தோன்றும். சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் ஆகியவற்றுடன் கூடிய கந்த தன்மாத்திரயிலிருந்து பிருதீவீ தோன்றும் தன்மாத்திரைகள் சூக்ஷ்மங்கள், பஞ்சமஹாபூதங்கள் ஸ்தூலங்களாகும்.

தன்மாத்ராண் யவிசேஷா: சப்தாதீநாம் ப்ரகீர்த்திதா: பஞ்ச |
பஞ்சபூதானி பஞ்ச தேப்ய பவந்தி தான் யேக குண வ்ருத்யா ||

என்பது தத்துவப்பிரகாச வாக்கியமாகும்.

"ஆகாசாத்வாயு:" சொல்லவேண்டும். "காரணாத் குணசங்க்ராந்தி: கார்யாணாம்" என்றபடி காரணத்தில் இருக்கும்குணங்கள்தான் காரியத்திலும் உண்டாகும் என்பது மரபு. இதனைக்கூறும் ஆகமம்.

அபவத் சப்ததன்மாத்ரம் சூக்ஷ்மம் நைவோப லப்யதே |
தன்மாத்ர சப்த சேஷார்த்த விநிவ்ருத்யார்த்த முச்யதே |
ததோ (அ)ந்யத் ஸ்பர்ச தன்மாத்ரம் கஞ்சித் சப்தஸமன்விதம் |
ரூப தன்மாத்ர மப்யேவம் சப்த ஸ்பர்ச ஸமன்விதம் |

ததோ (அ)ன்யத் ரஸதன்மாத்ரம் ப்ராகுக்த த்ரிதயான்விதம் |
கந்த தன்மாத்ர மப் யேவம் சதுஷ்டய ஸமன்விதம் ||

என்று மதங்கபாரமேச்வரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனை

ஏக த்வி த்ரி சதுப் பஞ்ச குணாஸ் தன்மாத்ர ஸம்ர ஸம்ஹதி: |
அத ஏவஹி பூதானாம் அபியோகோ குணை க்ரமாத் ||

என்று மிருகேந்தராகமும் கூறும்.

நா காசாத் ஜாயதே வாயு: ந வாயோ ரக்னி ஸம்பவ: |
நாக்னே ராபஸ் தத: ப்ருத்வீ தர்மாதிசய தர்சனாத் ||
காரணாத் குணஸங்க்ராந்தி: யுக்தா கார்யேஷு ந ஸ்வத: |
தன்மாத்ர பஞ்சகாத் ஜாதம் ததோ வ்யோமாதி பஞ்சகம் ||

என்று பௌஷ்கராகமமும் கூறும்.

ஆகாசாதிபஞ்சபூதங்கள்

தன்மாத்திரைகளிலிருந்து ஆகாசம் முதலான பஞ்சபூதங்களும் உண்டாகின்றன.

தன்மாத்ரேப்ய க பவன தேஜ: அம்ப: க்ஷ்மேதி பஞ்சபூதாநி |

என்று தத்துவப்ரகாசம் கூறும்.

அவகாச வ்யூஹ பாசன ஸங்கிரஹ தாரணம் க்ரமா தேஷாம் |
வ்யாபாரோ பூதானாம் வ்யோமா தீனாம் ஸமுத்திஷ்ட: ||

என்று ஆகாசாதிகளின் வ்யாபாரத்தையும் கூறும். ஆகாசத்தின் வ்யாபாரம் எல்லாவற்றிற்கும் அவகாசதானம் அதாவது மற்ற பூதங்களுக்கு இடம்தருவது ஆகும். வாயுவின் வ்யாபாரம் வ்யூஹனம் அதாவது மற்ற சலனஸ்வபாவம் கொண்டதால் திரட்டுவது ஆகும் அக்னியின் வ்யாபாரம் பாசனம் அதாவது உஷ்ணமாயிருத்தலால் சமைப்பது ஆகும். ஜலத்தின் வ்யாபாரம் ஸங்கிரஹம் அதாவது திரவமாகஇருப்பதால் ஒன்றுசேர்ப்பது ஆகும். பிருதிவியின் வ்யாபாரம் தாரணம் அதாவது கடினமாக இருப்பதால் தாங்கிக்கொள்ளுவது ஆகும். பூதங்களின் செயலாகும். இதனை காமிகாகமம் இவைகள் -

அவகாச ப்ரதம் வ்யோம ஸமூஹம் மாருத க்ரியா |
பாவகஸ்ய க்ரியா பாக: ஜலம் ஸம்ஸரண க்ரியாம் |
ப்ருதிவ்யா தாரணம் கர்ம பூத வ்யாபார ஈரித: |

எனக்கூறும். மண்ணில் கடகடா சப்தமும், நீரில் சலசலா சப்தமும், நெருப்பில் தமதம சப்தமும், காற்றில் சகசகா சப்தமும், ஆகாசத்தில் எதிரொலியாயிருக்கின்ற சப்தமும் ஆக ஐந்துபூதங்களிலும் ஒலி உண்டு. இதனை

ப்ருதிவ்யாம் கட கடா சப்த: ஜலே சல சலோ (அ) நலே |
தக தகச் சக சகோ வாயௌ நாதோ வ்யோம்னி ப்ரதித்வனி ||

என்ற ஸ்லோகத்தால் அறியலாம்.

காற்றில் ஸ்பர்சமானது சூடும் குளிர்ச்சியும் இல்லாத தன்மை. நெருப்பில் ஸ்பர்சம் சூடு. நீரில் ஸ்பர்சம் குளிர்ச்சி. மண்ணில் ஸ்பர்சம் சூடும்குளிர்ச்சியும் ஆகும். வாயு முதலானவைகளில் ஸ்பாசம் உண்டு. ஆகவே இதனை

இதி பஞ்சசு சப்தோ(அ)யம் ஸ்பர்சோ பூத சதுஷ்டயே |
அசீதோஷ்ணௌ மஹீ வாய்வோ: சீதோஷ்ணௌ வாரி தேஜஸோ: ||

என்பதால் அறியலாம். நெருப்பில் ரூபம் ஒளியாகின்ற வெண்மை, நீரில் ரூபம் வெண்மை. மண்ணில் ரூபம் வெண்மை, நீலம் முதலான அனைத்து நிறங்களும் உண்டு. ஆகவே அக்னி முதலான மூன்று பூதங்களிலும் ரூபம் உண்டு. இதனை

பாஸ்வ தக்னௌ ஜலே சுக்லம் க்ஷிதௌ சுக்லாத்யனேகதா |

என்பதால் அறியலாம்.

நீரில் ரஸம் மதுரம். மண்ணில் ரசம் தித்திப்பு முதலான ஆறு சுவைகளும் உண்டு. ஆகவே ஜலத்திலும் பிருதியிலும் ரசம் உண்டு. இதனை

ரூபம் த்ரிஷு ரஸோ (அ)ம்பஸ்சு மதுர: ஷட்வித: ச க்ஷிதௌ |

என்பதால் அறியலாம்.

பிருதிவியில் கந்தமானது வாசனை, இரண்டுமாம். இதனை நாற்றம் ஆகிய கந்த: ச க்ஷிதா வசுரபி: சுரபிச் ச மதோ புதை: என்பதால் அறியலாம்.

மண் கடினமதாய் தரிக்கும் வாரி குளிர்ந்தே பதமாம் –
ஒன்கனல் சுட்டு ஒன்றுவிக்கும் ஓராமல்– வண்கால்
பரந்து சலித்துத் திரட்டும் பார்க்கில் ஆகாயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து"

என்பது உண்மைவிளக்கம் கூறும் பூதங்களின் நிலையாகும்.

சூக்ஷ்மதத்வங்கள் ஸ்தூலதத்வங்கள் என தத்துவங்கள் இரு வகையாகும்.

மாயாதோ த்விவிதா ஸ்ருஷ்டி : ஸ்தூலம் சூக்ஷ்மாத்மிகே த்யபி |
த்ருக்சக்தி யஞ்ஜிகா சூக்ஷ்மா ஸ்தித்வாத்ம நாத்மனி ஸ்தூலா ||
புவனரூபேண சரீராத் யாத்மனா ஸ்திதா.............................. |

என்ற பௌஷ்கரவசனப்படி கண்ணுக்குப் புலப்படாமல் ஒவ்வொரு சரீரத்திலேயும் உள்ள தத்துவங்கள் சூஷ்மமாகும். புவனங்களுக்கு எல்லாம் ஆதாரமாக இருக்கக்கூடிய தத்துவங்கள் எல்லாம் ஸ்தூலமாகும். அந்தசரீரமும் சூக்ஷ்மசரீரம், ஸ்தூலசரீரம் என்று இருவகையாகும். சூக்ஷ்மசரீரம் என்பது முப்பது தத்துவங்களோடு ஒவ்வொரு சரீரத்திலேயும் இருப்பது. இதைத்தான் புர்யஷ்டகசரீரம் என்று சொல்லுகின்றோம்.

"பஞ்சபூதைஸ் ஸமாரப்த : தோஹோ(அ)யம் பாஞ்சபௌதிக:"

என்ற வசனப்படி பஞ்சபூதங்களாலான பாஞ்சபௌதிகமான சரீரம் ஸ்தூலசரீரமாகும். ஆகவேதான் பூதசுத்தியில் சூக்ஷ்ம தேஹசுத்தி, ஸ்தூலதேஹசுத்தி என்றுஇரண்டுவிதமாக தேஹசுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. சூக்ஷ்மதேகத்தில் உள்ள தத்துவங்களையெல்லாம் லயமடையச் செய்வதே சூஷ்மதேஹ சுத்தியாகும்.

"இதரத் வஸ்து இத்யேவம் பஞ்சபூதாநி நிர்திசேத்"

புர்யஷ்டக சரீரம் (சூக்ஷ்மதேஹம்)

அந்த சூக்ஷ்மதேஹத்திற்கு புர்யஷ்டகசரீரம் என்று பெயர்.

சப்த ஸ்பர்சஸ் ச ரூபம் ச ரஸோ கந்தஸ் ச பஞ்சம: |
புத்திர் மனஸ் த்வஹங்கார: புர்யஷ்டக முதாஹ்ருதம் ||

என்னும் காலோத்தர வசனப்படி, சப்தாதி எட்டையும் புர்யஷ்டகம் என்று சொல்லியிருந்தாலும் எட்டுவர்க்கங்கள்தான் புர்யஷ்டகம் என்று மிருகேந்திரவருத்தி, தத்துவ பிரகாசம், க்ரியாக்ரமத்யோதிகா முதலான நூலின் வ்யாக்கியானங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

பூத தன்மாத்ர புத்தீந்திரிய கர்மேந்திரியாந்தக்கரண |
ஸம்ஞை: பஞ்சபி: வர்கை: தத்காரணேந குணத்வேந |
ததா பூரகேநச ப்ரதானேந போக்த்ரு ரூபோ பபாதகேன |
கலாதி பஞ்ச கஞ்சுகாத்மநாச வர்கேணாரப்தத்வாதித்யவிரோத: ||

என்று வியாக்கியானத்திலே வருகிறது. ஆகவே 1. பூதங்கள் 2. தன்மாத்திரைகள் 3. ஞானேந்திரியங்கள் 4. கர்மேந்திரியங்கள் 5. அந்தக்கரணங்கள் 6. குணம் 7. பிரகிருதி 8. கலாதி பஞ்சதத்துவங்கள் ஆகிய எட்டுவர்க்கங்களில் இருக்கின்ற முப்பதுதத்துவங்கள்தான் புர்யஷ்டகம் எனப்படுகிற சூக்ஷ்மதேஹமாகும்.

வசுதாத்யஸ் தத்வகண: ப்ரதிபும் நியத: கலாந்தோ(அ)யம் |
பர்யடதி கர்ம வசத: புவனஜ தேஹேஷ் வயம் ஸர்வேஷு ||

என்று தத்துவசங்கிரஹம் சூக்ஷ்மதேஹலசஷணத்தைக் கூறும்

இதனையே

வசுதாதி கலாசங்கிரஹம் சூக்ஷ்மதேஹ லக்ஷண –
ப்ரோக்தா போகஸாதன ஸம்ஹதி: |
நியதா ப்ரதி போக்தாரம் பரிக்ஞேயா மனீஷிபி: |

என்று போககாரிகை கூறும்.

ப்ரயோக்திரியாதி மஹீ ப்ராந்த மேத தந்வர்த்த ஸாதனம் |
ப்ரத் யாத்ம நியதம் போக பேததோ வ்யவஸியதே ||

என்று மிருகேந்திர ஆகமமும் கூறும்.

தத்துவக்ஞான பயன்

ஆன்மாக்கள் இந்த தத்துவச்சேர்க்கையினால்தான் கர்மபலனை அனுபவிக்கமுடியும். கர்மபலனை அனுபவித்தால்தான் இருவினை யொப்பாகின்ற மலபரிபாகம் ஏற்பட்டு ஆன்மாக்கள் மோக்ஷமடைய முடியும் என்பது ஸித்தாந்தம். இந்த கருத்தே –

அணோர் மாயேய ஸம்பந்தாத் கர்மானுபவ ஹேதுத: |
ஆணவாக்ய நிவ்ருத்தேஸ்ச தஸ்மான் முக்திஸ்ச ஸித்யதி ||

என்று சிவஞானபோதசங்கிரஹத்தில் சொல்லப்பட்டுள்ளது.

“எல்லாமாய்த் தத்துவங்களியைந்த தென்னணுவிக்கென்னிற்
றோல்லாய கன்ம மெல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற் கும்பி
னில்லாமை முற்றுவித்து நீக்கவும் கூடி நின்ற
பொல்லாத வாணவத்தைப் போக்கவும் புகுந்த தன்றே.

என்று ஞானாவரணவிளக்கம் எனும்நூல் ஆன்மாக்களுக்கு தத்துவங்கள் சேர்ந்ததின் காரணத்தைக் கூறுகிறது.

முடிவுரை

இந்தப் பிறவிப்பெருங்கடலில் பிறந்து, இறந்து, மீண்டும் பிறப்புற்று, உழலுகின்ற ஆன்மாக்கள், சிவபோகமாகிற உயர்ந்தநிலையை அடையவேண்டுமானால், பத்துநிலைகளை கடக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றது. பத்துபடிகள்போல அமைந்துள்ள அந்த நிலைகளைத்தான் “தசகார்யம்“ என்று சைவசித்தாந்தம் கூறும். அவை 1. தத்துவரூபம், 2. தத்துவதரிசனம், 3. தத்துவசுத்தி, 4. ஆத்மரூபம், 5. ஆத்மதரிசனம், 6. ஆத்மசுத்தி, 7. சிவரூபம், 8. சிவதரிசனம், 9. சிவயோகம், 10. சிவபோகம் ஆகின்ற அந்த நிலைகளில், முதல் மூன்றுபடியாக இருப்பது இந்த தத்துவங்களாகும்.

இந்த முப்பத்தாறு தத்துவங்களையும் ஸ்வபவத்தோடு அறிவது 1. தத்துவரூபமாகும். இந்ததத்துவங்கள் எல்லாம், மாயையிலிருந்து உண்டானவை.

அசேதனங்கள் (ஜடப்பொருள்) என்று அறிந்து கொள்வது 2. தத்துவ தரிசனமாகும். இந்த தத்துவங்கள் எல்லாம் தனக்கு வேறானது என்று உணர்ந்து அவைகளை பற்றிநிற்காமல் இருப்பது 3. தத்துவசுத்தியாகும்.

அத்ரோக்த தசகார்யாணாம் லக்ஷணம் து அதுநோச்யதே |
ப்ருதிவ்யாதி நாத தத்வாந்தம் தத்வாத்வானம் ஸ்வபாவகை: |
யுதா: ஸித்தி ப்ரகாரம் தத் ஸித்தி ஸ்யாத் தத்வரூபகம் |
ஏதேஷாம் ஜடபாவஸ்ய தர்சனம் தத்வதர்சனம் |
தேஷாம் பந்த பரித்யாக: தத்வசுத்தி ரிதி ஸ்மிருத: ||

என்று ஞானசித்தியில் சொல்லப்படுகின்றது. இதுவே 36 தத்துவங்களின் செயல்முறையாகும். தத்வாதீதப்பரம்பொருளைப் பணிந்து ஏத்தி, பிறவாததன்மையுடன் முக்திபெற முயல்வோமாக.



ஸ்ரீ குருப்யோ நம:

சிவயோக ஷட்சக்ர காரணேச தியாகக் கிரமம்

கட்டுரையாளர்
சிவஸ்ரீ K. மல்லிகேச்வரசிவம், M.A. M.Phil., Ph.D.
போரூர், சென்னை.

ஸர்வஜ்ஞனான பரமேஸ்வரன் எல்லா ஜீவராசிகளும் உன்னத நிலையையும் நற்கதியையும் அடையும் பொருட்டு ஆகமத்தை அருளி அதில் ஞான, க்ரியா, சர்யா, யோகம் என்ற நான்கு மார்கத்தையும் அனுக்ரஹம் செய்துள்ளார். ஒவ்வொரு பாதத்திற்கும் தனி சிறப்புண்டு. க்ரியாபாதத்தில் = தீக்ஷைக்கு ப்ராதான்யம் தரப்படுகின்றது. சர்யா பாதத்தில் = ஆலயவழிபாடு அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று வ்ரதங்களைப்பற்றி கூறுகின்றது. ஞானபாதத்தில் = தத்வங்களைப்பற்றியும் அதைத் தாண்டி இருக்கும் சிவனைப்பற்றியும் விளக்குகின்றது. யோகபாதத்தில் ஆஸநம், ப்ரத்யாஹாரம், ப்ராணாயாமம், த்யானம், தாரணை, சமாதி போன்றவற்றை கூறுகின்றது. ஆக நான்குபாதத்திற்கும் தனிச்சிறப்பு இருக்கிறது. இந்த நான்கு பாதங்களும் த்ரிபதார்தமான பதி, பசு, பாசம் என்பதைப் பற்றி கூறுகின்றது. அதாவது பசுவானது பாசத்தை விலக்கி, பதியை அடைவதே லக்ஷியம். எனவே இந்த நான்குபாதங்களும் ப்ரயோகக்ஷேத்ரத்தில் இணைந்து செயல்படுகின்றது. ப்ரயோகசேஷத்ரம் என்று இங்கு கூறுவது பரார்த்தபூஜையில். உதாஹரணத்திற்கு க்ரியாபாதத்தில் கூறியுள்ள ஒரு பூஜையை, அனுஷ்டானம் செய்யும் ஆசாரியர் எப்படிப்பட்ட நியமத்தை ஆசரணம் செய்யவேண்டும் என்று கூறும்பொழுது சர்யாபாதம் இடம்பெறுகின்றது. பரமேஸ்வரனை தத்வத்திற்கு அப்பாற்பட்டவராகக்கருதி பூஜிக்கும்பொழுது, ஞானபாதம் பங்கேற்கின்றது. இப்படிப்பட்ட இந்த பூஜையில் நிறைவும், முழுபலனும் கிடைக்கவேண்டும் என்றால் பூஜையை பாவனையுடன் செய்யவேண்டும் என்கிறது. பாவனையானது எப்பொழுது ஏற்படும்? புர்யஷ்டகமானது அடங்கும் பொழுது இந்திரியங்களும் மனதும் கட்டுப்படும் பொழுது பாவனை ஏற்படுகின்றது. இதனால் பூஜை பூர்ணத்வத்தை அடைகின்றது. அதனால் முழு பலன் கிடைக்கின்றது. எனவேதான் "பூர்யந்தே ஸர்வ கர்மாநி ஜாயதே ஞானம் ஆத்மநி" (பூஜையால் மனதில் (ஆத்மாவில்) ஞானம் தோன்றுகின்றது) என்று கூறுகின்றோம். பூஜையில் பாவனை

ஏற்படவேண்டும் என்றால், 30தத்துவக்கூட்டமாகிற புர்யஷ்டகம் கட்டுப்படவேண்டும். இவற்றை கட்டுப்படுத்துவதற்கு பயிற்சிதேவை. அந்த பயிற்சியைப்பற்றி கூறுவது **யோகம்**. பயிற்சியானது இல்லை என்றால், மனது கட்டுக்குள்வராது. கட்டுக்குள் வரவில்லையாகில் பூஜையில் பாதிப்பும் தோஷமும் ஏற்படும். உதாஹரணத்திற்கு யாகசாலைபூஜையில் அஷ்டபுஷ்பம் சாற்றும் சமயத்தில், அடுத்த க்ரியையாகவுள்ள அஷ்டபந்தனத்தை இடிக்கும்க்ரியை நினைவுக்கு வருகின்றது என்று வைத்துக்கொள்வோம், அப்பொழுது மனது கட்டுப்பாட்டுடன் இருந்தால் அந்த எண்ணத்தால் பூஜையில் எந்த பாதிப்பும் ஏற்படாது, இல்லையென்றால் அஷ்டபந்தனத்தை இடிக்கும் வேகம் இந்த அஷ்டபுஷ்ப சமர்ப்பணத்தில் ஏற்பட்டு, பூஜையில் பாவனையில் முழுமை ஏற்படாது. எனவே ஆசார்யன் யோகபாதப் பயிற்சிசெய்தவராய் இருந்திடவேண்டும்.

மதங்காமத்தின் ஆசார்யலக்ஷண படலத்தில்,

வித்யா பாதார்த்த குசல: க்ரியா பாத கத க்ரம: |
யோகபாத க்ருதாப்யாஸ: சர்யா பாதாநுவர்த்தக: || (மாதங்கே)

என்று கூறியுள்ளவாறு நான்குபாதத்திலும் தேர்ச்சிபெறும் ஆசாரியர், யோகத்தை அப்யாஸத்தால் பெருகின்றார். யோகத்தை பொருத்தவரையில் அது தேஹஸம்பந்தமாக இருந்தாலும் ஆத்மஸம்பந்தமாக இருந்தாலும் அதை அப்யாஸத்தால்தான் அடையமுடியும். யோகப்பயிற்சியை தினமும் அப்யாஸம்செய்யும் ஆசாரியர், பலசக்திகளையும், அளவிடமுடியாத அளவிற்கு சுவாமியின் அனுக்ரஹத்தையும் பெறுகின்றார். இப்படிப் பட்ட ஆசார்யரின் ப்ரார்த்தனைக்கு சுவாமி செவிசாய்கின்றார். உதாஹரணத் திற்கு கும்பாபிஷேகத்தில் கலாகர்ஷனகாலத்தின் பொழுது ஆசார்யர் கர்ப்பக்ருஹம்சென்று சுவாமியிடம் இவ்வாறு ப்ரார்த்தனை செய்கின்றார். அதாவது,

தேவ தேவ ஜகந்நாத – ஜகத் காரண காரண |
த்வல் லிங்க பீடபந்தார்த்தம் – ஆகச்ச கலசே விபோ ||

இதன்பொருள் = "உலகம் அனைத்திற்கும் காரணமாக இருப்பவரே! ஹே இறைவா! உனக்கு கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று விருப்பம்கொண்டுள்ள எனக்காக இந்த கலசத்திற்குள் நீ வரவேண்டும்" என்றுகூறியவுடன், ஆசாரியரின் பிரார்த்தனைக்கும், பக்திக்கும் இசைந்து, இறைவன் கலசத்திற்குள் வருகின்றார். இங்கு இறைவன்பால் ஏகாக்ரசித்தம் பெரும் ஆசாரியர் உச்சரிக்கும் மந்திரத்தினை மனதில் வாங்கி, அதற்கு ஏற்ப பாவனையுடன் செய்யும்போது அந்தபூஜை முழுமையடைகின்றது.

ஆக மனமானது எண்ணஅலைகள் இல்லாமல் இருப்பது யோகம் என்று கூறுகின்றது. "யோக: சித்த வ்ருத்தி நிரோத:" என்கிறது பதஞ்ஜலியின் யோகசூத்ரம். எண்ணஅலைகள் இருந்தால் என்ன? மனது ஒரு நிலையில் இல்லை என்றால், பூஜையில் பாவனை வராது, பாவனையில்லாமலும் ச்ரத்தை இல்லாமலும் செய்யும் பூஜைக்கு பலன் இருக்காது. எனவே மனதை கட்டுபத்திப் பழகவேண்டும்.

மனத்தை கட்டுப்படுத்துவது என்பது கடினமான கார்யம்தான் "சஞ்சலம் ஹி மன:" ஆனால் "அப்யாஸே வைராக்யேந ச க்ருஹ்யதே" நிரந்தரமான அப்யாஸத்தாலும், வைராக்யத்தாலும் இது சாத்தியம். "வைராக்யாத் யோக:" என்பது ஆகமவாக்கியம். ஆக யோகத்தில் கூறப்பட்டுள்ள அப்யாஸத்தை செய்வதால் மனமானது கட்டுண்டு ஸ்தூலதேகத்தில், மற்றும் ஸூக்ஷ்மதேகத்தில் சுத்திஏற்பட்டு, யோகமானது அடையப்படுகின்றது. இவ்வளவு சிறப்புவாய்ந்த யோகம் என்றபதத்திற்கு பலரால் பலவகையில் அர்த்தங்கள் கூறப்படுகின்றன. அவற்றை இனி பார்ப்போம்.

யோக பதார்தம். (சொல்விளக்கம்)

பாணிணீ தன்னுடைய தாதுபாடத்தில் யோகம் என்ற பதம் பெறுவதற்கு மூன்று வேர்ச்சொற்கள் கொடுத்துள்ளார். அவைகள்–

1. "யுஜ் ஸமாதெள:" 2. "யுஜ் ஸம்யமனே:" 3."யுஜுர் யோகே" என்பனவாகும். இப்பொழுது கூறிய வேர்ச்சொல்லிலிருந்து யோகம் என்றபதம் பெற முடியும். ஆனால் எந்த அர்த்தத்தில் அதை பயன்படுத்தப்போகின்றோம் என்பதைப்பொறுத்து வேர்ச்சொல் அமையும்.

வேதவியாசர் தன்னுடைய யோகபாஷ்யத்தில், யோகத்திற்கு "யுஜ்ஸமாதெள" என்ற வேர்ச்சொல்லை எடுத்துக்கொண்டு யோகம் என்பது சமாதிநிலை என்று கூறுகின்றார்.

யாஞ்யவல்கயர் தன்னுடைய யோகயாஞ்யவல்கியத்தில் "ஸம்யோகே யோக;" இணைவது என்றபொருளில் கூறியுள்ளார். இணைவது என்றால் ஜீவாத்மா பரமாத்மனோ:" ஜீவாத்மா பரமாத்மாவில் இணைவது யோகம் என்று கூறுகின்றார்.

யோகம் என்பதற்கு விளக்கம் கூறும்பொழுது "சித்த வ்ருத்தி நிரோத: யோக:" எண்ணஅலைகளை ஒடுக்குவது யோகம்.

"யோக: கர்மசு கௌசலம்" கர்மாவை செய்வதே யோகம்.

"ஸமத்வம் யோகம் உச்யதே:" அனைத்தையும் சமமாக காண்பது யோகம்.

"யோகோ பவதி துக்கஹா" துக்கத்தைப் போக்குவது யோகம். என்று "யோகசித்தி" என்ற கிரந்தத்தில் கூறப்படுகிறது.

"த்யானமேவ பரோ யோக:" த்யானமே உயர்ந்த யோகம் எனப்படுகிறது.

"ஸர்வார்த்த ஞான நிஷ்பத்தி ஸத்மனோ யோக;" எல்லாவிதமான ஞானத்தையும் எது உண்டு பண்ணுகிறதோ அதுதான் யோகம். இவ்வாறு யோகம் என்றசொல் விளக்கப்படுகிறது.

மதங்கஆகமத்தில், யோகபாதத்தில்,

அதயோக விபூத்யர்த்தம் உத்தமோ (அ)யம் விதிர்முனே|

என்றுகூறி, யாவருக்கும்

உலகில் ஐஸ்வர்யத்தை அடைய உத்தமமான விதி யோகம் என்றும்,

யோகாத் சித்திஸ்ச மோக்ஷஸ்ச ததப்யாஸாத் சுபம் பவேத் |

யோகத்தை அப்யாஸம் செய்வதால் ஸகலசித்திகளும், மோக்ஷமும் எல்லாநன்மைகளும், கிடைக்கும், என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக யோகம் என்றபதத்திற்குப் பலக்ரந்தத்திலும் பலராலும் பலவகையில் அர்த்தங்கள் கொடுக்கப்பட்டு இருந்தாலும், அனைத்து வாக்யத்தின் லக்ஷியம் ஜீவாத்மா பரமாத்மாவை அடைவதே யோகம் எனப்படுவது ஆகும்.

ஆக, எவையெல்லாம் இறைவனை அடைய வழியாகவும், உதவி யாகவும், இருக்கின்றதோ, அவை அனைத்தும் யோகம் ஆகும். கீதையில் உளள 18 அத்யாயத்தின் புஷ்பிகையிலும் "ப்ரஹ்மவித்யாயாம் யோகசாஸ்த்ரே" என்று கூறப்பட்டுள்ளது. ஆக ஒவ்வொரு அத்யாயமும் ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைய உதவியாக வழிகாட்டியாக இருக்கின்றது. எனவேதான் பக்தி, ஞான, ராஜ, கர்ம இவற்றுடன் யோகம் இணைந்து பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம், கர்மயோகம் என்று கூறுகின்றோம்.

சிவபுராணம் யோகத்தை ஐந்துவிதமாக கூறுகின்றது.

நிவ்ருத்த வருத்யந்தரஸ்ய சிவே சித்தஸ்ய நிஸ்சலா |
யா வ்ருத்திஸ் ஸா ஸமாஸேந யோகோ(அ)ஸௌ கல பஞ்சதா ||

மனதின் எண்ணஅலைகளை அடக்கி, சிவனிடத்தில் நிஸ்சலமாக, அசைவற்றதாய், எண்ணத்தைவைக்கும் செயலுக்கு யோகம் என்றுபெயர்.

அவற்றை ஐந்துவிதத்தில் செய்யலாம். அவை 1. மந்த்ரயோக:, 2. ஸ்பர்சயோக:, 3. பாவயோக:, 4. அபாவயோக:, 5. மஹாயோக: .

1. மந்திரத்தை உச்சரிக்கும் முறையான பயிற்சியாகிற அப்யாஸத்தில் ஈடுபட்டு, மந்திரஅர்த்தத்தில் ஈடுபட்டு, மந்திரத்தைத் தவிர, வேறு எந்த எண்ணமுமில்லாமல் இருப்பது "மந்த்ர யோகம்" எனப்படுவதாகும்.

2. ப்ராணாயாமத்தை மட்டும் செய்து கொண்டு இருப்பது "ஸ்பர்ச யோகம்" எனப்படும்.

3. மந்திரம் மற்றும் ஸ்பர்சம் என்ற இரண்டுவகை யோகமும் அற்றது, மனதால் எண்ணியபடி இருத்தல் "பாவயோகம்" எனப்படுவது ஆகும்.

4. தன்னுடைய அவயவங்களை உலகத்தின் உருவமாக கருதுவது "அபாவ யோகம்" எனப்படுவது ஆகும்.

5. சிவனுடைய ஸ்வபாவம் ஒன்றைமட்டுமே மனதில் நினைப்பது, "மஹாயோகம்'' எனப்படுவது. இந்த ஐந்துவகை யோகத்திலும் "மஹாயோகம்" உத்தமமானது.

யோகவகை

யோகம் என்பது இரண்டு வகைப்படுகின்றது. அவைகள் முறையே, 1. ராஜயோகம், 2. ஹடயோகம் என்பனவாகும்.

ராஜயோகம்

ராஜயோகம் என்பது, அதாவது ஆன்தரிக அப்யாஸஸ்யைவ ப்ராதான்யம் கொண்டது. அதாவது சூக்ஷ்மசரீர அப்யாஸத்திற்கு முக்கியத்துவம் தருவது ராஜயோகம். இதையே சிவார்சனாசந்திரிகையில் "பூஜக ஜீவஸ்ய சிவ பாவாபாதநாத்மிகா ஜீவசுத்தி:" எனப்படுகிறது. ராஜயோகத்தில் தாரணா, த்யானம், சமாதி என்பன முக்கியமானவை. ராஜயோகத்தில் எப்பொழுது சித்திஉண்டாகும் என்றால் "மானஸ, சாரீர நியந்த்ரனேந" மனதும், தேஹமும் எபபொழுது கட்டுக்குள் வருகின்றதோ அப்பொழுது சித்தியானது கிடைக்கும்.

ஹடயோகம்

ஹடயோகம் என்பது "சரீர சம்பந்தாத்" என்பதாக, தேஹத்தைப்பற்றி கூறுவது. இதையே சிவார்சனாசந்திரிகையில் "பூஜக தேஹஸ்ய சிவ தேஹத்வ ஆபாதனாத்மிகா" எனப்படுகிறது. ஹடயோகத்தில் ஆசனம், ப்ராணாயாமம், முத்திரை என்பன முக்கியமானவை. ஹடயோகத்தில்

"ப்ராண அபானயோர் ஐக்யம்" என்பதாக ப்ராணன் மற்றும் அபானன் என்ற இரண்டுவாயுவின் இணைப்பில் சித்திகிடைக்கும் என்று கூறப்படுகிறது.

"தேஹோ தேவாலய: ப்ரோக்த: தத்ர தேவோ ஸநாதன:"

என்ற வாக்கியத்தின்படி ஸ்தூலதேஹ சம்பந்தமான ஹடயோகத்தை தேவாலயமாகவும், சூக்ஷ்மதேஹ சம்பந்தமான ராஜயோகத்தை இறைவனாகவும் கூறப்படுகின்றது. சிலர் ஆலயத்திற்கு முக்கியத்துவம் தருவார்கள். சிலர் இறைவனுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அதாவது ராஜயோகத்திற்கு சிலர் முக்கியத்துவம் தருவார்கள். சிலர் ஹடயோகத்திற்கு முக்கியத்துவம் தருவார்கள். ஆனால் சைவாகமம் இரண்டிற்கும் முக்கியத்துவத்தைத் தருகின்றது.

இதுவரை யோகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், யோகபாதத்தில் கூறிய உயர்ந்த நிலையைப்பற்றியும் பார்த்தோம். எனினும் பகவானது பக்தியால், பாசத்தை விலக்கி பதியை அடைவதே நோக்கமாக இருக்கவேண்டும். அதனை பெறுவதற்கு உடலும் மனதும் கட்டுப்படுத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் இலக்கை அடையமுடியும். நோக்கம் தெளிவான பிறகு அதை அடைவதற்கான பயிற்சியில் ஈடுபடவேண்டும். அந்த பயிற்சியைப்பற்றி கூறுவதுதான் யோகாங்கங்கள். அந்த யோகஉறுப்புகள் எட்டு என்று கூறப்படும்.

`யம நியமா ஸநஞ் ச ப்ராணாயாமம் தத: பரம் |
ப்ரத்யாஹாரஞ் ச த்யானஞ் ச தாரணாத ஸமாதிகாம் ||

என்று யோகத்தின் எட்டுஅங்கங்களைப்பற்றி, மகுடாகமம் கூறுகின்றது. ஆனால் மதங்கம், கிரணம், ரௌரவம் என்ற மூன்று ஆகமங்களிலும், ஆறு அங்கங்கள்தான் கூறப்பட்டுள்ளது. ஆறுயோகங்கள் மதங்காகமத்தில்,

ப்ரத்யாஹாரஸ் ததா த்யானம் ப்ராணாயாமஸ்ச தாரணா |
தர்க்கஸ் சைவ ஸமாதிஸ் ச ஷடங்கோயோ உச்யதே |

"ப்ருதக் லக்ஷணம்" என்று சிவபுராணம் கூறுகின்றது. அதாவது ஒவ்வொரு ஆகமத்திற்கும் தனித்தனி லக்ஷணம் உண்டு. சில ஆகமங்கள் சில அங்கத்திற்கு ப்ராதான்யம் தரும். ஆகமங்கள் சில அங்கங்களை விட்டுக்கூறும் சிலநேரங்களில் ஒருஅங்கத்திற்கு பதில், வேறொரு அங்கத்தைக்கூறும். உதாஹரணத்திற்கு மதங்கத்தில் "ஆஸனம்" என்ற அங்கத்திற்கு பதிலாக "தர்க்கம்" என்ற அங்கம் சேர்க்கப்பட்டுள்ளது. சில இடத்தில் க்ரமத்தில் மாற்றம் வரும். உதாஹரணத்திற்கு தியானத்திற்குப் பிறகு சமாதி என்றும்,

தாரணத்திற்கு பிறகு சமாதி என்றும், க்ரமத்தில் வரிசையில் மாற்றம் காணப்படுகின்றது. ஆகமங்களில் கூறப்பட்டுள்ள யோகஅங்கங்களை இங்கு பட்டியலில் காண்போம்.

க்ரந்தத்தின் யோக அங்கங்களின் பெயர்வரிசை முறை.

சுப்ரபேதம் ஆகமம்	கிரணம் ஆகமம்	ரௌரவம் ஆகமம்	ம்ருகே-ந்திரம்	மகுடம் ஆகமம்	மதங்கம் ஆகமம்	யோக ஸூத்ரம்
1. யமம்			ப்ராணா யாமம்	யமம்		யமம்
2. நியமம்			ப்ரத்யா ஹாரம்	நியமம்		நியமம்
3. ஆஸனம்	ப்ரத்யா ஹாரம்	ப்ரத்யா ஹாரம்	தாரணா	ஆஸனம்	ப்ரத்யா ஹாரம்	ஆஸனம்
4. ப்ராணா யாமம்	தியானம்	தியானம்	த்யானம்	ப்ராணா யாமம்	த்யானம்	ப்ராணா யாமம்
5. ப்ரத்யா ஹாரம்	ப்ராணா யாமம்	ப்ராணா யாமம்	ஈக்ஷணம்	ப்ரத்யா ஹாரம்	ப்ராணா யாமம்	ப்ரத்யா ஹாரம்
6. தியானம்	தாரணா	தாரணா	ஜபம்	தியானம்	தாரணா	தியானம்
7. தாரணா	ஆஸனம்	தர்கம்	சமாதி	தாரணா	தர்கம்	தாரணா
8. சமாதி	சமாதி	சமாதி	யோகம்	சமாதி	சமாதி	சமாதி

பஞ்சபூத மண்டலம்

மண்டலம்	பீஜம்	ஸ்தானம்	அக்ஷரம்	ரூபம்	சின்னம்	நிறம்	ஸ்வ பாவம்	குணம்	தத்வம்	காரனேச் வரர்	உத்காதம்
ப்ருத்வி	லம்	பாதாதி	கு	சதுரச்ரம் □	வஜ்ரம்	பீதம்	கடினம்	ப்ருதிவி (5)	கந்தாதி	ப்ரஹ்மா (5)	ஹானம்
ஆப்	வும்	பாதாதி	கு/ம	அர்த்த சந்திரன் ◡	பத்மம்	ருக்தம்	த்ரவம்	ஜலாதி ப்ரக்ருதி	ருசாதி (4)	பிஷ்ணு	ஹ்லீம் (4)
தேஜஸ்	ரம்	நாப்யாதி	யு/ஸ	த்ரிகோ ணம் △	ஸ்வஸ் திகம்	ச்வேதம்	உஷ் ணம்	புருஷ மாய	ரூபாதி (3)	ருத்ரர்	ஹ்ரும் (3)
வாயு	யும்	கண்டாதி	ஹ/க்ஷ	ஷட்சரம் ✡	ஷட் பிந்து	க்ரு ஷ்ணம்	சுலனம்	சுத்த வித்யா	ஸ்பர் ஷாதி(2)	மஹேச் வரர்	ஹ்ரயை ம்(2)
ஆகாசம்	ஹம்	ப்ருமத் த்யாதி	அ/அ	வ்ருத்தம் ○	ஏகபிந்து	தூம் ரம்	ஆவ காசம்	சிவ சக்தி	சப்த (1)	ஸதா சிவர்	ஹௌ ம்(1)

ப்ருதக் லக்ஷணம் ஏதேஷாம் சிவசாஸ்தரே ஸமீரிதம் |
சிவாகமேஷு ச அன்யேஷு விசேஷாத் காமிகாதிஷு ||

ஆக இங்கு விடப்பட்டஅங்கம் தேவையில்லை என்பது பொருள் இல்லை. அவை இல்லாமல் அடுத்த அங்கத்திற்கு வருவது கடினம். அதனால் அவற்றை கூறப்படாமல் இருந்தாலும் அதை அப்யாசம் செய்தே ஆகவேண்டும்.

யோகாங்கஅஷ்டகம் (யோகநெறி எட்டுஉறுப்புகள்)

இனி யோகத்தின் முதல் அங்கமான யமத்தைப்பற்றி பார்ப்போம்.

1. யமம் (முதலாவது யோகாங்கம்)

"யம:" என்பது மற்றவரைப்பாதிக்கும் எண்ணத்தையும் திடீரென ஏற்படும் மனஉணர்ச்சி வேகத்தையும் கட்டுப்படுத்துவதாகும்.

"அஹிம்ஸா, சத்யம், அஸ்தேயம், ப்ரஹ்மசர்யம், முதலியனவாம்.

1. அஹிம்ஸா (கொல்லாமை & துன்புறுத்தாமை)

கர்மணா, மனஸா, வாசா, ஸர்வபூதேஷு ஸர்வதா |
அக்லேசம் ஜனனம் ப்ரோக்தம் அஹிம்ஸாத்வேன யோகிபி: ||

இதனால் மற்றஜீவராசிகளைக் கர்மாவினாலோ, வாக்கினாலோ, மனத்தினாலோ காயப்படுத்தாமல் இருப்பது யமம் எனப்படுவதாகும்.

2. சத்யம் (வாய்மை)

"சத்யம்" உண்மை பேசுதல்
"சத்யம் பூத ஹிதம் ப்ரோக்தம்"
உண்மை உயிருக்கு நன்மை பயப்பது.

3. அஸ்தேயம் (களவு செய்யாமை)

அதாவது பிறப்பொருளை விரும்பாமை "கர்மணா மனஸா வாசா பரத்ரவ்யேஷு நிஸ்ப்ருஹா" என்ற வசப்படி செயலிலும், மனத்திலும், வாக்கிலும், மற்றவர்களின் பொருள்மீது ஒருபோதும் ஆசை இல்லாமை, எனவேதான் "பரத்ரவ்யாணி லோஷ்டவத்" என்ற வசனத்திற்கு ஏற்ப மற்றவர்களின் பொருளை களிமண்ணுக்கு சமமாகக் கருதுவது உயர்ந்த அடக்ககுணம் ஆகும்.

4. ப்ரஹ்மசரியம் (புலனடக்கம்)

கர்மணா மனஸா வாசா ஸர்வாவஸ்தாசு சர்வதா |
ஸர்வத்ர மைதுனாத் போக: ப்ரஹ்மசர்யம் ப்ரசக்ஷதே ||

ப்ரஹ்மசரியம் இரண்டுவகை 1. உபகுர்வான், 2. நைஷ்டக: என்பதாகும்.

"உபகுர்வான்" என்பது, படிக்கும்காலத்தில் மாணவனாக இருந்து, எந்த சூழ்நிலையிலும் மனத்தில் எந்த கெட்டஎண்ணங்களும் இல்லாமல் இருப்பது.

"நைஷ்டிக" என்பது தன் வாழ்நாள் முழுவதும் குருவுக்கு சேவை செய்வது.

"ப்ரஹ்மசர்ய ப்ரதிஷ்டாயாம் வீர்யலாப:" என்ற வசனப்படி, ப்ரஹ்மசர்யத்தில் நிலை பெற்றவனுக்கு வீர்யம் உண்டாகிறது. ப்ரஹ்மசர்யம் உள்ளவரின் மூளை அதிகவல்லமையைப் பெறுகின்றது. அவனுடைய மனவலிமையானது அளப்பரிது. அதனால் யோகியர்க்கு ப்ரஹ்மசர்யம் மிகவும் அவசியமானது.

"அபரிக்ரஹம்" அதாவது பிறரிடமிருந்து தானம் ஏற்காமை.

"அபரிக்ரஹ ஸ்தைர்ய ஜன்ம கதான் தாசம்போத:"

பொருளைத்தானமாகப் பெறுபவன், அப்பொருளை இணாமாகக் கொடுத்தவனுக்கு கட்டுப்பட்டவனாகிறான். அவ்வாறு ஆகுதல் ஆகா.

கொடுப்பவனின்மனமானது, பெற்றுக்கொள்பவனின் மனத்தின்மீது, ஆதிக்கம் செலுத்துவதால், மனிதன் சுதந்திரத்தை இழக்கிறான். அதனால் தானமாக எதையும் யோகீ பெறக்கூடாது.

முற்பிறவியின் நினைவைப் பெறுவதால், தனதுநோக்கத்தில் உறுதி பெறுகிறான். தான் பலதடவை பிறந்து வாழ்ந்ததை உணர்ந்து, இனிமேல் எதற்கும் அடிமையாகாமல் முக்திபெறுவதற்கு யோகீ முயற்சிக்கிறான்.

2. நியமம் (இரண்டாவது யோகாங்கம்)

நியம: = நல்லொழுக்கத்தைப் பெறுவது என்பதுபொருள்.

1. சௌசம், 2. சந்தோஷ:, 3. தப:, 4. ஸ்வாத்யாய: 5. ஈஸ்வரப்ரணி தானம்" என்பன நியமத்தின் இது ஐந்து வகைகள்.

5ல்1. சௌசம் – புறத்தூய்மை என்றும், அகத்தூய்மை என்றும் இருவகை.

"சௌசா ஸ்வாங்க ஜுகுப்ஸாபரை ரஸம்ஸர்க:"

அகப், புறத்தூய்மையில் நிலைபெற்றவனுக்குத் தன் உடல்மீது வெறுப்பும், பிறர்உடல் கலவாமையும் ஏற்படும்.

5ல்2. சந்தோஷ: = மகிழ்ச்சி (ஆனந்தநிலை)

"சந்தோஷாத் தூத்தம: சுக லாப:"

த்ருப்தியினால் எல்லையற்ற ஆனந்தம் உண்டாகின்றது.

5ல்3. தப: = தவம். (மாசுநீக்கி தூய்மைத்திறன்பெறுதல்)

"காயேந்திரிய ஸித்தி ரசுத்தி க்ஷயஸ் தபஸ்:" என்றவசனப்படி,

தவத்தின் பயனாவது, உடலிலும் புலன்களிலும் உள்ள அழுக்குகளை அழித்து, அகற்றி, ஆற்றலைக் கொடுப்பது.

5ல்4. ஸ்வாத்யாய: = (இது வேத ஆகம அறநூல்களைப்பயிலுதல்)

வேதங்களையும், ஆகமங்களையும், மற்றய சாஸ்திரங்களையும், புராணங்களையும், இதிஹாசங்களையும் படிப்பது. அறநூல்களை கற்பதுஆகும்.

"ஸ்வாத்யாயா திஷ்ட தேவதா ஸம் ப்ரயோக:"

மந்திர ஜபத்தினால் இஷ்டதேவதைகளின் காட்சி கிடைக்கின்றது. ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு உன்னதநிலைக்குச் சென்று, அங்குள்ள தேவதைகளின் காட்சியைப்பெற விரும்புகின்றாரோ, அவ்வளவுக் கவ்வளவு கடினமாகப் பயிற்சிதேவைப்படுகிறது. யோகியர்க்கு.

5ல்5. ஈஸ்வர ப்ரணிதானம் = இறைவழிபாடு. (சிவபூஜைசெய்தல்).

"யதா சக்தி அர்சனம் பக்த்யா ஏதத் ஈஸ்வர பூஜனம்"

நமது சக்திக்கு இயன்றவாறு இறைவனை பக்தியுடன் அர்ச்சிப்பது ஆகும். யோகியர்க்கும் ஞானியர்க்கும் அகவழிபாடு வேறுவேறு வழிமுறையில் மனதால் செய்யத்தக்கது.

யமம், நியமம் என்ற இவை இரண்டும் இல்லை என்றால் யோகப்ப யிற்சி எதுவுமே கைக்கூடாது. இவ்விரண்டும் நிலைநாட்டப்பட்டால்தான், ஒருயோகியானவர் தமது யோகஅனுபவத்தின் நன்மைகளை, அடையத் தொடங்குவார்.

3. ஆஸனம் (மூன்றாது யோகாங்கம்)

ஸமாதௌ யோக்ய: ஸ்யாத் ஆஸனம் என்ற வசனப்படி,

சமாதியில் உடல்நிலையாக இருந்திட உதவுவது ஆஸனம் எனப்படுவதாம்.

தேஹாஸனம் உடலை அசையாது அமர்த்தும்நிலை யோகப் பயிற்சியில் சில உயர் நிலைகளை சுலபமாக பெறுவதற்கு இந்த ஆஸனம் உதவுகின்றது. எந்த ஆஸனம் எவருக்கு பயிற்சி செய்ய

இலகுவாக இருக்குமோ, அதை அவர் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ஆகமத்தில், கோமுகம், ஸ்வஸ்திகம், பத்மம், அர்தசந்திரம், வீரம், யோகம் போன்ற பலஆசனங்கள் கூறப்பட்டுள்ளன.

4. ப்ராணாயாமம் (நான்காவது யோகாங்கம்)

ப்ராணாயாம: = (ப்ராண: + ஆயாம:) = ப்ராணாயாமம்.

ப்ராணனை அடக்கிஆளுதல் என்று பொருள். (மூச்சுப்பயிற்சி)

ப்ராணவாயுவை நீண்டநேரம் இதயத்துள் நிறுத்திவைத்து, தாக்குப்பிடித்தல் என்பது மற்றொரு அர்த்தம். ப்ராணாயாமம் என்பது சுவாசத்தைப்பற்றியது அல்ல. ப்ராணாயாமத்தை உணர்ந்து கொள்ள உதவும் பல பயிற்சிகளுள் சுவாசமும் ஒன்று. மனிதஉடலில் இப்பிராணன் நன்குபுலனாகும் இடம் நுரையீரல்களின் இயக்கமாகும்.

ப்ராணன் நரம்புகளின் மூலம் தசைகளுக்குச் சென்று, அங்கிருந்து சுவாசப்பையை அடைந்து, அவற்றை ஒரேவகையில் அசையச்செய்யும் சக்தியே ப்ராணன். அந்த ப்ராணன் கட்டுப்படுத்தப்பட்ட பின்பு மற்ற எல்லா ப்ராணன்களும் கட்டுப்பாட்டின்கீழ் வருபவை ஆகும்.

“ஸ்வாச ப்ரஸ்வாசயோர் கதி விச்சேத: ப்ராணாயாம: |

என்ற இலக்கணப்படி உள்மூச்சு வெளிமூச்சு இவற்றை ஒழுங்குப்படுத்துவது ப்ராணாயாமம் எனப்படுவதாகும். இந்த ஒரு ப்ராணாயாமத்தில், மூன்றுபகுதிகள் கூறப்படுகின்றன. அவை 1. பூரகம், 2. கும்பகம், 3. ரேசகம் என்பன ஆகும்.

வெளியேஇருக்கும் காற்றை உள்ளே இழுப்பது – பூரகம் எனப்படுவதாகும். பின்பு பூரித்தகாற்றை உள்ளேயே தக்கவைப்பது – கும்பகம் எனப்படுவதாகும். பின்பு உடம்பில்உள்ள காற்றை வெளியேவிடுவது – ரேசகம் எனப்படுவதாகும்.

ப்ராணாபான ஸமாயோக: ப்ராணாயாம இதீரித: |
ப்ராணாயாமஸ் த்ரிதா ப்ரோக்த: ரேச பூரக கும்பகை: ||

ப்ராணன் மற்றும் அபானன் இரண்டின் சேர்க்கையே ப்ராணாயாமம் ஆகும். ஸமாயோக: ப்ராணன் உடம்பின் மேல்பகுதிக்கு பொறுப்பு, அபானன் மார்பின் கீழேஇருக்கும் உடலுக்குப் பொறுப்பு என்று இருவகை காற்றை அறியவும். உடலில் ஐந்துவகையிலும், பத்துவகையிலும் காற்றின்நிலை விளங்குவதாயுள்ளது. அனைத்திற்கும் ப்ராணவாயுவே தலைவன்.

ப்ராணாயாம காலஅளவுமுறை.

12 மாத்ராகால ப்ராணாயாமம் அதமம். கடைநிலைஅளவு.

24 மாத்ராகால ப்ராணாயாம் மத்திமம். நடுநிலைஅளவு.

48 மாத்ராகால ப்ராணாயாமம் உத்தமம் உயர்நிலைஅளவு.

வித்யேதத் ஸர்வஜந்தூனாம் ஸ்வாங்குலீபி ரிதிப்ரியே |
சரீரதா திக: ப்ராணோ தவாதசாங்குல மாநத: ||

ப்ராணன் என்பது என்பது உடலிருந்து மேலே 12அங்குலம்வரை செல்லும். உடம்பிற்குள் ப்ராணன் 96அங்குலம் முழுவதும் இருக்கும். தலைஉச்சிக்குமேல் அதற்குமேல் 12அங்குலம், ஆக உடம்பிலிக்கும் ப்ராணனின் சென்றுவரும் தூரஅளவு 108அங்குலம் ஆகும்.

ப்ராணன் என்ற சக்தி ஒன்றுதான். ஆனால் அவை நாடியின் மூலம்சென்றுஅடையும் இடத்தைப்பொறுத்து, வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றது. அந்தசக்தி பத்து. அவற்றில் ஐந்து முக்கியமானவை. அதிலும் ப்ராணன் அபானன் இரண்டும் முக்கியமானவை ஆகும்.

அதஸ் சோர்த்வம் ச குண்டல்யா: பரீத்ய ப்ராண ஸம்ஞக: |
திஷ்டன் நேதேஷு சக்ரேஷு ப்ரகாசயதி தீபவத் ||

இந்த ப்ராணசக்தி உடல் முழுதும் இருக்கின்றது. இந்த ப்ராணன் உடலினுள் இருக்கிற ஏழு (எல்லா) சக்கரங்கள் மற்றும் அங்குள்ள தேவதைகளையும் ப்ரகாசிக்கச் செய்கின்றது. இந்த ப்ராணாயாமமுறையை வைத்துதான் குண்டலினீ என்கிற குய்யத்துறை பாம்புவடிவ சக்தி எழும்பி, 6சக்ரங்களில் அதோமுகமாயுள்ள தாமரைகளையும், மேலேசெல்லும்போது நிமிரச்செய்து, ஜீவனை சிவனிடம் த்வாதசாந்தத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

சித்தத்தில் இயல்பாகவே எல்லாஅறிவும் இருக்கின்றது. அவை சத்துவகுணத்தால் ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் ராஜசம் மற்றும் தாமசம்

என்ற இரண்டுகுணங்களும் அதனை மூடிக்கொண்டு இருக்கின்றது. ப்ராணாயாமத்தினால் அந்த மறைவு நீக்கப்படுகின்றது. எனவே இனி நம்மால் மனதை ஊக்குவிக்கமுடியும். அந்த ஒருமுகப்படுத்தி குவிக்கமுடியும்.

5. ப்ரத்யாஹாரம் (ஐந்தாவது யோகாங்கம்)

ப்ரத்யாஹாரம் என்பது, மனிதன் ஆற்றல்களைப் பொறிகளின் மூலமாய் புறத்தில்போய் வீணாகசிலவாகி அழியாமல் அவற்றைத் தடுத்து, ஒருமுகப்படுத்தி குவித்தல் ஆகும். இதைச்செய்ய முடிந்தாலே நாம் நல்லொழுக்கம் நற்குணம் வாய்க்கப்பெற்று முக்திபெறும் மார்க்கத்தில் சிறந்த முன்னேற்றத்தைக் காணமுடியும். இந்த ப்ரத்யாஹாரத்தை செய்யவில்லை என்றால், நாம் வெறும் இயந்திரமே.

ஸ்வவிஷயா (அ)ஸம்ப்ரயோகே சித்த ஸ்வரூபானுகார: இந்த்ரியாணாம் ப்ரத்யாஹார: என்கிறது யோகசூத்திரம் தத்தமது விஷயங்களை நீக்கிவிட்டு, புலன்கள் சித்தத்தின் உருவத்தை அடைவதுபோலத் தோன்றுவது ப்ரத்யாஹாரம் ஆகும்.

"ப்ரத்யாஹாரா ச ஸம்ஸர்காத்" பற்றினால் ஏற்படுகின்ற அழுக்கை நீக்குகின்றது.

ப்ரத்யாஹாரத்தை சிறிதுகாலம் பயின்று, அதில் முன்னேற்றம் கண்டபின்பு அதற்கு அடுத்தது தாரணையை பழகவேண்டும். குறித்த சிலஇடங்களில் மனத்தை நிறுத்துவது தாரணா. சான்றாக இதயத்தின் ஒரு புள்ளியின் மீது மனத்தை செலுத்துங்கள். இது மிகவும் கடினமானது. எளிதான வழி, அங்கு ஒரு தாமரைப்பூ இருப்பதாக நினைத்து, அந்தத் தாமரையில்மேலே ஜோதி ஒன்று பிரகாசித்துக்கொண்டு இருப்பதாக நினையுங்கள். அல்லது உச்சந்தலையில் ஸஹஸ்ராரம் என்ற தாமரையில் ஒரு ஜோதி ஒளிர்வதாக எண்ணுங்கள் அல்லது சுஷும்னாநாடியில் பலசக்ரங்களின் மையங்களைப்பற்றி சிந்தியுங்கள். இதுவே ப்ரத்யாஹாரம் எனப்படுவதாம்.

6. தாரணா (ஆறாவது யோகாங்கம்)

"தாரணா" இது ஒருமுகப்படுதல் (ஏகாக்ரதா)

"தாரணாபி: கில்பிஷான்" என்பதினால் தாரணையால், மனத்திலுள்ள அழுக்கு நீங்குகின்றது என்று கூறப்படுகின்றது.

"தேஷுபந்தசித்தஸ்ய தாரணா" என்பதனால் குறித்தபொருளில் மனத்தை நிறுத்திவைத்தல் தாரணை எனப்படுவதாகும். உடலின்

உள்ளேயோ வெளியேயோ உள்ளபொருளின் மீது, மனம் நிலைபெற்று, பஞ்சபூதங்களில் ஏதேனும் ஒன்றில் அந்தநிலையிலேயே மனம் பொருந்தியிருப்பது தாரணை என்பதாகும்.

7. த்யானம் (ஏழாவது யோகாங்கம்)

"த்யானம்" = த்யானம் (எண்ணுதல்) வெளியிலோ அல்லது உள்ளேயோ மனதை ஒரு பொருளின் மீது நிறுத்தி பயிற்சி அளித்தபிறகு, அது இடைவிடாது தொடர்ந்து அப்பொருளையே நோக்கியபடி ஒரேவழியில் ஓடும்சக்தியைப் பெறுவது த்யானம் எனப்படுவதாகும்.

"பரத்யயைகதாநதா த்யானம்"

தாரணையில்கூறிய விஷயத்திலேயே, இடைவிடாது எண்ணஅலை அறிவு ஓட்டம் த்யானம். மனமானது இருதயம், கண்டம் முதலிய குறித்த உறுப்பில் நிற்கமுயல்கின்றது. மற்ற உறுப்பிலிருந்து உணர்வு வராமல் குறிப்பிட்ட இருதயத்திலிருந்தோ, கண்டத்திலிருந்தோ மட்டும் உணர்வைப்பெற்றால், மனமானது வெற்றி பெற்றதாகின்றது. இது தாரணை. மனதை அதேநிலையிலே தொடாப்ந்து வைத்திதருப்பது யோகமார்க்கத்தில் த்யானம் எனப்படுவதாகும்.

8. சமாதி (எட்டாவது யோகாங்கம்)

"ததேவார்தமாத்ர நிர்பாசம் ஸ்வரூப சூன்யமிவ சமாதி:"

ஸமாதி என்பது த்யானிக்கும் பொருளின் வெளித்தோற்றத்தை விலக்கி, உள்பக்கத்தில்மட்டும் அதாவது அதனுடைய கருத்தைமட்டும் த்யானிப்பது ஸமாதி எனப்படுவதாகும்.

"தியானேநேச்வரான் குணான்" என்பதால் ஸமாதியினால் ஆன்மாவின் இறைத்தன்மையை மறைக்கின்ற அனைத்தும் அகன்று, இறைவனின் சிறந்த குணத்தை முழுமையாக உணருகின்றார்கள் யோகிகள்.

"த்ரய மேகத்ர ஸம்யம:" என்பதாக ஒருபொருளில், மூன்று அங்கத்தையும், பழகுவது, ஒரு பொருளைக்குறித்து "த்யானம் தாரணா சமாதி" என்ற இந்த மூன்றையும் பழகுவது **சம்யமம்** எனப்படும் அதாவது முதலில் மனம் ஒரு பொருளின்மீது த்யானம் செய்கின்றது. பிறகு பயிற்சியின் காரணமாக அந்த பொருளின் மீது தொடர்ந்து நிலைபெறுகின்றது. (தாரணை செய்கின்றது) நிலைபெற்ற பொருளின் உட்கருத்தைமட்டும் அல்லது உட்காரணத்தை மட்டும் காண்பது இந்த நிலையில் மனத்திற்கு எல்லாம் வசமாகின்றது.

யோகியரின் உணவு முறை

யோகத்தில் முன்னேற்றத்தைப்பெற விரும்பும் யோகியானவர் முதலில் உணவைடிப்பற்றி அதிககவனம் செலுத்தவேண்டும். உணவு ஒருபடி அதிகமானாலோ அல்லது குறைந்தாலோ அது உடலை பாதிக்கும். இதனால் உடல் நம் கட்டுப்பாட்டை இழந்து மனதை பாதிக்கும். இதனால் யோகத்தின் நன்மைகளை அடைவது கடினமாகும். ஆகவே நமதுஉணவைப் பொறுத்தே நம்முடைய மனவளர்ச்சிப் பண்பு இருக்கும்.

மதங்காகமத்தில் யோகியின் லக்ஷணத்தை கூறும்பொழுது, "ஸ்வல்பாஹாரீ" என்று, அதாவது குறைவாக உணவு உட்கொள்பவர் என்கிறது. "சாந்தோக்யோபநிஷதம்" இவ்வாறு கூறுகின்றது.

"ஆஹார சுத்தெள ஸத்வ சுத்தி:" என்று கூறியுள்ளது அதாவது உணவு சுத்தமாகயிருந்தால்தான் சித்தசுத்தியானது ஏற்படும். சுத்தமான உணவினால் எல்லாநாடிகளும் சுத்திஆகின்றது. நாடிசுத்தியினால் எல்லாவ்யாதிகளும் அழியும். இதற்கு மாறாக "நாதிகம் அன்னம் நாபி ஸ்தோகம் ஸ்வீகர்த்தவ்யம் இதி" இவ்வாறு கூறப்படுவதால் அதிகஉணவும் கூடாது. குறைவான உணவும் கூடாது. மிதமான அளவுடனிருத்தலே நலம். அதிகமாக உண்டால் தேகத்தில் மலம் அதிகமாகும். ஆலஸ்யம் போன்ற தோஷங்கள் தோன்றும். மேலும் உடலில் யோகத்திற்கு தடையான விக்னமான வ்யாதிகள் தோன்றும் உணவுமுறை சரியாகஇருந்தால்தான் யோகாப்யாசம் செய்து அதன்மூலம் சச்கரங்களைக் கடந்து த்வாதசாந்தத்தில் உள்ள சிவனிடம் ஜீவனை சேர்க்கஇயலும்.

யோகப்பயிற்சிக்கு ஆஸனம் முக்கியம். அதுபோன்று உணவுமுறை மிகவும் முக்கியமானது. யோகத்திற்கு தேவையான சூழ்நிலையும் முக்கியம்.

சித்தாந்தசாராவளி எனும் நூலில் "குட்யாவேஷ்டித கேஹமத்ய கலிதே பட்டாதிகே சாஸனே" மூன்று ப்ராகாரம் சூழ்ந்த க்ரஹத்தில், உபத்ரவமில்லாத இடத்தை யோகப்பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

மேலும் மதங்காகமத்தில் கூறப்படுவது யாதெனில் –

ஸர்வ தோஷ விநிர்முக்தம் நிச்சப்தம் ஸ்தானம் உத்தமம் |
சுகுப்தம் சுஸமம் பூதம் நிராபாதம் அனாகுலம் || (யோகபாதம்–3)

என்ற கூற்றால் எந்ததோஷமும் அற்றதும், சப்தமில்லாததும், பாதுகாப்பானதும், சமமானதும், புனிதமானதும் அனுகூலமானதுமான இடத்தில் யோகப்பயிற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று கூறப் பட்டிருக்கின்றது.

மேலும் ஸர்வஞானோத்தரத்தில், யோகம்செய்ய ஏற்ற இடங்கள் கூறப்படுகின்றன. அவை,

சூன்யாகாரே மடே ரம்யே தேவதாயதனே சுபே |
நதீதீரே விவிக்தே வா க்ருஹே கோரவனே (அ)பி வா |
ப்ரச்சன்னே ச விவிக்தே ச நிச்சப்தே ஜனவர்ஜிதே |
யோகதோஷ விநிர்முக்தே நிர்விகல்பே நிராதபே ||

அதாவது உபத்ரவம்இல்லாத இடத்தில், மடத்தில், ஆலயத்தில், நதீ தீரத்தில், வீட்டில், வனத்தில், தோஷங்கள்அற்ற இடத்தில், யோகப் பயிற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

லிங்கபுராணத்தில் கூறப்படும் யோகப்பயிற்சிக்கு ஏற்றஇடங்கள்,

நாநா புஷ்ப ஸமா கீர்ணே விதானோபரி சோபிதே |
பல பல்லவ மூலாட்யே குச புஷ்ப ஸமன்விதே ||

என்றவசனப்படி பலவகைப் பூக்கள் பரவி உள்ள இடம், மேல்கூரைகளால் அலங்கரிக்கப்பட்ட இடம், பழம், தளிர், புல் உள்ள இடங்களில், யோகப்பயிற்சியை மேற்கொள்வது நன்று என்றும் இவ்வாறாக ஆஸனம், கூறப்பட்டிருக்கின்றது. உணவுமுறை, சூழ்நிலைகளின் முக்கியத்துவத்தை ஆகமங்களும் புராணங்களும் மற்றசாஸ்திரங்களும் விளக்குகின்றன.

யோகம் என்பது ஒரு அனுபவம். அந்த அனுபவமானது அப்யாசத்தால் மட்டுமே கிடைக்கும். இந்த அப்யாசத்தைப் பொறுத்து, அனுபவமும், சித்தியும் கிடைக்கும். மனிதர்கள் தேஹத்திற்காகச் செய்யும் பயிற்சி அனைவருக்கும் ஒரேமாதிரியாக இருக்காது. அந்தர்முகமாக செய்யும் அப்யாசத்திற்கு வேறுபாடுகள் நிச்சயமாக இருக்கும். சில விஷயத்தில் ஒற்றுமையும் காணப்படும். என்னதான் விஷயத்தைக் காதால்கேட்டாலும் அதை பயிற்சி செய்யவில்லை என்றால், யோகம் நமக்கு சித்திக்காது. யோகத்தை பொருத்தவரை வயது முதிர்ச்சியை விட அப்யாசமுதிர்ச்சியே தேவையாக உடையது.

விக்ஞானத்திற்கு அப்பாற்பட்ட சூக்ஷ்மமான இந்தவிஷயத்தை அறிந்தால் பலநன்மைகள் கிடைக்கும். அந்தரீதியாக நமக்குள்

சூக்ஷ்மமானவிஷயத்தை அறிவதற்கான வழிமுறைகளை ஆகமங்கள் கூறுகின்றன.

சூக்ஷ்மசரீரத்தின் முக்கியமான சக்திமையங்களாக மூலதாரம் முதலான ஆறுசக்ரங்கள் செயல்படுகின்றன. ஆகமத்தில் சக்ரம் என்றபெயர் பயன்படுத்தாமல் இருந்தாலும், அந்தந்த ஸ்தானத்தின் தன்மைகளையும், அந்த சக்தி மையங்கள் எங்கு இருக்கின்றன என்பதைப்பற்றி மிகவிரிவாக ஆகமம் விவரிக்கின்றது.

ஒரு மனிதன் பிறக்கும் பொழுது, சக்கரங்கள் என்று சொல்லக்கூடிய தேஹமையத் தாமரைகள் அதோமுகமாக இருக்கின்றன. அவன் வளர வளர இந்த சக்திகள் இயங்க ஆரம்பிக்கின்றது. ஆனால் முழுமையாக சக்திகள் பெறுவதற்கு அப்யாசம் தேவை.

நமது பௌதிகஉடலில் இருதயம், கல்லீரல், சிறுநீரகங்கள் என்று ஆதாரங்கள் இருப்பதைப்போன்று, சூக்ஷ்மசரீரத்தை இயக்குகின்ற ஆதாரமையங்களாக சக்கரங்களை கருதலாம். பௌதிக உடல் உருப்புகள், தேவையானசக்தியை சூக்ஷ்மசரீரத்திடமிருந்து பெறுகின்றன. மேலும் இவை ஸ்தூலசரீரத்திற்கு சக்திமையங்களாக விளங்குவதால் இவை உடலுக்கு சக்தி அளிக்கின்ற சக்திகிடங்குகளாகும். எனவே சக்கரங்கள் உடலில் பல்வேறு முக்கிய இயக்கங்களுக்கு காரணமாக இருந்து, சித்திகளுக்கு அப்பாற்பட்ட சிவத்திடம் நம்மை சேர்க்கின்றது.

சத்துக்கள் உடல் முழுதும் செல்கின்றது. எனவே உடம்பு நன்றாக இயங்குவதற்கு நாடிசுத்தி முக்கியமானது. நாடிசுத்தியினால் மனத்தின் சித்தவ்ருத்தி தடுக்கப்பட்டுள்ள நிலைக்கு, செல்ல உதவி புரிகின்றது. இவ்வளவு சிறப்புவாய்ந்த நாடிகள், உடலில் எங்கிருந்து தோன்றுகின்றன என்பதை ஆகமத்தில் கூறிய ப்ரமாணத்துடன் இனிபார்ப்போம்.

சித்தாந்த சாராவளியில்

முதலில் தேகமத்தியத்தை அறியவேண்டும். இதற்கு இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றது.

1. சரீரத்தின்அளவு, அவரவர் கையால் 96 அங்குலம். அதில் மேலே நாற்பத்தேழரைஅங்குலம், கீழே நாற்பத்தேழரை அங்குலம் நடுவேஉள்ள ஒருஅங்குலம் தேஹமத்யமாகும்.

2. குதத்திற்கு இரண்டுஅங்குலம் மேலே, லிங்கத்திற்கு இரண்டு அங்குலம் கீழே, நடுவில்உள்ள ஒருஅங்குலம் உடல்நடுவாகும்.

கந்தஸ்தானம் (தாமரை கிழங்குபோன்ற உடல்பகுதி)

தேஹநடுவிலிருந்து 9அங்குலம் மேல் இருப்பது கந்தஸ்தானம் (கிழங்கு ஸ்தானம்) இது முட்டைப்போல் நான்கு அங்குலத்திற்கு உண்டாகியிருக்கும். கிழங்கிலிருந்து முளைகள் உதிப்பதுபோல், நாடிகள்உதிக்கும் இந்தஇடத்திற்கும் கந்தஸ்தானம் (கிழங்கு ஸ்தானம்) என்றுபெயர். இந்த கந்தத்திற்கு, கீழும் மேலும் பல நாடிகள் இருக்கின்றன. நாடிகள் கணக்கற்ற அளவில் இருந்தாலும், உடம்பில் வலதுபக்கம் 72000 நாடிகள் இடதுபக்கம் 72000 நாடிகள் இருக்கின்றன. இவற்றில் 14நாடிகள் முக்கியமானவை. அதிலும் மூன்று நாடிகள் மிகவும் முக்கியமானவை. அவை இடா, பிங்களா, ஸுஷும்னா.

ப்ரமமான இந்த ஸுஷும்னாநாடியானது கந்தத்தின் நடுவிலிருந்து மேல்நோக்கி தோன்றுகின்றது. துளைபொருந்திய சுஷும்னா நாடி முதுகுதண்டினை ஒட்டிஇருக்கும். இந்தநாடிக்கு வலதுபக்கம் இடா என்ற நாடி "ஹம்" என்றும் இடதுபக்கம் பிங்களாநாடி "ஸம்" என்றும், (ஹம்சம்) அஜபாமந்திரத்துடனும் ஸுஷும்னாநாடியின் கீழே ஓம் என்ற சப்தம் சூக்ஷ்மமாக ஒலித்துக்கொண்டும் இருக்கும். இந்த ஸுஷும்னாவைச் சுற்றி இடைபிங்களை ஆகிய இரண்டும், மாறிமாறி சுற்றி இருக்கும். இவ்வாறு சுற்றும்பொழுது ஆரம்பத்தில் (கந்தத்தில்) ஒரு வளைவும் (முடிச்சும்) நாபியளவில் ஒருவளைவும் (முடிச்சும்)

இதயத்தில் ஒருவளைவும் (முடிச்சும்) கண்டத்தில் ஒருவளைவும் (முடிச்சும்) நெற்றிஅளவில் ஒருவளைவும் (முடிச்சும்) இடா, பிங்களா, ஸுஷும்னாவை விட்டு, நாசிகைமுனையிலேயே தங்கும். (முடிச்சுகளுக்கு) இந்த வளைவுகளுக்கு பஞ்சக்ரந்தி என்றுபெயர். ஸுஷும்னாவானது வீணாதண்டத்திலிருந்து கபாலத்தை முட்டி நிற்கும். இந்த ஸுஷும்னாவை ஒட்டிதான் குண்டலினி இருக்கும்.

குண்டலினி உருவத்தைப்பற்றி ஶ்ரீமன்மகுடாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

புஜங்க வலயாகாரம் அஷ்ட வர்த்துல மேவ ச |
குண்டல்யாக்யா மஹாநாடீ பானுமண்டல முச்யதே ||

வட்டமாய் சுற்றியுள்ள பாம்பை போன்றும், எட்டுவளையம் உடையதுமான அந்த மஹாநாடிக்கு "குண்டலினி" என்று பெயர்.

அஷ்டப்ரகரணத்தில், விசேஷ சப்தார்த்தசூசிகையில், குண்டலினீ என்றபதத்திற்கு "ஸா ச குண்டலினீ சம்போ: சக்திஸ் சுத்தா

ஜடாத்மிகா" என்று கூறி எந்த குண்டலினீ சக்தி சிவபெருமானின் சக்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சக்ரம்

சக்கரத்தின் எண்ணிக்கை சாஸ்திரத்திற்கு சாஸ்த்ரம் வேறுபடுகின்றது.

அதர்வனவேதத்தில் "அஷ்ட சக்ரா நவ த்வாரா" என்று எட்டு சக்ரத்தைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது.

யோகாஸூத்திரத்தில் சக்ரம் என்றசொல்லை "நாபி சக்ரே" என்று நாபிக்கு மட்டும் கூறுகின்றார். பதஞ்சலி ஸம்யம ஸ்தானங்களாக நாபி, கண்டம்,ஹ்ருதயம், சிரஸ் என்பதைக் கூறுகின்றார்.

சைவ ஆகமத்தில் சக்ரம்

அந்தர் மாத்ருகா ந்யாசம் என்று சொல்லக்கூடிய அக்ஷரந்யாசத்தில் யோகதாரணைக்கு இன்றைய காலகட்டத்தில் கூறக்கூடிய சக்கரங்களைப் பற்றிய விவரங்கள் தெளிவாகக் கூறப்பட்டு இருக்கின்றன. ஆகமயோகபாதத்தில் நாடீசக்ர விதானவிதி படலம் உள்ளது.

ஆகமத்தில் யோகஸ்தானங்கள்

சிவனை நம்முடைய ஸூக்ஷ்மதேஹத்திலே வைத்து, உபசானை செய்வதற்கு நாடீஸ்தானங்களையும், உடல்உறுப்பு ஸ்தானங்களையும், ஆகமம் கூறுகின்றது.

க்ரந்தத்தின் பெயரும்	ஸ்தானங்களின் பெயரும்
மகுடாகமம் நூலில்	மூலாதாரம், நாபி, ஹ்ருதயம், கண்டம், தாலு (5)
சிவார்சனாசந்த்ரிகா நூலில்	ஹ்ருதயம், கண்டம், தாலு, ப்ரூமத்யம், ப்ரஹ்மரந்த்ரம் (5)
க்ரியாக்ரமத்யோதிகா நூலில்	ஹ்ருதயம், நாபி, ப்ரூமத்யம்
சித்தாந்தசாராவளி நூலில்	கந்தத்திற்குக்கீழ், கந்தகமலம், நாபி, ஹ்ருதயம், கண்டம், தாலு, ப்ரூமத்யம், ப்ரஹ்மரந்த்ரம், சிரசுக்குமேல், த்வாதசகமலம் (10)

பஞ்சபூதமயமான இந்த சரீரத்தின் ஸூக்ஷ்மசரீரத்தை சிவாகமங்கள் பலவித ஆதாரத்தைக்கொண்டு பிரிக்கின்றன. அவைகளை கீழே காண்போம்.

பூதங்களுக்குரிய ஸ்தானத்தை வைத்தும், ஸகல, ஸகலநிஷ்கல, நிஷ்கல என்ற ரூபத்தைவைத்தும், சத்வ, ரஜஸ், தமஸ் என்ற குணத்தை வைத்தும், காரனேச்வரர்களை வைத்தும், (ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர், ஈஸ்வரர், ஸதாசிவர்)

ஷடத்வாவைக்கொண்டு (மந்த்ர பத, புவன, கலா, தத்வ, வர்ண) ஸூர்ய, சந்த்ர, அக்நியைக் கொண்டும், சித்தாந்தசாராவளியில் கந்தத்திற்குக்கீழ் ஸ்தானத்திலிருந்து, ப்ரஹ்மரந்த்ரம்வரையில் ஸகலஸ் தானம் என்றும், அதற்குமேல் சிரஸ், த்வாதசகமலம்வரை நிஷ்கலஸ் தானம் என்றும் கூறப்பட்டுள்ளது.

நாடிஸ்தானத்தில் உள்ள தாமரை இதழ்களின் எண்ணிக்கை

க்ரந்தத்தின் பெயர்	ஸ்தானங்கள்	தாமரைப்பூ இதழ்கள்
மகுடாகமம்	மூலாதாரம், நாபி, ஹ்ருதயம், கண்டம், தாலு ஆகிய (5)	எல்லாம் 8 இதழ்கள்
சிவார்சனாசந்த்ரிகா	ஹ்ருதயம், கண்டம், தாலு, ப்ரூமத்யம், ப்ரஹ்மரந்த்ரம் (5)	இதழ்களைப் பற்றி காணப்படவில்லை
க்ரியாக்ரமத்யோதிகா	ஹ்ருதயம், நாபி, ப்ரூமத்யம்(3)	அதோமுகபத்மம்
சித்தாந்தசாராவளி	1. கந்தத்திற்குகீழ் 2. கந்தகமலம், 3. நாபி, 4. ஹ்ருதயம், 5. கண்டம், 6. தாலு, 7. ப்ரூமத்யம், 8. ப்ரஹ்மரந்த்ரம் 9. சிரசுக்குமேல், 10. த்வாதசகமலம்	4, 6, 10, 8, 16, 24, 4, 16, 9 1000 (10ல்)

சிவப்ரதிஷ்டாவிதியிலும் க்ரியாக்ரமத்யோதிகையிலும் உள்ள பூத சுத்தியில் "ஹ்ருந் நாபி பிந்து ஸ்தானானி பூஜாஹோமசமாதீனாம் "ஸ்தானானி" என்ற வாக்கியத்தின்படி, ஹ்ருதயம் (கமலம்) நாபி (குண்டம்) ப்ருமத்யம் பிந்து (ஸ்தானம்) என்ற இந்த மூன்றும் சிவனை உபாசிப்பதற்கான இடங்களாக அகோரசிவாசார்யார் கூறுகின்றார். இவற்றில் சிவனை இருதயத்தில் பூஜித்தும், நாபியில் ஹோமம் செய்தும், பிந்துவில் ஸ்வாமியை சிந்திதும் வழிபட அகத்தை வேண்டும் என்று கூறுகின்றார்.

ஷட்சக்ரம் (ஷடாதாரம்)

முன்பு கூறியதுபோல் சைவபத்ததிகளில் உள்ள அந்தர்மாத்ருகா நியாஸத்தில் ஷட்சக்ரவர்ணனை கூறப்பட்டுள்ளது.

லலிதா ஸஹஸ்ரநாமம்

அம்பாளை ஆறு சக்ரங்களுக்கு மேல் இருப்பவள் என்று கூறுகின்றது. லலிதா ஸஹஸ்ரநாமம் சக்ரங்களுக்கு முக்கியத்துவத்தை தரும் சாக்த தந்த்ரத்தில் முதல் சக்ரமான மூலாதாரத்தில் ப்ரஹ்மாவை பற்றி வர்ணனை வருகின்றது. தொடர்ந்து விஷ்ணு ருத்ரன், மகேஸ்வரன், சம்பு, சதாசிவம் என்று சக்ரஅதிதேவதைகள் காணப்படுகின்றனர். எனவே மூலாதாரத்தில் கணபதியை பூஜிக்கவேண்டும் என்று சாக்தத்தில் இருப்பதாக தெரியவில்லை. அதர்வண உபநிஷதம் "த்வம் மூலாதாரே ஸ்திதோஸி நித்யம்" என்று கணபதியைக்கூறும். பட்டியலில் கூறியபடி பூஜைசெய்தால் ப்ரஹ்மா முதல் மகேஸ்வரர் வரை ஸ்தானங்கள் மாறுபடும்.

அடியிலுள்ள மூலாதாரம் தொடங்கி மேலே உள்ள சகஸ்ராரத்தில் முடிவுபெறும் முதுகு தண்டில் பல சக்ரங்களாகிய சக்திமையங்கள் அமைந்து இருக்கின்றன.

அவை 1. மூலாதாரம், 2. சுவாதிஷ்டானம், 3. மணிபூரகம், 4. அனாஹதம், 5. விசுத்தி, 6. ஆக்ஞா, 7. சஹஸ்ராரம். மூலாதாரத் திலிருந்து ப்ரஹ்மரந்த்ரம் வரையுள்ள ஒவ்வொரு சக்ரத்தையும் கடப்பதே ஷட்சக்ரயானக்ரமமாகும்.

மூலாதாரம்துவங்கி ஸஹஸ்ராரம்வரையில் உள்ள சக்ரங்களில் இடம் அக்ஷரம் தாமரை இதழ்களின் எண்ணிக்கை தேவதையின் பெயர் முதலியன கொடுத்துவிட்டு அவற்றை த்யானிக்க சிந்திக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கதம்ப புஷ்ப வர்ணஞ்ச அஷ்ட பத்ரம் த்ரிகோணகம் |
மூலாதாரம் இதம் ப்ரோக்தம் த்விதீயம் நாபி மூலகம் ||

காரணேச்வரர்கள் (ஐந்தொழிற்காரணகர்த்தாக்கள்)

சைவாகமபரம்பரையில், ஸ்தூலஉலகத்தையும் (ப்ருதிவி போன்ற பூதங்கள்) ஸூக்ஷ்ம உலகத்தையும் (சரீரம் கொண்ட எல்லா ஜீவராசிகளிலும் ப்ருதிவி போன்ற பூதங்கள் ஸூக்ஷ்மமாக உள்ள இடம்) கலை, வர்ணம், புவனம், பதம், மந்த்ரம், தத்வம், பஞ்சபூதங்கள், காரணேச்வரர்கள் என்று பிரிக்கப்படுவது என்பது சைவாகமத்தில் ப்ரசித்தமானது.

மேலே கூறப்பட்டுள்ள கலை முதல் காரணேச்வரர்கள் வரை ஒன்று மற்றொண்டுடன் தொடர்பு கொண்டுள்ளது.

உதாஹரணத்திற்கு

கலை என்பதை எடுத்துக்கொண்டால் சாந்தியதீதகலை, சாந்தி கலை, வித்யாகலை, ப்ரதிஷ்டாகலை, நிவிருத்திகலை என்று ஐந்துகலைகள் உள்ளது. இதில் ஒவ்வொரு கலைக்கென்று வர்ணம், புவனம், பதம், மந்த்ரம், தத்வம், பூதம், காரணேச்வரர் என்பது உண்டு.

இதேபோன்று மற்றவைகளுக்கும் தொடர்புஉண்டு. இங்கு நாம் காரணேச்வரர்களை அடிப்படையாகக்கொண்ட முறையைக் காண்போம்.

சிவத்தின் ஆயிரத்தில் ஒரு அம்சம் அனாச்ருததேவர் அனாச்ருத தேவரை சூழ நான்குதிக்கிலும் அனாதர், அனந்தர், வ்யோமரூபர், காரணவ்யாபர் என்னும் நான்குபேறும் அனாச்ருததேவரை சேவித்துக்கொண்டு இருப்பார்கள்.

அனாதர் முதலான நான்குபேரும் சிவாம்சமே ஆவார்கள். இந்த ஐந்துபேரும் சுத்மாயையில் பஞ்சக்ருத்தியங்களையும் செய்கின்றார்கள்.

அனாச்ருததேவரின் காரியேச்வர்களாபன ஐந்துபேரும், அசுத்தமாயையில், சதாசிவாதியர்களின் பஞ்சக்ருத்தியங்களையும் செய்கின்றார்கள்.

சிவபெருமானின் நவ வடிவங்கள் (நவதத்துவம்)

சிவம், சக்தி, நாதம், பிந்து = இவைநான்கும் அரூபம் (4)

சதாசிவர் = இது ஒன்று ரூபாரூபம் (1)

மஹேஸ்வரர், ருத்ரர், விஷ்ணு, ப்ரஹ்மா=இவை நான்கும் ரூபம் (4)

இவ்வாறு மூன்றுநிலையில் ஒன்பதுதத்வங்கள் கூறப்படும்.

பஞ்சக்ருத்தியங்கள் (ஐம்பெரும்தொழில்கள்)

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபாவம், அனுக்ரஹம் ஆகிய ஐந்து வகைத்தொழில்களுக்கும் காரணேச்வரர்கள் என்பவர்கள் ஐவர். இவர்கள் பல்லாயிரம்கோடி அண்டங்கள் எனப்படும் உலகம்முழுமைக்கும் ஏகாதிபத்ய அதிகாரிகள், இவர்களுக்கு அண்டம்தோறும் கார்யேஸ்வரர்கள் வெவ்வேறான அதிகாரிகளாக இருப்பார்கள். காரியேஸ்வரர்களுக்கு தத்தம் காரணேச்வரர்களுக்கு உரிய சின்னங்களும் நாமங்களும் உண்டு. ஒவ்வொரு காரணேச்வருக்கும் நான்கு வ்யூகர்கள் உண்டு. இவர்களின் பெயர்களும் அதே போன்று ஒவ்வொரு காரணேச்வரரும் பஞ்சக்ருத்தியங்களையும் செய்யும், இயற்றும் அதிகாரம் இருப்பினும் அவர்களுக்கு உரியக்ருத்தியம் (தொழில்) முக்கியமாக ஒன்று உண்டு இவற்றைப்பற்றியும் கீழேகாண்போம்.

வ. எண்.	பிரம்மம் காரணேச்வரர்கள்	விரிந்தோர் வ்யூகர்கள்	ஐந்தொழில்கள் க்ருத்தியங்கள்
1.	ப்ரஹ்மா (அயன்) (நான்முகன்)	ஹிரண்யகர்பர், விராட்புருஷன்	ஸ்ருஷ்டி (படைத்தல்)
2.	விஷ்ணு (ஹரி) திருமால்	வாசுதேவர், அனிருத்தர், ப்ரத்யும்னர் சங்கர்ஷனர்	ஸ்திதி (காத்தல்)
3.	ருத்ரர் (ஹரர்)	சிவன், குஹர், ம்ருடர், பவர்	சம்ஹாரம் (ஒடுக்குதல்)
4.	மஹேச்வரர்	ஈசர், விச்வேசர், பரமேஸ்வரர், ஸர்வேஸ்வரர்	திரோபாவம் (மறைத்தல்)
5.	ஸதாசிவர்	மஹேஸ்வரர், ருத்ரர், விஷ்ணு, ப்ரஹ்மா	அனுக்ரஹம் (அருள்தருதல்)

சிவார்சனாசந்த்ரிகையில் அப்பய்யதீக்ஷிதர் விவரித்துள்ள காரணேச்வரர்கள் அவர்களுடைய ஸ்தானம், அத்வாக்கள் மேலும் அங்கு அவர் கூறிய மற்ற விவரங்களை சித்திரத்திலும் பட்டியலிலும் காண்போம்.

கலை	தத்துவம்	புவனம்	வர்ணம்	பதம்	மந்த்ரம்
சாந்தியதீத	2	15	16	1	3
சாந்தி	3	18	3	11	2
வித்யா	7	27	7	20	2
ப்ரதிஷ்டா	23	56	24	21	2
நிநவ்ருத்தி	1	108	1	28	2
5 அத்வா	36	224	51	81	11

காரணேச்வர த்யாகக்ரமம்

"ப்ரஹ்மாதி காரணத்யாக க்ரமேன" என்ற வசனத்தின்படி ஒவ்வொரு உத்காதத்தினாலும் ஜீவனை ப்ரஹ்மாதி காரணேச்வரர்களை விட்டுவிட்டு "த்வாதசாந்தே சிவே ஸம்யோஜயேத்" என்ற வசனத்தின்படி த்வாதசாந்தத்தில் சிவனை எண்ணி சிவனிடத்தில் சேர்க்கவேண்டும் என்பது தெரியவருகின்றது.

மேலே கூறிய வசனங்களின்படி ப்ரஹ்மாவை விட்டுக்கடந்து அடுத்த நிலைக்கு செல்லவேண்டும் என்பதிலிருந்து ப்ரஹ்மாவைவிட விஷ்ணுவும், விஷ்ணுவைவிட ருத்ரரும், ருத்ரரைவிட மகேஸ்வரரும், மகேஸ்வரரைவிட சதாசிவரும், அதிக சக்திபொருந்தியவர் என்பதை அறியமுடிகின்றது.

ஆனால் காரணேச்வரர்களை எவ்வாறு த்யாகம் செய்யவேண்டும். எந்தமுறையை அனுசரித்து (ப்ராணாயாமம், பீஜாக்ஷர உச்சாரணம், த்யானம் முதலிய முறைகளில்) த்யாகம்செய்யவேண்டும். என்பது பற்றிய விவரங்கள் காணப்படவில்லை.

நடைமுறையில் ஒருகுணத்தை மற்றொரு குணத்துடன் இணைத்து குணத்தை தத்துவத்துடன் இணைத்து இறுதியில் சிவனிடத்தில் லயம் அடைந்ததாக பாவிக்கிறோம். இப்பொழுது குணம் போன்றவைகள், சிவனிடத்தில் பாவனையின்மூலம், லயம்ஆகின்றது. ஆனால் காரணேச்வரர்களை எந்த வழிமுறையில் விடுவது என்பதைப்பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.

ஆகமக்ஞர்கள் கும்பகநிலையில் மேல்நோக்கிய உத்காதமுறையால் கடந்துசெல்ல வேண்டும் என்பார்கள்.

சிலசமயங்களில் சூக்ஷ்ம சரீரத்திற்கு பாதிப்புஏற்பட்டு சக்ரங்களின் செயல்கள் நின்றுபோகும். அப்பொழுது எந்த சூக்ஷ்ம சரீரத்திற்கு ப்ராணனை அளித்து சக்தி ஊட்டுவதன் மூலம் எல்லா சக்ரங்களும் இயங்கி இந்த ஜீவாத்மா பரமாத்மாவான சிவனை அடைகின்றது.

நமது சரீரமானது பஞ்சபூதங்களான ப்ருதிவி, அப், தேஜஸ், வாயு, ஆகாசம் ஆகியவைகளால் ஆனது. இவற்றின் சூக்ஷ்மசரீரங்கள் சக்ரங்கள் "யதா அண்டே ததா பிண்டே" என்ற வாக்கியத்திற்கு ஏற்ப வெளியில் அண்டத்தில் இருக்கும் அனைத்தும் நம்முடைய சரீரத்தில் சூக்ஷ்மமாக இருக்கின்றது.

சரீரத்தில் உள்ள ஏழு தாதுகள்	சப்த த்வீபங்கள் அம்சம்
வேர்வை, கண்ணீர், போன்ற ஜலம்	ஸப்த ஸமுத்ரம்
முதுகு எலும்பு	மேருமலை அம்சமானது
ஊடலில் இருக்கும் 33எலும்புகள்	33 குலபர்வதங்கள்

ஸூதஸம்ஹிதையில் ஹடாதாரக்ஷேத்ரங்கள் கூறப்படுகின்றன.

ஸ்ரீ பர்வதம்	கைலாசகிரி	தலை	தலைஉச்சி
கேதாரம்		நெற்றி	லலாடம்
வாராணசீ	காசீ	புருவம்	பிந்து
குருக்ஷேத்ரம்		மார்பு	உரஸ்
ப்ரயாகை		இருதயம்	உள்ளம்
சிதம்பரம்	தில்லை	ஆதாரம்	மூலஸ்தானம்

இவ்வாறு நமதுசரீரத்தில் சூக்ஷ்மமாக எல்லாம் நம்உடலில் இருக்கின்றது.

நாடிசுத்தியால் நலம்பெறுதல்

நாடிசுத்தியானால் சுஷும்னாவில் அதோமுகமாக மொட்டாக உள்ள தாமரைகள் மேல்நோக்கி மலர்ந்து, குண்டலினியை சுஷும்னா நாடிவழியாக ஸஹஸ்ராரத்தை ஆன்மா சென்று அடையும். இனி நாடியைப்பற்றி பார்ப்போம்.

நாடி என்பது மிகவும் சூக்ஷ்மமான ஒன்று. நாடியின் வாயிலாக ப்ராணன் மற்றும் உணவின் காரணேச்வரர்கள் பல அண்டங்களுக்கு அதிபதிஆவார்கள். இவர்களை அவர்களுக்குரிய இடத்தில் உபாசணைசெய்வதால் அணிமாதிசித்திகளை அடைவது மட்டுமின்றி

அக்னி, ஸூர்ய, சந்திர ஸ்தானங்களைக் கடந்து ஸதாசிவ ஸ்தானத்தை அடையலாம். பிறகு அங்கிருந்து த்வாதசாந்தத்திலுள்ள சிவபெருமானிடத்தில் லயம் செய்துகொள்வதின் மூலம், சிவோஹம் என்ற பாவனையானது ஏற்படும்பொழுது சிவயோகி என்ற தகுதியை ஆசாரியர் அடைகின்றார். "சிவீ பூய சிவம் யஜெத்" என்ற வசனத்திற்கு ஏற்ப ஆசாரியர் சிவனாகமாறி, சிவனுக்கு பூஜைசெய்கின்றார். இந்த பாவனையுடன் செய்யும் பூஜையால் எல்லா ஜீவராசிகளும் சகல நன்மைகளைப்பெற்று சர்வஜ்ஞரான பரமேச்வரரின் அனுக்ரஹத்தை பெறுவது என்பது திண்ணம்.

வாழ்க சீர்அடியாரெல்லாம்

சுபம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ சிவாப்யாம் நம:

ஆகம க்ரியாணாம் யோக்யகால விதானம்

கட்டுரையாளர்

மீமாம்ஸா சிரோமணி, ஜோதிட பண்டிதர்

சிவஸ்ரீ சி. கீதாசங்கர குருக்கள், புதுவை.

திக்காலா த்யனவச்சின்ன அநந்த சின்மாத்ர மூர்த்தயே |
ஸ்வானுபூத் யேகமானாய நமச் சாந்தாய தேஜஸே ||
சௌரமண்டல மத்யஸ்தம் ஸாம்பம் ஸம்ஸார பேஷஜம் |
நீலக்ரீவம் விரூபாக்ஷம் ப்ரணதோஸ்மி ஸதாசிவம் ||

உலகெலாம் உள்ள உயிர்கள் யாவும் இன்புற்று வாழ்ந்திட அவ்வுயிர்களிடம் கொண்டுள்ள தனிப்பெருங்கருணையினால், படைத்துக் காத்தருள்செய்து, ஐந்தொழிலாற்றிவரும் பரம்பொருளான சிவனார் அருளிய நூல்களே சிவாகமங்கள். ஜோதிஸ்வரூபராக இருந்து, சூரியன் முதலிய ஸகல தேஜோமூர்த்திகளுக்கும் ஒளி தந்தருளும் ஒப்பிலாப் பெருஞ்ஜோதி சிவனே ஆவார். “ஜோதிஷாம் ஜோதிரேகம் தன்மே மனச் சிவஸங்கல்ப மஸ்து” என்கிறது வேதம். வேதாகம நெறிகளில் நாம் கிரியைகளைச்செய்து, பயன்பெறவே ஜோதிஷ சாஸ்தரம் வேதாங்கமாக விளங்குகிறது.

வேதம் மந்திரவடிவம் ஆகமம் தந்த்ரஞானவடிவம். இவ்விரண்டிற்கும் வேறுபாடில்லை இரண்டும் சுருதியே ஆகும். நாம் கண்ணால் கண்டுகளித்து வணங்கத்தக்க கண்கண்ட தெய்வங்களே சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் முதலியன. இவற்றின் அசைவு, போக்கு, ஒளி, அளவு இவற்றை கொண்டு கணிக்கப்பட்டு கூறப்படுவதே ஜோதிஷகாலம் ஆகும். உரிய காலத்தில் செய்யப்படுகிற அனுஷ்டானம், பூஜை, யாகம் முதலியனவே நற்பயனைத் தருவனவாகும். எனவேதான், வேதநெறியில் விளக்கிடும் யாகாதிகர்மகாண்டவிதிமுறைகளை சிரௌதசூத்திரமும், ஆகமநெறி கர்மகாண்டங்களை விதிக்கும் சைவாகம கிரியாபாத சிவசாஸ்திர வசனங்களும் ஒரு கிரியையை

விதிக்கும்பொழுது முதலில் அதற்கு உரிய ஏற்ற காலத்தை விதித்து, உள்ளன. இதுவே காலவிதானம் எனப்படுகிறது. **வேதம் விதித்ததே விதி. ஆகமம் விதித்ததே கிரியை.**

ஞானகிரியாரூபமாய் தெய்வத்தின் திருவுருவாய், இரு கண்களாய் விளங்குவனவே இவ்விரு நூல்கள் காலம் என்பது, உலக உபாதானகாரணமான மாயையிலிருந்து முதலில் உதித்த தத்துவம் என்று சிவாகமங்கள் கூறும். இது அனாதி ஆகும். இருப்பினும் இது சூக்ஷமம் என்றும் ஸ்தூலம் என்றும் இருவகையாகவும் சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று வகையாகவும் சாஸ்திரங்களில் பகுக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

இதில் ஸ்தூலகாலத்தை விளக்குவது **பஞ்சாங்கம்** எனப்படும். இது திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் எனப்படும் ஐந்து உறுப்புகளைக் கொண்டது.

ஆகமங்களில் கிரியைகள்

கிரியைகள் நித்தியாதி கருமங்களாய் மூவகையாகும். நித்தியம், நைமித்திகம், காமியம் என கிரியைகள் மூன்றாகும். இம்மூன்றும் நித்தியம், நித்தியாங்கம் என்றும், நைமித்திகம், நைமித்திகாங்கம் என்றும் காம்யம், காம்யாங்கம், என்றும் ஒவ்வொன்றும் இவ்விரண்டாய் ஆறு வகைப்படும். இது ஆத்மார்த்தம் பரார்த்தம் என இருவகை. நித்திய கருமங்கள் என்பவை ஸ்நானம், தர்ப்பணம், சிவார்ச்சனை, அக்னிகாரியம், செய்தலும், பிறவுமாகும். நித்தியாங்க கருமங்கள் என்பவை நித்திய கருமலோபம் வந்தபோது, அதற்குப் பரிகாரஞ் செய்தலும், ஆலயத்தில் அஷ்டபந்தன சலனம் வந்தால் மீளவும், அஷ்டபந்தனம் சாத்துதல், ஓராண்டு கால பிராயச்சித்தமாக சுவாமிக்கு பவித்திரம் சாத்துதலும், சிவராத்திரி அர்த்தோதயம், மகோதயம், அபரபக்ஷ அஷ்டமி, பூர்வபக்ஷ அஷ்டமி, பிரதோஷம் அமாவாசை, பௌர்ணமி, சூரிய, சந்திர கிரஹணங்கள், மாதபிறப்பாகிய மாச சங்கிராந்தி, முதலிய புண்ணிய காலங்களில் விசேஷ பூஜை செய்தலும் பிறவுமாகும்.

நைமித்திக கருமங்கள் பிரதிஷ்டை, தீக்ஷை, மஹோற்சவம், இறைவனுக்கான நவகலசஸ்நபனம், அஷ்டோத்தரசத கலசஸ்நபனம், ஸகஸ்ரகலச ஸ்நபனாதி அபிஷேகங்கள் முதலியனவாகும். நைமித்திகாங்க கருமங்கள் பிரதிஷ்டை முதலியவற்றிற்கு

ஆசாரியதக்ஷிணையும், தீக்ஷைக்குச் சபிண்டீகரணத்துடன் கூடிய அந்தியேஷ்டியுமாகும். காமியகருமங்கள் சித்திகளைப் பெறவிரும்பி, விசேஷதினங்களிலே விசேஷமாகச் செய்யும் விரதம், பூஜை, ஜபம் முதலியனவாகும். காமியாங்ககருமங்கள், விதிப்படி செய்யும் விரதோத்தியாபனம் தானம் முதலியனவாகும். தெய்வமூர்த்திகளுக்குச் செய்யப்படும் நித்தியம் நித்தியாங்கம் முதலிய வழிபாடுகள், விநாயகர், சிவன் முதலியோருக்குச் செய்யப்படும் யாவும் மந்திரபேதம் இருக்குமேயன்றிக் கிரியாபேதம் இருக்காது. அவ்வாறு காலவேறுபாடுகள் தெய்வத்திற்கும். கிரியைகளுக்கும் உள்ளனவற்றை சாஸ்திரங்கள் விதித்துக்கூறியுள்ளன. ஆதன்படி ஒரு மனிதன் கண்விழித்து எழவேண்ழய காலம் முதல் நித்யான்ஹிககிரியைகளுக்கும் பூஜை, உத்ஸவம், பிரதிஷ்டை முதலானவற்றிற்கும் தனித்தனியே உரியகாலம் கூறப்பட்டு உள்ளன. எடுத்துக்காட்டாக அதிகாலையில் "ப்ராதஸ் ஸமயதப் பூர்வே கடிகா பஞ்சகோ த்தித:" என்கிறது காரணாகமம். ஆசாரியர் இதன்படி உதயத்திற்கு ஐந்துநாழிகைக்குமுன்பு எழுந்திருக்கவேண்டும் என்கிறது "ப்ராம்மே முகூர்த்தே புருஷ: த்யக்தநித்ரோ ஹரம் ஸ்மரேத்" என்பது சிவாகமவிதிவாக்கியம் ஆகும். இது நம்மை அதிகாலை சூரியன் உதிப்பதற்கு மூன்றேமுக்கால் நாழிகைக்குமுன்பு கண்விழித்தெழுந்து, இறைவனை நினைக்கவேண்டும் என்பதாகும். இவ்வாக்கியத்தில் விழித்தல் எனும் கிரியைக்கு காலமாக பிராம்ம முகூர்த்த காலம் கூறப்பட்டதாக அறிக. இவ்வாறே ஆலயத்தின் ஆறுகால பூஜைக்கும் தனித்தனியே காலநிர்ணய விதியும், விழாக்கால கிரியைகளுக்குத் தனித்தனிவிதிகளுமாக அனைத்து நித்திய நைமித்திக கிரியைகளுக்கும் உரியகாலவிதானம் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கூறப்பட்டுள்ள சிலவற்றை இனி ஆகமங்கள் வாயிலாக காண்போம்.

ஆலய பூஜா காலங்கள்

ஆகமங்களில் பூஜைசெய்வதற்கு உரியகாலமாக பன்னிரெண்டு காலங்கள் பூஜாகாலமாகும். அவை 1. உஷக்காலம், 2. பிராதக்காலம், 3. காலமத்யசந்தி, 4. துவதீயகாலசந்தி, 5. மத்யசந்தி, 6. மத்தி யான்னம், 7. சாயங்காலம், 8. இராத்திரிசந்தி (சாயரக்ஷை அல்லது இரண்டாங்காலம், 9. அர்த்தஜாமம், 10. பூதராத்திரி, 11. காலராத்திரி, 12. மகாநிசி என்பனவாம். இவை சூரியஉதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை முதல் உதயம் வரை உஷக்காலம். சூரியஉதயம் முதல் பத்துநாழிகை பிராதக்காலம். இவ்வேளையில் 2வது முதல் ஐந்தாவது வரை உள்ள கால பூஜைகளும் காலங்களும், நித்தியோத்ஸவமும்

இதன்மேல் உதயம் முதல் 16 நாழிகைக்குள் 6வதான உச்சிக்காலமும், நித்யோத்ஸவமும் செய்யத்தக்கதாகும். சூரிய அஸ்தமனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும், பின் மூன்றேமுக்கால் நாழிகையும் ஆக ஏழரைநாழிகைக்குள் நித்திய பிரதோஷபூஜையாகிய சாயங்காலபூஜையும் அதன்மேல் அஸ்தமனம் முதல் பதினொன்றேகால் நாழிகை வரையுள்ள காலம் அர்த்தயாமம் எனப்படும். இவ்வேளையில் சூரியஅஸ்தமனம் முதல் ஒன்பது நாழிகைக்குள் இராத்ரிசந்தியாகிய இரண்டாம்காலம் என்ற இராக்காலமும், இதன்மேல் இரண்டேகால் நாழிகைக்குள் அர்த்தஜாமம் ஆகிய ஏகாந்தபூஜையும் இதன்மேல் சூரியஅஸ்தமனம் முதல் இருபத்திஒன்றேகால் நாழிகைக்குள் 10 முதல் 12 வரையுள்ள காலபூஜைகள் நடைபெறவேண்டும். இவ்விதம் பன்னிரண்டுகாலம் தினமும் பூசித்தல் உத்தமகாலவிதிமுறையாகும். இவ்வாறே பூஜாகால பகுப்புமுறை ஆகமங்களில் பலவாறு காணப்படுகிறது. மகாசந்திகள் எனப்படுகிற **காலசந்தி, உச்சிகாலம், சாயரக்ஷை** மூன்றுக்கும் ஏழரைநாழிகையும், மற்றைய **உபசந்தி** எனப்படும் உஷக்காலம், அர்த்யாமாதிகளுக்கு மூன்றேமுக்கால் நாழிகையுமாக கூறப்படுகிறது. காரணாகமம் பத்துநாழிகையாக பிரித்து விதிக்கிறது. பொதுவாக எட்டுயாமத்திலும் எட்டுகாலம் பூசைசெய்வது **உத்தமம்** என்றும், இவ்வதம் ஒருகாலம்வரை எட்டு வகையாக பூஜாகாலம் பகுக்கப்பட்டு எட்டுகாலங்கள் கூறப்படுகின்றன.

ஆலயபூஜையில் ஆறுகால முறைகள்

அவ்வாறே ஆறுகால பூஜாமுறைகளுக்கு காலவிதானம் விளக்கப்பட்டு உள்ளது. அதாவது, சூரியஉதயம் தொடங்கி, 10நாழிகை **ப்ராதககாலம்** (காலசந்தி) அதன்மேல் 10 நாழிகை **மத்தியானகாலம்** (உச்சிகாலம்) அதுமுடிந்து 10நாழிகை **சாயங்காலம்** இதில் சூரியஅஸ்தமனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகை நித்ய **பிரதோஷகாலம்** ஆகும். சூரியஅஸ்தமனம் முதல் ஏழரைநாழிகை **சாயரக்ஷை** இதனை இரண்டாங்காலம் என்று வழக்கில் கூறுவர். அதுமுடிந்து மேல் மூன்றே முக்கால் நாழிகை **அர்த்தஜாமம்.** சூரியஉதயத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகை **உஷக்காலம்** ஆகும். இவ்வாறாக ஆலயங்களில் ஆறுகால பூஜைக்கான காலங்கள் முறையே அதிகாலை முதலாக, 1. உஷக்காலம் 2. காலசந்தி 3. உச்சிகாலம் 4. சாயங்காலம் 5. இரண்டாம் காலம் 6. அர்த்தஜாமம் ஆக ஆறுகாலபூஜையாகும் என்பதாம். இவற்றுள் உஷக்காலபூஜையை விளாபூஜை என்றும், திருவனந்தல் என்றும், உதயமார்த்தாண்டபூஜை என்றும், பலவாறு கூறுவர்.

ஆலயபூஜையில், எட்டுகாலமுறைகள்

ஆலய நித்யபூஜையானது நித்தியபூஜை என்றும் ஆகந்துக நித்திய பூஜை என்றும் இருவகையாக கூறப்படும். நித்யபூஜை என்பது உஷக்காலம் முதலியன. ஆகந்துக நித்தியமென்பது அஷ்டமிபூஜை முதலியன இந்த ஆகந்துக நித்தியத்திலேயே மாதந்தோறும் செய்யப்படும் விசேஷபூஜையும், அஷ்டமி, விஷு, சங்கிராந்தி, பிரதோஷம், அமாவாசை இவைகளில் செய்யும் பூஜைகளும் ஆகந்துகநித்யம் என்பதாகும். இதில் நித்திய பூஜையே முன்சொன்னவாறு எட்டு விதமென்று அஜிதாகமம் கூறுகின்றது. அதாவது உத்தமத்தில் மூன்றுவிதம், மத்தியமத்தில் மூன்றுவிதம், அதமத்தில் இரண்டுவிதம், ஆக எட்டுவிதம். பகலில் 4 யாமம் இரவில் 4 யாமம் ஆக எட்டுயாமம் செய்யப்படும் பூஜை உத்தமத்தில் உத்தமம். பகலில் 4 யாமத்திலும் இரவில் மூன்று யாமத்திலும் ஆக ஏழுகாலம் பூஜை செய்வது உத்தமத்தில் மத்யமம் என்றும், பகலில் 4 யாமத்திலும் இரவில் இரண்டு யாமத்திலுமாக ஆறுகாலத்தில் செய்யப்படும் பூஜை உத்தமத்தில் அதமம் என்றும், காலை, நடுப்பகல், மாலை, இரவு, இரண்டாவது யாமம், 4வது யாமம் ஆக ஐந்துகாலம் செய்யப்படுவது மத்யமோத்தமம் அர்தயாமம் நீக்கிய மற்றவை மத்யமமத்யமம். காலை நடுப்பகல் மாலை 3ம் மத்யமாதமம், காலை மாலை என இருகாலம், அதமத்திலுத்தமம், ஒருகாலம் செய்யப்படும் பூஜை அதமத்தில் மத்யமம், அதமத்திலமத்தில் சிவாலயபூஜை காணப்படவில்லை. இது வனபர்வத கிராமக்ஷுத்ர தேவதைகளுக்கு மாதம் / வாரம் ஒருமுறை செய்யப்படுவது.

கால விதானம் (சூக்ஷ்மாகமத்தின்படி)

யாமம் என்பது ஏழரை நாழிகை எனப்படுவதாகும். இதுவே சந்தி, ஸ்தூலம், சூஷ்மம், எனக் காலம் இருவகைப்படும். ஸ்தூலம் என்பது, லௌகிககாலம். சூக்ஷ்மம் என்பது ஆத்யாத்மிககாலம். சிவபூஜை முதலியவற்றை எப்போதுமே ஸ்தூலகாலத்தினால் செய்யவேண்டும்.

யோகிகளுடைய இமைக்கொட்டலில் நாலு கொண்டது த்ருடி எனப்படும். த்ருடியின் இரண்டுகொண்டது லவம் எனப்படும். லவம் இரண்டு கொண்டது நிமிஷம். நிமிஷம் பதினைந்து கொண்டது ஒரு காஷ்டை எனப்படும். காஷ்டையின் பதினைந்து கொண்டது ஒருகலை எனப்படும். கலையில் ஒரு அம்சம் முகூர்த்தம். ஒரு முகூர்த்தத்திற்கு இரண்டு நாழிகை, ஏழரைகடிகை ஒருயாமம், எட்டுயாமம் இரவும்

பகலும் கொண்ட ஒருநாள் எனப்படுவதாகும்.

காலம் த்விவித மாக்யாதம் ஸ்தூலம் சூக்ஷ்ம மிதி த்விதா |
ஸ்தூலம் லௌகிக ஸம்ஞும் ஸ்யாத் சூக்ஷ்ம மாத்யாத்மிகம் மதம்||

ஸ்தூலகாலே ப்ரயோக்தவ்யம் சிவபூஜாதி ஸர்வதா |
யோகிநாம் ச நிமேஷே து வேதபாகஸ் த்ருடிஸ் ஸ்ம்ருத: ||

லவம் தத்துவய ஸங்க்யாதம் தத்துவயம் நிமிஷம் தத: |
நிமிஷம் திதி ஸங்க்யாதம் காஷ்டா சேதி ப்ரகீர்த்திதா ||

காஷ்டா ச திதி ஸங்க்யா ச கலா சேதி ப்ரகீர்த்திதா |
தத் கலாம்சோ முகூர்த்தச் ச ததைவ கடிகா த்வயம் ||

முனி ஸங்க்யா (அ)ர்த்தநாடீ ச யாம இத் யுச்யதே புதை: |
தத் ஸந்தி யஷ்டௌ ஹ்யஹோராத்ரம் யஜனம் ப்ரதி யாமகே ||

(சூக்ஷ்மாகமம்)

பிராம்மமுகூர்த்த லக்ஷணம்

ப்ராஹ்மே முகூர்த்தே வித்வான் வை மனஸா சிந்தயேத் சிவம் |
த்ரிபாதேந த்ரிகடிகா ராஜன்யந்தே தினே தினே |
ப்ராஹ்ம்யம் முகூர்த்த மாக்யாதம் மமசங்க்யாசுகத்யதே|| (சுப்ரபேதாகமம்)

இவ்விதமாக காலை மணி 4.30 முதல் 6.00 மணிவரை உள்ள காலத்தில் எழுந்து சிவனை சிந்தித்து அன்றாடச் செயல்களை யாவரும் துவங்கிடவேண்டும் என்கிறது ஆகமம். மேலும் எந்தகாரியத்தையும் செய்யத் துவங்கும்போது முதலில் "தேசகாலௌ து ஸங்கீர்த்ய" என்று போதாயனாதி மகரிஷிகளும் கூறுவதையே, சிவாகமங்கள், ஸங்கல்பம் செய்துபிறகு அனுஷ்டானம், அல்லது பூஜை இவைகளைத் துவங்கிடவேண்டும் என்று விதித்துள்ளன. புனிதமான தர்பைகளை, இருக்கையாகத் தனக்குக்கீழேபோட்டும், இருதர்பையாலான பவித்திரத்தை, வலக்கையில் மோதிரவிரலில் அணிந்தும் இந்தசெயலை, இந்தகாலத்தில், இந்த நோக்கத்தில், செய்யப்போகிறேன் என்றுகூறி முதலில் சங்கல்பத்தை செய்து, உள்ளங்கையில் வைத்திருந்த இருதர்பையை வடக்கே போட்டுவிடவேண்டும் என்று சங்கல்பவி தியை சூக்ஷ்மாகமம் கூறி உள்ளது. "கர்மாரம்பஸ்ய தத்காலே ஸங்கல்ப மிதி புத்திமான்" என்கிறது. இதன்படி புத்திசாலி இந்த புவனாத்வாவையும், காலதத்துவரூபமான காலதேசமுகூர்த்த வடிவான பஞ்சாங்க மகிமைகளையும், அறிந்தவனாகவே தெய்வீகச்செயலில் ஈடுபடவேண்டும் என்று விதித்துள்ளன.

ஆகமங்களின்படி கால வரையறை

அறுபது நாழிகை கொண்டது ஒரு நாள்

பதினைந்து நாள் கொண்டது ஒரு பக்ஷம்

முப்பது நாள் கொண்டது ஒரு மாதம்

இரண்டு மாதம் கொண்டது ஒருருது (பருவகாலம்)

ஆறுமாதம் கொண்டது ஒரு அயனம் (மூன்றுருது)

இரண்டு அயனம் கொண்டது ஒரு ஆண்டு (வருஷம்)

17,28,000 ஆண்டு கொண்டது கிருதயுகம்

12,96,000 ஆண்டு கொண்டது திரேதாயுகம்

8,64,000 ஆண்டு கொண்டது துவாபரயுகம்

4,32,000 ஆண்டு கொண்டது கலியுகம்

43,20,000 ஆண்டு கொண்டது சதுர்யுகம்

71 சதுர்யுகம் கொண்டது ஒரு மன்வந்தரம்

14 மன்வந்தரம் கொண்டது ஒரு கல்பம் (1000 சதுர்யுகம்)

இரண்டுகற்பம் கொண்டது ஒரு பிரம்மதினம்

360 பிரம்மதினம் கொண்டது ஒரு பிரம்மவருஷம்

50 பிரம்மவருஷம் கொண்டது ஒரு பரார்த்தம்

100 பிரம்மவருஷம் கொண்டது ஒரு பிரம்மகாலம். (பிரமனின் ஆயுள்)

இப்போது நடைபெறுவது இரண்டாவது பரார்த்தத்தில், ஒரு சுவேதவராக கற்பத்தில், ஏழாவதாகிய வைவசுவத மன்வந்தரத்தில், இருபத்தெட்டாவது சதுர்யுகத்தின், கலியுகத்தில், முற்பகுதியில் உள்ள வருடம் என்றும், மேலும் அவ்வருடத்தில் அயனம் அதனுள் மாதம் அதனுள் பக்ஷம், திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம் ஆகிய பஞ்சாங்க விவரங்களையும் கூறுவது ஸங்கல்பத்தின் செய்முறை ஆகும்.

CENTRE FOR SHAIVA STUDIES

காலச்சிறப்பு

காலம் என்பது, எல்லோருக்கும் நன்மையைச் செய்வது, என்று காமிகாகமம் கூறுகிறது. பொதுவாக எல்லாசெயல்களுக்கும் கர்மங்களுக்கும், என்றுமே சுகத்தைத் தருவதான காலத்தைப் பற்றி காமிகாகமம் பூர்வபாகம் ஒன்பதாவது படலத்தில் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. அதனைக்காண்போம். "அத காலம் ப்ரவக்ஷ்யாமி ஸர்வேஷாம் து சுகாவஹம்" என்று தொடக்கத்தில் யாவருக்கும் சுகம் தருவது காலம் என்கிறது.

மாஸவிதி

மாசிமாதந் தவிர சூரியன் வடபால் செல்லும் காலமான உத்தராயனகாலமானது சிறப்பானதாகும். அவசரமாக சீக்கிரமாக ஒருகாரியம் செய்யவேண்டி இருந்தால் அதற்கு தக்ஷிணாயனத்தில் கார்த்திகை, ஐப்பசி, ஆவணி ஆகிய மாதங்கள் ஏற்கத்தகவை என்று விதிக்கப்படுகிறது. தக்ஷிணாயனத்தில் மற்றமாதங்கள் நிந்திக்கத்தக்கவை என்கிறது. இதனால் மாசி, ஆடி, புரட்டாசி, மார்கழி ஆகிய நான்குமாதங்கள் பொதுவாக விலக்கத்தக்கவை ஆகின்றன.

மாகமாசம் விநா சஸ்தம் பாநோ ரயந முத்தரம் |
தக்ஷிணே த்வரிதே மாஸௌ கார்த்திகா (அ)ச்வயுஜா வபி |
சிரவணஸ் ச விதீயந்தே ததன்யே நிந்திதா மதா: ||

திதி விதி

சுக்லபக்ஷம் (வளர்பிறை) சுபம் ஆகும். தேய்பிறையில் சப்தமிவரை கொள்ளலாம். வளர்பிறையில் முதலில் பதினைந்தில் மூன்றில் ஒருபாகமாகிய பஞ்சமி வரையிலும், தேய்பிறையில் இறுதியில் மூன்றில் ஒருபாகமாகிய ஏகாதசி முதல் அமாவாசை வரையிலும் நீக்கவேண்டும். நடுப்பாகம் ஐந்துநாட்களும் மத்யமமாகும். மற்றவை சிறந்ததாகவும் கூறப்படுகிறது. ஒற்றைப்படையாகிய நவமி, பர்வம், அமாவாசைகளையும் முதலாவதாகிய பிரதமை திதியையும், இரட்டைப்படையாகிய திதிகளில் த்விதீயையும், தசமியையும் அவ்வாறே தேய்பிறையில் ஷஷ்டியையும் விட்டு யாவை மிகுதியோ அவை எல்லாம் இந்த திதி விஷயத்தில் நிந்திக்கபடாதவை ஆகும். ஏற்கத்தக்கவைகள் ஆகும்.

சுக்லபக்ஷச் சுபோ (அ) ந்யச்ச ஸப்தம்யந்தோ (அ) ஸிதே மத: |
சுக்லே வா(அ)த த்ருதீயாம்சம் க்ருஷ்ணே சாந்த்யம் து வர்ஜயேத் ||

மத்யமௌ மத்யகௌ பாகௌ ச்ரேஷ்டா வந்த்யௌ ப்ரகீர்த்திதௌ|
நவமீம் பஞ்சதச்யௌ ச ஹித்வா யுக்மேதரந் திதிம் ||
ஆத்யா மபி ச யுக்மாசு த்விதீயாம் தசமீம் ததா |
கிருஷ்ணே ஷஷ்டிம் ச யாச் சிஷ்டாஸ் தாஸ் ஸர்வா நிந்திதாஸ் த்விஹ ||

நக்ஷத்திர விதி பலம்

ரோஹிணீ, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இவை மூன்றும் அஸ்தம், சுவாதீ, புனர்பூசம், அனுஷம், அச்வநீ, மிருகசீர்ஷம், திருவோணம், பூராடம், மகம், சித்திரை, அவிட்டம், ரேவதீ இவை மனிதர்கட்குக் கூறப்பட்டன.

சிறப்புடைய சதயம், விசாகம், பூரம், பூராடம், பூரட்டாதி இவையோடுகூட தேவர்கள் விஷயத்தில் திருவாதிரையும் கூறப்பட்டன. இவையாவும் சிவனிடத்தில் சம்மதிக்கப்பட்டன. இவை தேவதா பிரதிஷ்டை விஷயங்களுக்கு ஆகும் என்பதாக அறிக.

ரோஹிணீ சோத்தராஸ் திஸ்ரோ ஹஸ்தம் ஸ்வாதீ புனர்வசு |
அனுராதா ச்வயுக் சௌம்யம் வைஷ்ணவம் வாருணம் மதா||

சித்ரா ச்ரவிஷ்டா பௌஷ்ணாஸ் ச மநுஜேஷு ப்ரசம்ஸிதா: |
பூஜ்யாச் சதபிஷக் சைவ விசாகா பூர்வஜைஸ் ஸஹ||

தேவேஷு கதிதம் ரௌத்ரம் ஸர்வ மேதத் சிவே மதம் |

மனிதர்கள் விஷயத்தில் பூசமும் ரேவதியும் ஆகும். அவற்றைப் பார்க்கிலும் வேறான கிருத்திகை, பரணி, ஆயில்யம், கேட்டை, மூலம் என்னும் நக்ஷத்திரங்கள் ஆகாது என்கிறது காமிகாகமத்தின் காலவிதிச் சான்று.

வாரபலம் (ஏற்ற கிழமைகள்)

செவ்வாய், ஞாயிறு, வாரங்களைவிட்டு மற்றவை தேவர்களுக்கான வாரங்களாக கூறப்பட்டன. மானுடர்கள் இத்துடன் கருத்த நிறமுள்ள சனிக்கிழமையையும் நீக்கவேண்டும். மற்றையகிழமைகள் ஏற்கத்தக்கவை என்று கூறப்படும்.

வாரௌ குஜார்கௌ ஹித்வா ச தேவவாரப் பிரசம்ஸித: |
மனுஷ்யை ரபி வாரம் ச வர்ஜயேத் து ஸிதா பரம்||

அஸ்தங்கதபலன்

புத்திமான்கள் சூரியன் அஸ்தமனத்தையடைந்தபோது வீடு கட்டக்கூடாது. குருவானவர் அஸ்தமனத்தை அடைந்தபோது சுபகாரியங்களைச் செய்யக்கூடாது. சுக்கிரருடைய அஸ்தமன காலத்திலும் தேவதாபிரதிஷ்டையைச் செய்விக்கக்கூடாது என்கிறது காமிகாகமம். முதலானதை தெரிவிக்கும் சான்று,

தலலக்ஷயங்கதே பானௌ வேச்மாரம்பம் விவர்ஜயேத் |
சுபகர்ம ந கர்த்தவ்யம் ஜீவே சாஸ்தங்கதே புதை: ||
சுக்ரஸ் யாஸ்தமயே வா(அ) பி பிரதிஷ்டாத்யம் ந காரயேத் |

இராப்பகலில் செய்யத்தக்கவை

பகலில் கர்ப்பாதானமும், இரவில் வாஸ்துகார்யமும், தோஷத்தை தரும். இரவில் ஓரிடத்தில் பிரவேசித்தல் ஆகும். கிராமாதிகளை அமைக்கும் பொருட்டாக பெருந்திடல், வளாக நிலப்பரப்பில் செய்யத்தக்க கிராம வாஸ்து பதவிந்யாஸத்துடன் கூடிய வாஸ்துபூஜை, அக்னிகாரியம் பூஜை, பலிதருதல், இவற்றை ஒருபோதும் இரவில் செய்யக்கூடாது. தேவைப்பட்டால் வாஸ்துவில் வீட்டினுள் புகுவதைச் செய்யலாம்.

திவா கர்ப ப்ரதிஷ்டா ச சர்வர்யாம் வாஸ்துகர்ம ச |
ஸர்வதோஷகரம் ப்ரோக்தம் ராத்ரௌ வா வேசனம் பவேத் ||
ராத்ரௌ வாஸ்துபலிம் க்ராமே நாக்நௌ குர்யாத் கதஞ்சந |
(காமிகாகமம்).

லக்ன ராசி பலன்

மேஷாதி பன்னிருராசிகளில் ஸ்திரராசிகளான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகியவை உத்தமமாகும். சரஸ்திர சுவாபாவமுள்ள உபயராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மகரம் ஆகியவை மத்தியமாகும். சர ராசிகளான மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகியன பிரதிஷ்டாதிகளிலும், சுபகாரியங்களிலும் நீக்கத்தக்கது. சரராசி குருவோடு கூடியிருக்குமாயின், அப்பொழுது சுபகாரியங்களைச் செய்திட சுபத்தைத்தரும் என்கிறது.

உத்தமஸ் ஸ்திரராசி ஸ்யாத் மத்யமஸ் தூபயாத்மக: |
விவர்ஜ்யச் சரராசிஸ் து ஸஜீவச் சேத் சுபப்ரத: ||

கிரக உதயபலன்

குருசுக்ரன், புதன் இவர்களின் உதயத்திலிருக்கும் உதய காலமானது எல்லா செயல்களுக்கும் சுபத்தைத் தரும். சிறப்பாக அந்தணர்களுக்கு குருஉதயகாலமும், அரசர்களுக்கு சுக்கிரோதய காலமும், வைசியர்களுக்கு புதோதயமும் மிகச்சிறந்தவை ஆகும். சூத்திரர் முதலிய யாவருக்கும் புதனின் உதயம் பொதுவாக சிறந்தது.

குருதயஸ் து விப்ராணாம் பூபதீநாம் பிருகூதய: |
விசாம் புதோதயச் ச்ரேஷ்டஸ் சூத்ரே சைவம் விதீயதே ||

லக்னாதி ஸ்தான பலன்

இரவுநேரத்தில் பாபகிரஹங்கள் யாவரும் லக்னத்திலிருந்து மூன்றாவது, ஆறாவது, பதினோராவது இடத்தில் இருந்தால் சுபர்கள் ஆவார்கள். சுபகிரஹங்கள் யாவரும் பன்னிரண்டாவது இடத்தைத் தவிர மற்றைய எல்லாஇடங்களிலும் சுபத்தைத்தருவார்கள். மற்ற இடத்திலிருப்பது சம்மதிக்கப்பட்டன. கேந்திரத்தில் சுபர்கள் சிறந்தவர்கள். இங்கு பாபிகள் நீக்கத்தக்கவர்கள். சந்திரன் இரண்டாவது ஆறாவது ஏழாவது இடங்களை அடைந்துள்ளபோது சுபனாகக் கொள்ளவேண்டும்.

த்ரிஷடேகாதச ஸ்தாநே பாபஸ் து நிசி சோபநா: |
வ்யயம் ஹித்வா சுபாஸ் ஸர்வே ஸர்வத்ர சுபதா மதா: ||
சதுரச்ரே சுபா: பாபா: வர்ஜநீயா: ப்ரயத்நத: |
உபயஸ்தம் ஹிமாம்சும் ச ஷட் ஸப்தம கதம் சுபம்|| (காமிகாகமம்)

கோசாரபலன் முதலியன

புத்திமானாகிய ஆசார்யர் கோசாரத்திலிருக்கும் கீழே குறிப்பிடும் அனைத்தையும் நீக்கவேண்டும். க்ரூர நக்ஷத்திரம், பிரம்மதண்டம், தூமகேதுவிலிருந்து விடப்பட்டது. கிரகணத்தோடு கூடினது. கிரஹணத்தினால் அபேக்ஷிக்கப்பட்டது ஆகிய இந்த நக்ஷத்திரத்தை ஆசாரியோத்தமர் எப்போதும் கைவிடவேண்டும்.

வர்ஜயேத் தேசிகோ தீமான் பஞ்சகோசர ஸம்ஸ்தித: |
கண்டகம் பிரம்மதண்டம் ச ஸ்தூண முக்தம் க்ரஹேணச ||
யுக்தஞ்ச காங்க்ஷிதஞ் சோடும் ஸந்த்யஜேத் தேசிகோத்தம: |

வேதைநக்ஷத்ரம், வ்யதீபாதம், சூலம், வஜ்ரம், அவ்வாறே விஷ்கம்பம், பரிகம், கண்டம், வைத்ருதி, ஹர்ஷணம், அவ்வாறே அதிகண்டம், அஸ்தங்கதநக்ஷத்திரம், அவ்வாறே ஷடசீதிமுகம் என்னும் யோகம்,

சூன்யமாசம், கிரகங்களால் பின்னப்பட்டது, அவ்வாறே த்யக்தவாரம், கிரகதோஷங்களால் சூழப்பட்ட ஜ்வாலாநக்ஷத்திரம் முதலானது யாதோ அதையும், திதி, வார, நக்ஷத்திர, மாசவருஷ, அயனங்களின் முடிவையும் விலக்கிடவேண்டும் என்கிறது. புத்திமானாகிய ஆசாரியர் முக்கியமாய் அதிமாசத்தை நீக்கிடவேண்டும் என்கிறது காமிகாகமம்.

வேதிதர்க்ஷம் வியதீபாதம் வஜ்ரம் சூலம் ததைவ ச |
விஷ்கம்பம் பரிகம் சைவ கண்டம் வைத்ருதி ஹர்ஷணே ||

ததா (அ)திகண்ட மந்தர்க்ஷம் ஷடசீதிமுகம் ததா |
மாஸ சூன்யம் திருஹைர்பின்னம் தக்தவாரந் ததைவச ||

கிருஹதோஷ ஸமாவிஷ்டக் ஜ்வாலா நக்ஷத்ரகாதி யத் |
திதி நக்ஷத்ர மாஸாப்த (அ)யனாந்தம் ச வர்ஜயேத் ||

அதிமாஸம் த்யஜேத் தீமான் தேசிகஸ் து விசேஷத: |

வாஸ்துசாந்திகாலம்

குறைந்தகுற்றமும், அதிககுணமும், உள்ளதாகஇருக்கிறதும், யஜமானனுக்கு அநுகூலமான நக்ஷத்திரமாகவும், பிராதக்காலத்திலும், அல்லது மாத்யானகாலத்தும் லக்னபலன், கிரகபலன்களோடு கூடின தினத்தில் ஸமஸ்தமான வாஸ்துகார்யத்தை, வீடுகட்டுதல், கோயில் கட்டுதல், முதலானவற்றை ஸமஸ்தஸம்பத்துகளின் பூர்த்திக்காகச் செய்யவேண்டும் என்று காமிகாகமம் கூறுகின்றது.

யஜமானாநுகூலர்க்ஷே ஸ்வல்பதோஷே குணாதிகே |
பூர்வான்ஹே வா (அ)த மத்யான்ஹே லக்னே க்ரஹபலான்விதே ||
காரயேத் வாஸ்துகர்மைதத் ஸர்வ ஸம்பத் ஸம்ருத்தயே| (காமிகாகமம்)

இவ்விதமாக ஸகலகாரியங்களுக்கும் பொதுவான காலவிதிமுறை காமிகாகமத்தின்படி விளக்கப்பட்டது. ஆப்தவாக்கியமான சிவ வாக்கியமான சிவாகமகூற்றுகள் யாவராலும் பின்பற்றவேண்டியவை ஆகும். சைவாகமங்கள் யாவும் (சிலாசங்கிரஹணம்) கோயில்கட்டவும் சுவாமிஅலங்ககாரப்பிரதிமாதிகளைச் செய்யவும், மலைகளிலிருந்து கல்லைத் தேர்வுசெய்து, எடுப்பதற்கும் இவ்வாறே மரத்தினாலே கோயில்கட்டவும், பூஜாபிரதிமைகளைச் செய்யவும், கொடிமரம், வாஹனம், விமானம், சபை, தேர் முதலானவற்றை அமைக்கவும், காடுகளுக்குச் சென்று மரங்களை பரீக்ஷைசெய்து தேர்வுசெய்து பூஜித்து, வெட்டி எடுத்துவருவதாகிற தாருஸங்கிரஹணத்தைச் செய்யும் ஏற்றகாலத்தைக் கூறுவதுடன் சகுனபரீக்ஷைகளையும் கூறி நிமித்த, சகுனசாஸ்திரத்தையும் எடுத்துக்கூறுகின்றன. வேதகாலத்தில்

சாகடாயனர் எனும் மஹரிஷி சகுனத்தை பெரிதும் போற்றி பின்பற்றினார். எனவே சைவாகமங்களின்படி உகந்தகாலத்தை தேர்வு செய்வதுடன் நிமித்தசகுனத்தையும் கண்காணித்துப் பயனறிந்து கர்மாக்களில் ஈடுபடவேண்டும். கிரியைகளைச் செய்யவேண்டும் என்று காமிகாகமம் விதிக்கிறது.

ஆதௌ காலம் பரீக்ஷ்யாந்தே சுபகர்ம ஸமாசரேத் |
நிமித்த சகுனா நாதௌ ஞாத்வா கர்ம ஸமாசரேத் || (காமிகம்)

சகுனசாஸ்திரத்தின்படியே சுபசகுனங்களும் அசுபசகுனங்களும் கூறப்படுவதுடன் சிறப்பாக சிலவும் கூறப்படும்.

சகுனம் பார்க்கவேண்டிய விதிமுறை

வாஸ்துசாஸ்திரத்தை அறிந்தவரும், ஆசாரியரானவரும், சிற்ப சாஸ்திரத்தை உணர்ந்தவராகியும், ஜோதிடத்தை அறிந்தவராகியும் உள்ள யஜமானர் முதலானோர்கள், குளித்து, சுத்தமாக சுசியாயும், வெண்மைநிற ஆடையை உடுத்தியவராயும், ஆபரணங்களை அணிந்திருப்பவராயும், இருந்துகொண்டு பிரயாணத்திலும், வீட்டைவிட்டு வெளியில் புறப்படுவதிலும், கோயில், வீடு. கிராமாதிகள் அமைந்திட உள்ள, வாஸ்துப்பிரதேசத்திற்குள் பிரவேசிப்பதிலும், இதுபோன்ற முக்கியகாலங்களில் சதாசிவத்தை மனதில் தியானித்து, நிமித்தமாகிய சகுனங்களைப் பார்க்கவேண்டும் என்கிறது காமிகாகமம்.

வாஸ்துவித் தேசிகச் சில்பீ தைவைக்ஞோ யஜமானக: |
சுசிஸ் சுக்லாம்பரோ பூத்வா பூஷணைஸ் ஸமலங்க்ருத: ||

ப்ரஸ்தாநே நிர்கமே சைவ வாஸ்துதேச ப்ரவேசனே |
நிமித்தான் சகுனான் ஏதான் பச்யேத் த்யாத்வா ஸதாசிவம் ||
(பூர்வகாமிகாகமம்).

சுபசகுனங்கள் (நல்லஅறிகுறிகள்)

வித்வான்கள், பிராமணர், பத்தினிகளோடும், புத்திரர்களோடும் கூடின பிராம்மணர்கள், முதலானவர் பலிங்கடர்கள் (பலசாலிகள், வீரர்கள்) ஆபரணம் அணிந்த மாதர், நல்ல புத்திரரை உடையவர்கள், விசேஷமாக சந்தோஷமுள்ளவர்கள், புத்திரனை உடையவள், அழகான ரூபமுள்ளவர்கள், மகிழ்ச்சியுற்றவள், கர்பமுள்ளபெண்கள், கன்னிகை, விளையாடுகிறகுழந்தைகள், விளையாடும்கன்னியர், விசேஷமாக பக்ஷியம், பக்ஷணங்கள், போஜ்யம் பலகாரம், பாயஸம் முதலான அருந்தும் பானம், மாமிசம், தீபம், சந்தனம், மாலை முதலான

சுத்தத்திரவியங்கள், நெய், தயிர், மீன்சிறப்புவகை, சந்தனம்பூசியவன், மாலைஅணிந்தவன், ஸ்ரீவத்ஸமச்சம், பூர்ணகும்பம், தண்ணீர்நிறைந்த குடம், சங்கு, கோரோசனம், கண்ணாடி, துவஜம், வெண்கடுகு, பால், தானியங்கள், மற்றும் பசு, பேரி, பழம், பூ, வேசிப்பெண், பிரியகரவசனம் காதில்சேட்டல் வேறான சிறந்தவைகள், இவைகளைக் காணுதல் இவற்றின் தர்சனம், இவைகள் சுபத்தைத் தருபவைகள் ஆகும்.

வித்வாம்ஸோ பிராஹ்மணோ வாபி பத்னீபுத்ரயுதோ பலீ |
பூஷிதா வா சுபுத்ரா வா ஹர்ஷிதா ச விசேஷத: ||

ரூபிணீ கர்பிணீ கன்யா கிரீடந்தஸ் ச விசேஷத: |
பக்ஷ்யம் போஜ்யம், ச பாநம் ச மாம்ஸம் தீபம் ததைவ ச ||

அநுலேபந மாலாதி கந்தத் ரவ்யம் க்ருதம் ததி |
ஸ்ரீவத்ஸம் பூர்ணகும்பம் ச சங்கம் கோரோசனம் ததா ||

ஆதர்சநம் த்வஜம் சைவ ஸித்தார்த்தம் ச பயப் புன: |
யாநி யந்யாநி பிரசஸ்தாநி சுபம் தேஷாம் து தர்சனம் || (காமிகாகமம்)

வேறுபல இடங்களில் ஆகமங்களில் வேறுபல பசுபக்ஷிமிருகாதிகளும் வசன வார்த்தாதி சகுனபேதங்களும் கூறப்பட்டுள்ளன.

இடதுபாக சகுனம் (சுபமளிப்பவை)

பிரயாணத்திலும், எல்லாச் சுபகாரியத்திலும், மூஞ்சூறு, குள்ளநரி, கௌளீ, மஞ்சள்நிறபன்றி, குயில் இவையாவும் இடதுபக்கத்தில் இருப்பதும், காண்பதும் நன்மையைத் தருவன ஆகும.

சுகந்தரீ சிவா கௌலீ சூகரச் சாபி பிங்கலம் |
கோகிலம் வாமதஸ் சஸ்தம் பிரஸ்தானே ஸர்வகர்மணி || (காமிகம்)

இவ்விதம் சுபசகுனங்களில் மிகவும் சிரேஷ்டமான காட்சிகளாகவும், சூரியஉதயம், மலைச்சிகரம் முதலானவை சீக்கிரமாயும், பள்ளத்தை நோக்கிவிழுவதாயும்உள்ள நதி, நீர்வீழ்ச்சி, நதியின் சமீபத் திலிருக்கிறவைகளாயும், தூரத்திலிருந்து பறக்கக்கூடியதும், தொலைவி லிருந்துவந்ததும், மிகவும் உயரத்தில் வெகுதூரம் போகக்கூடியவையும், வெளிமாநில அயல்நாட்டிலிருந்து வந்தவையுமான, சிறப்புப்பறவைகள், செல்வந்தர்களின் மாடமாளிகை, உப்பரிகை, மாடிவீடுகள், பங்களாக்கள், அரண்மனை மற்றும் தேவாலயங்களையும் சுபமான ஏரி, திடல், விளையாட்டு மைதானம் முதலிய சுபஸ்தலங்களையும் மனதிற்கு ரம்யமான சூழலையுடைய இடங்களும், இவற்றை அடைந்துள்ள

பறவைகளும், மிகவும் சிரேஷ்டமான சிறந்த சகுனங்களாய் சுபத்தைத் தருவதாகும் என்கிறது காமிகாகமம்.

அவசகுனம் (தீயஅறிகுறிகள்)

(தீங்குபயக்கக்கூடிய காட்சியைக் காணல்)

கிராமத்தில் காட்டுப்பசுவும், காட்டில் கிராமத்திலிருக்கிற பசுவும், காணப்படுதல் கூடாததாகும். பகலில் பெட்டையுடன் சஞ்சரிக்கிற சக்ரவாகம் (காதல்பறவை) முதலான பறவை இரவில் கூடாதவை. இரவில் சஞ்சரிக்கிற **கோட்டான்** முதலான பக்ஷிகள், பகலில் காணக்கூடாதவையாகும். யாருமே எதிர்பாராமல், வேண்டப்படாமல் தாமாகவே இரட்டையாய் வருகிற பிராணிகளாயின் ஏற்கத்தக்க சுப சகுனமாகும். அண்டங்காக்கைகளோ என்றால் இஷ்டபலத்தைத் தரும் சுபசகுனமாகும். நதியைத் தாண்டினவைகளாயும், மெய்மறந்திருப்பவைகளாயும் இருக்கிறபக்ஷிகள் நீரில் செல்பவை, நீரினுள் இருப்பவை, ஆமை, முதலை, முதலியவை மதம்கொண்வை ஒருக்காலும் சுபமாய் ஏற்கக்கூடாதவை. மேலும் கோரப்பசியுள்ளவன், தும்மல் எவ்விடத்திலும் விரும்பத்தக்கதாக ஆகமாட்டாது. பசுவின் தும்மல் ஒலி மரணத்தை தரும் என்று கூறப்பட்டுள்ளது.

சோகத்தைக் காட்டும் சகுனம்

வெல்லம், எலும்பு, எள், உளுந்து, கறுப்புத்தானியம், பருத்தி, நெருப்பு, உற்பத்தியாகும்படியான வஸ்து. விதிவசமாக விறகுகளின் பார்வை மிகவும் சோகத்தைத் தரும். தோலுரிக்கும் சக்கரி, தலைமயிர் பிரித்துப்போட்டுக்கொண்டு வருகிறவன், சண்டை, பசியினால் இளைத்து வாடிவருகிறவன், மொட்டைத்தலையன், அழுக்கானவை, சேவகன், ஆடையற்றவன், வியாதி உள்ளவன், இவர்களுடைய பார்வையும், அழுக்குஆடை உடுத்தியவன், விகாரமாய் அருவருக்கத்தக்கதாய் இருப்பவன், நாஸ்திகன், முதலானவரின் பார்வையும் துக்கத்தைத் தரும். பன்றி, எருமை, ஒட்டகம், முதலானவையின் பார்வையும் துயரமளிக்கும் அவசகுனமே ஆகும்.

குளாஸ்தி க்ருஷ்ண தான்யாநி கார்பாஸா (அ)ங்கார கோசர: |
நியதே ரிந்தனாநாம் ச தர்சனம் சோகதம் ப்ருசம் ||

சர்மக்ருத் முக்தகேசாதி ரண க்ஷுத் க்ஷாம முண்டிநாம் |
மலிநா பக்த நக்நாதேர் தர்சனம் துக்கதம் பவேத் ||

ஆக்ரோசம் ரோதனம் சைவ கலஹச் சோகதப் புன: || (காமிகாகமம்)

சகுனத்தை முன்னிட்டுச் செய்யவேண்டியது

சகுனமானது, ஆகாததாக பிரதிகூலமாகக் காணப்பட்ட பொழுது, புத்திகூர்மையுள்ள சிவனின் ஐவகை குலத்து உதித்த ஆசாரியன், எல்லாகர்மாக்களையும் கைவிடவேண்டும். அச்செயலை செய்வதை நீக்கிவிடவேண்டும். இவ்விதம் ஒரு முறையோ, இருமுறையோ, மும்முறையோ, சகுனத்தைப் பார்த்து, மூன்றுமுறை சகுனம் பார்த்ததிலும் தோஷத்தை சகுனம் காட்டுமானால் அந்த தீங்குதரும் கர்மத்தை செயலைை கவிடவேண்டும் என்கிறது சிவாகமம், அச்சான்று.

பிரதிகூலே நிமித்தே ச ஸர்வகர்ம விவர்ஜயேத் |
ஏகதா த்வி த்ரிதா க்ருத்வா நிமித்த த்ரய தோஷக்ருத் ||
வர்ஜயேத் தேசிகோ தீமான் பஞ்ச கோசர ஸம்யுத: || (காமிகாகமம்)

இவ்விதம் சைவாகமகிரியாகாண்டங்களுக்கு ஏற்ற, காலவிதிகளையும், நிமித்தவிதிகளையும், கண்டுணர்ந்து, முறையே பூசித்தும், ஹோமம் செய்தும், யாவரும் தடையின்றி, எளிதில் பயனடையலாம். சைவாக்னிஹோமகாலத்திலும், ஒவ்வொரு அக்னி காரியத்தில் தெய்வக்கிரியைக்கு சுபமான காலத்தில் செய்ப்பயனும் சுபசகுனப்பயனைப் பெறவும் சிறப்புஆகுதிகளை தேசாபாதன காலாபாதன துர்நிமித்தசாந்தி மற்றும் சுநிமித்த ஆபாதனத்தின் பொருட்டு, இவை கைகூடுவதற்காக ஆஹுதிசெய்யப்படுதலால் இவற்றின் அவசியத்தை யாவரும் நன்குஉணரலாம். எனவே ஆகமங்களில் விரிவாக ஆங்காங்கே கூறப்பட்டுள்ள காலபரீக்ஷை முறையையும், நிமித்தபரீக்ஷை முறையையும் யாவரும் கற்றுணர்ந்து, கடைபிடித்து சைவப்பரம்பொருளின் பேரருளைப் பெற்றுய்ய இறைவனை வேண்டி நன்றி கலந்த நல்வாழ்த்தினைத் தெரிவித்து, கருத்துரையை நிறைசெய்து மகிழ்கிறேன்.

சுபம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஆலய நித்திய பூஜா ப்ராயச்சித்த விதானம்

கட்டுரையாளர்

காஞ்சீபுரம் – சிவஸ்ரீ சி.இ. ஷண்முகசுந்தர சிவாசார்யர், ஆகமபண்டிதர்

ஸ்ரீ காமாக்ஷிஅம்பாள் ஸமேத ஸ்ரீமத் ஏகாம்பரநாதர் ஸ்வாமி திருக்கோயிலின் ஸ்தல மிராசு

உமாலிங்கன சங்க்ராந்த குச கங்கண முத்ரிதம் |
லிங்கம் ஏகாம்ர நாதஸ்ய சைகதம் ஸமுபாஸ்மஹே ||

சைவாகம கலாசார வித்யாகேந்திர ஸ்தாபக தலைவர் அவர்களுக்கும், செயலாளர் அவர்களுக்கும், மற்றும் எனது இனிய நண்பரும் அமைப்பாளருமான சோமசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த ஆசியும், நமஸ்காரமும் உரித்தாகுக.

மேலும் இந்த சதஸ்ஸிற்கு மூலபுருஷரான சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்கள் சைவசமயத்திற்கும் நமதுசமூகத்திற்கும் அரும் பெரும் தொண்டாற்றியவராவார். கோண்டித்தோப்பு வெங்கட்ராமய்யர் தெருவில், எனதுகுருநாதரிடம் நான் படித்துக்கொண்டிருக்கும்போது, பலமுறை எனது குருநாதரை காணவருவார். அது முதற்கொண்டே அவருக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. ஒரு சமயம் சிலோனில் அஸ்வமேதயாகம் அவர்தலைமையில் நடைபெற்றது. அது ஒரு பொறுப்பில் மிகப்பெரிய யாகமாகும். 45 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. மிகுந்த பொருட்செலவிலும், அதிக சிரத்தையுடனும் நடைபெற்றது. அந்தயாகத்தில் அடியேனும் கலந்துகொள்ளவேண்டும் என அன்புக்கட்டளையிட்டு, நானும் கலந்துக்கொண்டு அவர் தலைமையில் பணியாற்றியதை இங்கு நினவுகூற விரும்புகிறேன். அவர்வீட்டில் நடந்த, ஆசார்யாபிஷேக நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பணியாற்றியுள்ளேன். பல கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் கலந்து கொண்டுள்ளேன். அவர் என்னிடம் மிகுந்த பிரியம் உடையவர். எண்ணிலா பெருமையுடையவர். அப்பேர்பட்டவரின் பெயரால் அன்னாரது குமாரர்கள் இந்த நிறுவனத்தை நிறுவி பல நற்பணிகள்

செய்தும், பல கருத்தரங்குகள் நடைபெறவாய்ப்பு அளித்தும் அதன் மூலம் நமதுசமூகத்தவர்கள் பயன் அடைய செய்வதானது, மிகப்பெரிய உபகாரமாகும். இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் சைவசமயத்திற்கு அரும்பெரும் பணியாகும்.

மேலும் இந்நிறுவனத்திற்கு சோமசேகர சிவாசார்யர் அவர்கள் ஆலோசகராக இருந்து, முழுநேர பணியாளராக தன்னை ஒருங்கிணைத்துக் கொண்டு, செயலாற்றி வருகின்றார். இதனால் இந்நிறுவனம் மேன்மேலும் பல சிறப்புக்களைப் பெற்றுள்ளது, என்றால் அது மிகையாகாது. ஆகையால் அவருக்கும் நிர்வாகிகளுக்கும், நீண்டஆயுளும், தடங்கல்இல்லாமல் சேவைசெய்யும் திறனையும், அளிக்கவேண்டும் என, எல்லாம்வல்ல ஏகாம்பரேஸ்வர பெருமானை பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

சுமார் இரண்டாண்டுகளாக பல வித்வான்கள், பல அருமையான தலைப்புகளில், சொற்பொழிவாற்றியுள்ளனர். எனக்கும் இங்கு வாய்பளிக்கப்பட்டிருக்கிறது என்றால் அது எனது குருநாதரின் அனுக்ரஹமேயாகும்.

இங்கு நித்யபூஜையில் ஏற்படக்கூடிய பிராயச்சித்தம் குறித்து விளக்கிட முயலுகின்றேன். முதலில் பிராயச்சித்தம் என்றால் என்ன? அவசியம் செய்யத்தான் வேண்டுமா? என்று பார்ப்போம்.

பிராயச்சித்தத்தின் பொருள் பற்றி, ஆகமங்களிலும், ஸ்மிருதிகளிலும் ஒரே கருத்தைத்தான் கூறுகின்றன.

விஹிதஸ்ய அனனுஷ்டானாத் நிந்திதஸ்ய ச ஸேவநாத் |
நரப் பதநம் ருச்சதி . . . . ||

சாஸ்திரங்களில் கூறப்பட்டதை, சாஸ்திரங்களில் விலக்கப்பட்டதை முறையே செய்யாததாலும் செய்ததாலும் நாம் சாஸ்த்திர விஷயங்களி லிருந்து நழுவியவர்களாகவும், சுத்தமற்றவர்களாகவும் ஆகின்றோம்.

சரிதவ்ய மதொ நித்யம் ப்ராயச்சித்தம் விசுத்தயே |
ப்ராயச்சித்த மகுர்வாணா: பாபேஷு நிரதா நரா: ||

இங்கு நித்யம் என்பதால் தினந்தோறும் என்றும், கட்டாயம் என்றும், பொருள்கொள்ளலாம். ஆகையால் ப்ராயச்சித்தம் மிகவும் அவிசயம் என்பதாகின்றது. மேலும் ப்ராயச்சித்தம் செய்யாமற்போனால் பாபங்களால் நரகத்தை அடைவதுடன் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும்

தீங்குஉண்டாக காரணமாகிறோம். ப்ராயச்சித்தம் செய்வதால் நாமும் சுத்தமடைவதுடன் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் நன்மை உண்டாக காரணமாகிறோம்.

ப்ராயோ நாம தப: ப்ரோக்தம் சித்தம் நிஸ்சய உச்யதெ |
தபோ நிஸ்சய ஸம்யுக்தம் ப்ராயச்சித்த மிஹோச்யதே ||

"ப்ராய:" என்றால் தபஸ்ஸாகும் "சித்தம்" என்பதற்கு நிச்சயம் எனப்படும். இங்கு நித்யகர்மானுஷ்டானங்களை சரிவரச் செய்வதே தபஸ் எனப்படும்.

ப்ரக்ருஷ்டாயாஸ் ஸமாநத்வாத் தோஷ: ப்ராய: ப்ரகீர்தித: |
சிதாத்மா கதித: சாஸ்த்ரே தரணம் து தகாரத: ||

பெரிய பதத்திலிருந்து இந்த ஆன்மா கீழ் நோக்கிச்செல்வதைத் தடுத்து மேல்நோக்கிச் செல்லவைப்பது என்பது பொருளாகும்.

நாம் செய்யக்கூடிய கிரியைகளினால் பாபமானது நாசம் அடைகின்றது. மேலும் கிரியைகளில் ஏற்படும் குற்றம் குறைகளை நீக்கி பரிசுத்தமடையச் செய்வதுடன், தேசத்திலுள்ள எல்லாஜீவராசிகளும் நன்மையடைய உதவுகின்றன. இவைகள் எல்லாம் எதனால் ஏற்படும்? என்றால், அது ப்ராயசித்தத்தினால் தான் என்பதை உணரமுடியும்.

நாம் வருடந்தோறும் ஸம்வத்ஸர ப்ராயச்சித்தமாக பவித்ரோத்ஸவம் செய்கின்றோம். அது நித்யபூஜையில் உள்ள குறைபாடுகளை நீக்கி பூரணமாகச் செய்கின்றது. ஆகையால் அதுவே ப்ராயச்சித்தமாக இருக்கும்போது ஏன் நித்யபூஜையில் ப்ராயச்சித்தம் செய்யவேண்டும் என நினைக்கத்தோன்றும்.

பவித்ரோத்ஸவமானது நைமிதித்திகமோ காம்யமோ, ப்ராயச்சித்தமோ அல்ல என்றும் நித்யத்தின் அங்கமாக இருப்பதால் நித்யம்தான் என அகோரசிவாசார்யர் தெளிவாக கூறியுள்ளார்.

சரி–நித்யம் என்றால் என்ன? நித்யாங்கம் என்றால் என்ன? என்னவென்றால் ஸ்நானம், பூஜை, ஜபம், ஹோமம், த்யானம் இந்த ஐந்தும் நித்யமாகும். இவைகள் எப்பொழுதும் செய்விக்கப்படவேண்டும்.

அஷ்டமி, சதுர்த்தசி அமாவாசை, பௌர்ணமி, வ்யதீபாதம், சூர்ய, சந்திர கிரஹணங்கள், மாஸப்ரவேசம், உத்தராயணம், தக்ஷிணாயனம், ஷடசீதிமுகம் இவைகள் நித்யாங்கமாகும்.

நித்யம் இல்லாமல் நித்யாங்கமில்லை. நித்யத்தின் ஒருபகுதியே நித்யாங்கமாகும்.

பவித்ரோத்ஸவமானது, நித்யபூஜையில் ஏற்பட்ட குறைகளை நீக்கி, நித்யபூஜையை பூரணமாக்குகின்றது. ஆனால் நித்யபூஜையில் ஏற்படும் குறைகளால் பாபம் சம்பவிக்கின்றதே அது நிவர்த்தியாகாது. அந்த பாபமானது, ப்ராயச்சித்தத்தினால்தான் நிவர்த்தியாகும். உதாசீனமாகவும், பிராயச்சித்தம் குறித்துபொருள் பற்றாக்குறையாலும், மனக்கலக்கத்தாலும், விருப்புகளாலும், பாபகர்மாவின் தாக்குதலாலும், பிராயச்சித்தம் கடைபிடிக்காமலிருந்தால் அவர்கள் என்னை விரோதிப்பவர்கள் ஆவார்கள். அரசாங்கஅழிவிற்கும், குழப்பத்திற்கும் அவர்கள் காரணமாகின்றார்கள் என்பது பரமேஸ்வரனின் திருவாக்காகும். ஆகையால் நித்யபூஜையில் ஏற்படும் குறைகளுக்கு ப்ராயச்சித்தம் அவசியம். ஊதாரணமாக ஒன்றைக்கூற முற்படுகின்றேன். அம்சுமான்ஆகமத்தில்

ஏகாஹந் து விஹீநந் து லோகோந்மத்தம் ஸமாதிசேத் |
சாந்தி ஹோம ஸமாயுக்தம் நமகை ரபிஷேசயேத் ||

அதாவது ஒருநாள் பூஜை தவறினால், உலகத்திலுள்ளவர்கள் கலக்கமடைவார்கள். அதற்காக சாந்திஹோமமும் ருத்ரத்தால் அபிஷேகமும் செய்யவேண்டும் என கூறுகின்றது.

இங்கு பூஜைதவறிய தோஷத்தின்பயன், ஜனங்கள் கலக்கமடைந்து துன்புறுதல் அதற்கு பரிகாரம் சாந்திஹோமம் ஒரு நாள் பூஜை தவறுதல் என்ற குற்றத்ததை நீக்கி நிறைவடையும்படிச் செய்வது ருத்ராபிஷேகம் என ஸூக்ஷ்மார்த்தமாகக் கொண்டால் ப்ராயச்சித்தத்தின் சிறப்பு வெளிப்படும்.

இனி ஒரு காலம் முதலாக பூஜைகள் நடைபெறாவிட்டால் அதற்குண்டான ப்ராயச்சித்தங்களைப் பார்ப்போம். காமிகாமத்தில் ஒரு நாள் ஒருகாலபூஜை தடைப்பட்டால் அரசருடைய பதவிக்கு ஆபத்து நேரிடும். ஊத்தம பக்ஷமான கோவில்களில் திசாஹோமமும் மத்யமபக்ஷமான கோவில்களில் மூர்த்திஹோமமும் அதம்பக்ஷமான கோவில்களில் சாந்திஹோமமும் செய்தல் வேண்டும். இரண்டுகால பூஜை தடைப்படின் முன்புபோல் ப்ராயச்சித்தமும் நவகலசஸ்நபனமும், மூன்றுகாலபூஜை தவறினால், முன்புபோல ப்ராயசித்தமும், 25 கலசஸ்நபனமும் நான்குகாலபூஜை தவறினால் முன்புபோல் ப்ராயச்சித்தமும், 50கலசபூஜையும், அதற்கும் மேல் ஒருநாள்பூராவும்

நின்று போனால், 108கலசபூஜையும், 2நாள்பூஜை நின்றால் இருதினமும் 108கலசபூஜையும் செய்யவேண்டும் எனவும் கூறப்பட்டு, இறுதியாக ஒருமாதம்பூஜை நின்றால், ஸம்ப்ரோக்ஷணமும் கூறப்பட்டுள்ளது. ஸுப்ரபேதத்தில் மேற்கூறியவற்றில், சிறிது மாறுபட்டபோதிலும், அதிகபக்ஷமாக ஆறுமாதம் பூஜை தடைப்பட்டால் ஸம்ப்ரோக்ஷணம் கூறப்படுகிறது. “அம்சுமான் ஆகமத்தில்” சற்றேறக்குறைய முன்புபோல் கூறப்பட்டு ஒருமாதம்வரை பூசைநின்றால் ஸம்ப்ரோக்ஷணம் கூறப்படுகிறது. மேலும் இரண்டுமாதம் முதல் 8மாதம் வரை உள்ள காலங்களில் தடைப்படின் ஸம்ப்ரோக்ஷணத்துடன் 48 கலசஸ்நபனமும், 9 மாதம் முதல் 1 வருடம் வரை ஸம்ப்ரோக்ஷணத்துடன் 100 கலசஸ்நபனமும் கூறப்படுகிறது.

ஸந்தான சம்ஹிதையில் ஏழுநாடகளுக்குமேல் பூசைநின்றுபோனால் ஸம்ப்ரோக்ஷணம் கூறப்படுகிறது. வீராகமத்தில் 15 நாட்களுக்கு மேல் பூஜைவிட்டுப்போனால் ஸம்ப்ரோக்ஷணம் கூறப்படுகிறது.

இவ்வாறு ஆகமங்களில் ஒரேமாதிரியாக கூறாமல், வெவ்வேறு விதமாக கூறப்படுவதால் எப்படி அனுஷ்டிப்பது? என்றால் சில ஆலயங்களில் ஒரு சில ஆகமப்படித்தான் பூஜைமுறைகள் நடைபெற்று வரும். அந்த ஆலயங்களில் அனுஷ்டானத்தில் உள்ள ஆகமங்களில் கூறியவாறு அங்கு செய்திடல் வேண்டும். அந்த ஆகமத்தில் கூறப்படாத விஷயமாக இருந்தால் வேறு ஆகமங்களில் கூறப்பட்டதை ஏற்று கொள்வதில் தவறில்லை.

பொதுவாக ஆகமஅனுஷ்டானம் உள்ள கோவில்களில் உத்தமபக்ஷம், மத்யமபக்ஷம், அதமபக்ஷம் என்ற பூஜைப்பிரிவினால் அதற்குத் தகுந்தாற்போல் ப்ராயச்சித்தம் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

இங்கு நாம் எடுத்தாண்ட ஆகமங்களில் 7 நாட்கள், 15 நாட்கள், 1 மாதம், 6 மாதம், ஸம்ப்ரோக்ஷணத்திற்கு காலம் கூறப்பட்டது.

இங்கு அதமபக்ஷபூஜாநியமமுள்ள கோவிலுக்கு 6 மாதம் எனவும், மத்யம, உத்தம பூஜாசம்பந்தமான கோவில்களில் 1 மாதம், 15 நாட்கள், 7 நாட்கள் 6 x 60 உள்ளதை ஏற்றுக்கொள்ளளவேண்டும். இவ்வாறு நிர்ணயம் செய்துகொண்டு, செய்வதால் ஒவ்வொரு ஆகமமும் வெவ்வேறான கருத்தை கட்டளை இடுகின்றன என்ற எண்ணம் நமக்கு தோன்றாது.

இனி பொதுவாக ஆகமங்களில் கூறப்பட்ட ப்ராயச்சித்தங்களை பார்ப்போம். ப்ராயச்சித்தம் செய்வதற்கு நாள். நக்ஷத்திரம் லக்னம் முதலியன பார்க்கவேண்டாம். தெரிந்த உடன் தாமதமின்றி செய்வது உத்தமம். அல்லது அடுத்தகாலத்திலாவது செய்திடல் வேண்டும்.

பஞ்சசுத்தி செய்துகொள்ளாமல் பூஜைசெய்தால் பூஜை செய்யப்படாததாகவேயாகும்.

த்வாரபூஜையை செய்யாமல் கர்ப்பகிரஹத்திற்குள் சென்றால், முதலில் சம்ஹிதாஹோமம் செய்து, பிறகு த்வாரபூஜை செய்திடல் வேண்டும்.

பஞ்சாஸந, பூஜை, பஞ்சாவரண, உபசாரபூஜைகள் இல்லாவிடில் பசுக்களுக்கும் பயிர்களுக்கும் நாசம்ஏற்படுவதுடன், பொதுமக்கள் பசிதாகம் முதலியவற்றால் பீடிக்கப்படுவார்கள். சாந்திஹோமமும், சம்ஹிதாஹோமமும் செய்து, ருத்ரபாராயணத்துடன் அபிஷேகம்செய்து, கிரமப்படி பூஜை உபசாரங்கள் செய்யப்படவேண்டும்.

சூர்யபூஜையை செய்யாமல்போனால், ராஜ்யபரிபாலனம் செய்பவர்களுக்கு கண்சம்பந்தமான, ரோகம் ஏற்படும். அதற்காக சாந்தி ஹோமமும், ஸ்நபனமும் செய்து, ருத்ரபாராயணத்தால் அபிஷேகம் செய்வித்து அடுத்தகால பூஜையில் சூர்யபூஜையைச் செய்திடல் வேண்டும்.

புண்யாஹவாசனம் செய்யாவிடில் அந்த ஆலயம் அசுத்தமடையும். அதற்காக பஞ்சகவ்யத்தினால் அபிஷேகம்செய்யவேண்டும்.

பஞ்சகவ்யத்தில் கோஷ்டபூஜை, பாத்ரபூஜை இல்லாமலும். பால் முதலியவைகள் இல்லாமலிருந்தாலும், அதற்கான மந்திரங்கள் சொல்லாமலிருந்தாலும், குசோதகம், கூர்ச்சம், இவைகள் இல்லாமலிருந்தாலும் அரசன், எஜமானன் இவர்களுக்கு தீங்கு விளையும். தேசத்தில் துர்பிக்ஷம் உண்டாம். ஜ்வரம், மாரி (வைசூரி) முதலியவைகள் உண்டாகும். இந்த தோஷத்திற்காக ஸ்ரீருத்ர பாராயணமும், சாந்திஹோமமும் செய்து, முன்பு சொல்லியபடி விதிவத்தாக பஞ்சகவ்யம் செய்து கொள்ளவேண்டும்.

தூப, தீபம் இல்லாமலிருந்தால் வைசூரி உண்டாகும். குழந்தைகளுக்கும், யஜமானனுக்கும் தீங்குவிளையும். தூப, தீபத்திற்கு உண்டான மந்திரங்களை ஜபித்து மூலமந்திரத்தை ஆயிரம்முறை ஜபம் செய்யவேண்டும். தூப, தீபத்தை இருமடங்காக சமர்ப்பிக்கவேண்டும்.

பாத்யம், ஆசமனம், அர்க்யம் இவைகளுக்கு உண்டான திரவியங்கள் இல்லை என்றால், அந்ததேசத்தில் மழைஉண்டாகாது. வைசூரி உண்டாகும். மேலும் பாத்யம் சமர்ப்பிக்காவிடில் பாதங்களில் ரோகமும், ஆசமனம் இல்லையேல் முகத்தில் ரோகமும், அர்க்யம் இல்லையேல் தலைசம்பந்தமான வியாதியுண்டாகும். பாத்யாதிகளை மந்திரமில்லாமல் மேலும் சமர்ப்பித்தால் சமர்ப்பிக்கப்படாததாகவேயாகும். ஆகையால் ஸத்யோஜாத, தத்புருஷ, ஈசான மந்திரங்களை தலா நூறு எண்ணிக்கையில் ஜபம்செய்து சிவனைப்பூஜித்து, திரவியங்களை இருமடங்காகச் சேர்த்து, அந்தந்த மந்திரத்துடன் சிவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

தைலாபிஷேகம் செய்யாவிடிலும், திருவொற்றாடையால் துடைக்காமல் போனாலும் பொதுமக்கள் வியாதியால் பீடிக்கப்படுவார்கள். அதற்காக ஹ்ருதயமந்திரத்தை நூறுமுறை ஜபித்து, தைலாபிஷேகத்தை இருமடங்காக செய்யவேண்டும்.

ஸ்வாமிக்கு நைவேத்யம் செய்யாமல் இருந்தாலும், நைவேத்யத்திற்கு தேவையான திரவியங்கள் இல்லையென்றாலும், நெற்பயிர்கள் அழிந்துபோகும். இந்ததேசத்தில் ஜனங்கள், பசி, தாகம், இவற்றால் துன்பப்படுவார்கள். இந்ததோஷ பரிகாரமாக, சாந்திஹோமமும், ருத்ராபிஷேகமும் கூறப்பட்டது.

நைவேத்யம் எடுத்துவரும்போது, இதரர்களால் தொடப்பட்டாலும், அதன் எஞ்சிய அன்னமோ வீட்லிருந்து எடுத்துவரப்பட்டதோ இவைகளை நிவேதிக்கக் கூடாது. அப்படி இல்லாவிடில் அந்த கிராமத்தில் துர்பிக்ஷம் உண்டாகும். இந்த தோஷத்திற்காக மூல மந்திரத்தால் 100தடவை ஜபம்செய்து பால்அபிஷேகமும் ஸ்நபனாபிஷேகமும் செய்யவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

நைவேத்யம் வைக்கும்போது, அது கீழே தவறிவிழுந்தால் ஜனங்கள் பசியாலும் ஜ்வரத்தாலும் பீடிக்கப்படுவார்கள். ஆகையால் அந்த அன்னத்தை விடுத்து, வேறு அன்னத்தை நிவேதிக்கவேண்டும். அந்த தோஷத்தை போக்குவதற்காக அகோரமந்திரம் 100முறையும்

மூலமந்திரம் 100முறையும்ஜபித்து அளவில் இருமடங்கு நிவேதனம் செய்தல்வேண்டும்.

நிவேதனம் எடுத்துவரும்போது, மார்கசுத்தி செய்தல்வேண்டும். அதாவது நிவேதனம் எடுத்துவரும் வழியில், முன்பாக கிண்டியில் உள்ள ஜலத்தால் தரையில் தெளித்து வரவேண்டும். அப்போது யாரும் குறுக்கே செல்லக்கூடாது. அச்சமயம் சங்கம், திருச்சின்னம், பேரீவாத்யம் இவைகளில் ஏதேனும் ஒன்று இசைக்கப்படவேண்டும். இவற்றில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் அந்த அன்னத்தை அகோரமந்திரத்தால் 100தடவை ஜபித்து, அன்னத்தை புரோக்ஷிக்க வேண்டும்.

பக்குவமற்ற அன்னத்தை நிவேதித்தால் பயிர்கள் நாசமடைவதுடன் தேசத்திற்கும் கெடுதியுண்டாகும். இதற்காக அஸ்தரமந்திரத்தை 100தடவை ஜபித்து, ருத்ரமந்திரத்தால் அபிஷேகம் செய்யவேண்டும்.

நிவேதநான்னத்தில், கல், மண், மயிர், நகம், நெல், புழுபூச்சிகள் தோன்றினாலும், ஈ, எறும்பு இவற்றுடன் இருந்தாலும் அந்த அன்னத்தை நிவேதனம் செய்யக்கூடாது. மடைப்பள்ளியில் நன்றாகப் பெருக்கி, கோமயத்தால்மெழுகி, சுத்தம்செய்திடல் வேண்டும். பாத்திரங்களை நன்றாக சுத்தம்செய்து நெய், அக்னி, இவற்றாலும் சுத்திகரித்து மூலமந்திரத்தை 100தடவை ஜபம்செய்து, ருத்ரமந்திரத்தால் அபிஷேகம் செய்து, பிறகு சுத்தமாக செய்யப்பட்ட அன்னத்தை இருமடங்காகச் செய்தல்வேண்டும்.

ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யும்போதும், பூஜை செய்யும்போதும், அலங்காரம் செய்யும்போதும் திரையிடுதல் அவசியம். அப்போது பாபிகள் ரோகம் உடையவர்கள், ப்ரஷ்டர்கள், நாஸ்திகர்கள், பக்திஇல்லாதவர்கள், தீக்ஷையில்லாதவர்கள், தரிசித்தால் அப்பூஜை நிஷ்பலனாகும். மேலும் பிராணிகளுக்கு கெடுதியுண்டாகும். தேசத்திலும் துர்பிக்ஷம் ஏற்படும். இந்த தோஷத்திற்காக அஸ்திர மந்திரத்தை 100 தடவையும், கவச மந்திரத்தை 200 தடவையும் ஜபித்து, ருத்ரபாராயணத்துடன் அபிஷேகம் செய்யவேண்டும்.

சிவலிங்கம், பிம்பம், இவற்றின் மீது, நெருப்புவிழுந்தால், அது அதிகமோ, குறைவோ எப்படி இருந்தாலும், அரசனுக்கு வியாதியுண்டாகும். நெருப்புபட்ட இடத்தில் பரிசுத்தம் செய்து,

பஞ்சாமிர்தாபிஷேகம், இளநீர் இவைகளால் அபிஷேகம் செய்யவேண்டும். மேலும் மூர்த்திஹோமமும், லிங்கபிம்பங்களில், பாதிக்கப்பட்டிருந்தாலும் பாதிக்கப்படாமலிருந்தாலும் இருக்கும் வஸ்திரம் நீக்கிவிட்டு (சிறிது முழுவதும்) ஸம்ப்ரோக்ஷணம் செய்யவேண்டும். ஸ்வாமிக்கு எப்போதும் இரண்டுவஸ்திரம் சாற்றிஇருக்கவேண்டும். அப்படி இல்லாமற்போனால் துர்பிக்ஷம் ஏற்படும். 108முறை மூலமந்திரமும் அவ்வாறே அகோர மந்திரமும் ஜபிக்கவேண்டும்.

சந்தனம் இல்லையேல் ராஜ்யத்தில் பயம் உண்டாகும். அஸ்திர மந்திரம் 100முறை ஜபித்து திரவியத்தை அடுத்தகாலத்தில் இரண்டு மடங்காக சமர்ப்பிக்கவேண்டும்.

புஷ்பம் இல்லையேல் குழந்தைகளுக்கு கெடுதி. பயிர்கள் நாசமடையும். சாந்திஹோமமும் ருத்ரஅபிஷேகமும் செய்யவேண்டும்.

புரிவார பூஜை இல்லையேல் பணியாளர்களுக்கு கெடுதல் நேரிடும். மூலலிங்கத்திற்கு பரிவாரத்திற்கும் ருத்ரத்தினால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

லிங்கத்தின் சிரஸில் புஷ்பம் இல்லாமல் போனால் தேசத்தில் லஷ்மிகடாக்ஷம் இல்லாமல் போகும். அதற்காக மூலமந்திரத்தை 100 முறைஜபித்து, புஷ்பத்தை சிரஸில் சாற்றவேண்டும்.

சன்னதியில் தீபம் இல்லாமலிருந்தால், லஷ்மிகடாக்ஷம் இல்லாமல் போகும். அந்த தோஷ நிவர்த்திக்காக ஸ்வாமிக்கு நெய்யினால் அபிஷேகம் செய்யவேண்டும்.

ஒருநாள் முழுவதும் தீபம் எரியாவிடில் வைசூரி உண்டாகும்.

அதனைபோக்கிட அகோரமந்திரம் 100முறை ஜபித்து, ருத்ரத்தால் அபிஷேகம் செய்திடல் வேண்டும்.

தீபாராதனை சமயத்தில், தீபாராதனைத்தட்டு, முதலானவற்றிற்கு சதுஸ்ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் தீபாராதனைசெய்வது பலனற்றதாகும். மேலும் எரியும் திரியானது அணைந்துபோனால் ஜ்வரம். அபஸ்மாரம் என்ற நோய்கள் உண்டாகும். அதற்காக அடுத்த காலத்தில் ருத்ரத்தினால் அபிஷேகம் செய்யவேண்டும்.

நக்ஷத்திரதீபம், புஷ்பரததீபம் போன்றவற்றில் தீபமானது ஜ்வாலையுடன் இல்லாமலிருந்தாலும் சிலதீபங்கள் அணைந்து இருந்தாலும் லக்ஷ்மிகடாக்ஷம் குறையும். அதன்பொருட்டு அஸ்திர மந்திரத்தால் 100முறை ஜபம்செய்யயவேண்டும்.

எல்லா தீபங்களும் அணையுமேயானால் மரணபயம் ஏற்படும். அடுத்தகாலத்தில் ருத்ரத்துடன் அபிஷேகம் செய்யப்படவேண்டும்.

தூபதீபம் செய்யும்போது, மணிஅடிக்க வேண்டும். மணி ஓசை இல்லையேல், ஜனங்களுக்கு செவிட்டுத்தன்மை உண்டாகும். அதன் பொருட்டு அஸ்திரமந்திரம் 100முறை ஜபிக்கவேண்டும்.

அபிஷேகத்திற்கு போதுமான ஜலம் இல்லை என்றால் பயிர்கள் நாசமடையும். அஸ்திர மந்திரத்தால் 100 முறை ஜபித்து அடுத்த காலத்தில் இருமடங்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

அபிஷேக திரவியங்கள் இல்லை என்றால் அந்த தேசத்தில் ஜல கஷ்டம் உண்டாகும். அதற்காக அகோரமந்திரம் 100முறை ஜபித்து, அடுத்தகாலத்தில் இருமடங்கு திரவியங்களுடன் அபிஷேகம் செய்ய வேண்டும்.

அபிஷேகம் செய்யும்ஜலத்தில் மீன், தவளை, மயிர் முதலியன தென்பட்டால் அந்தஜலத்தால் அபிஷேகிக்காமல் வேறுஜலத்தைக் கொண்டு, அபிஷேகம் செய்திடல் வேண்டும். பிம்பங்களுக்கு பிம்பசுத்தியைச் செய்து, பஞ்சகவ்யாபிஷேகம் செய்யவேண்டும்.

மந்த்ரபுஷ்பம், மந்த்ரந்யாஸம் இவைகள் உசிதகாலத்தில் இல்லை என்றால், அரக்கஸ்வபாவம் கொண்டவர்களால் தொல்லை ஏற்படும். அதற்காக சாந்திஹோமமும், ருத்ராபிஷேகமும் செயதிடல் வேண்டும்.

ருத்ராக்ஷம் முதலிய ஆபரணங்களோ, உபவீதமோ இல்லை என்றால் தரித்திரம் உண்டாகும். அதற்காக ஸ்ரீருத்ரம்பாராயணத்துடன் அபிஷேகம் செய்யவேண்டும்.

வாத்யம் இல்லாமலிருந்தால் தத்புருஷமந்திரம் 100முறை ஜபம் செய்யவேண்டும்.

ஆதிசைவரல்லாத ஒருவரால், வேறு வழியின்றி பரார்த்த சிவபூஜை, ஒருகாலம் செய்யப்பட்டாலும், ஸம்ஹிதாஹோமம் செய்யவேண்டும். ஒருமாதம் செய்தால் ஸம்ஹிதாஹோமமும், சாந்திஹோமமும் செய்யயவேண்டும். இரண்டு மாதத்திற்கு மேலானால் முற்கூறியவைகளைச்செய்து, மூர்த்திஹோமமும் செய்யவேண்டும். நான்குமாதங்களுக்கு மேல் ஆனால் முன்கூறப்பட்ட மூன்றுஹோமங்களுடன் திசாஹோமமும் செய்யயவேண்டும். ஆறுமாதங்களுக்குமேல் செய்யப்பட்டால் ஸம்ப்ரோக்ஷணம் செய்யவேண்டும்.

த்வாராதி பலிகள் சரியாக சாதிக்கவில்லை என்றால் பெரும் வியாதி உண்டாகும். தேசத்தில் பலம் இல்லாதிருக்கும். அதற்காக அகோர மந்திரஜபம் 100 முறையும், சாந்திஹோமமும், ருத்ராபிஷேகமும், செய்யவேண்டும்.

நித்யாக்னி இல்லை என்றால் மழை பெய்யாது. பஞ்சம் ஏற்படும். சாந்திஹோமம் செய்து, நித்யாக்னியை விதிவத்தாய் ஆரம்பித்து தடையின்றி நடத்தவேண்டும்.

பூஜைசெய்யும் ஆசார்யர் கீழேவிழுந்தால் தேசத்திற்கு கெடுதல் உண்டாகும். அதற்காக அகோரமந்திரம் 500முறை ஜபம்செய்தல் வேண்டும்.

சாமான்யார்க்யம், செய்துகொள்ளாவிடில் மழைபொய்க்கும். பிசாசுகளால் பயமும் உண்டாகும். நந்திமந்திரம் (சிவபஞ்சாக்ஷரம்) 100முறை ஜபித்து, பஞ்சபிரம்மமந்திரமும் ஜபித்து, மீண்டும் சாமான்யார்க்யம் செய்துகொண்டு பூஜிக்கவேண்டும்.

முத்திரைகள் சரிவர காண்பிக்கப்படாவிடில் ராக்ஷசகுணம் படைத்தவர்களால் தொல்லை ஏற்படும். பூஜைகளும் பலன் தராது. அதற்காக அஸ்திரமந்திரத்தை இருநூறுமுறை ஜபித்து, ஸம்ஹிதா ஹோமம் செய்யவேண்டும்.

க்ஷேத்ரபாலகர்பூஜை செய்யாவிடில் திருடர்கள் பயம் ஏற்படும். அங்கு பூதங்கள் வாசம்செய்யும். ஸ்நபனமும் ஸம்ஹிதாஹோமமும் மறுகாலத்தில் இருமடங்கு திரவியங்களுடன் பூஜை செய்யவேண்டும். ருத்ரத்தால் அபிஷேகமும் செய்யவேண்டும்.

சண்டேஸ்வரபூஜை தடைபட்டால் எல்லாவற்றிற்கும் குறைவு உண்டாகும். ஜனங்கள் பசியால் துன்புறுவர். அதற்கு சண்டஹோமமும் 200முறைஜபமும் கூறப்பட்டது.

கர்பகிரஹத்தில் நிர்மால்யங்கள் சுத்தம்செய்யாமல் அப்படியே ஒருமூலையில் சேர்த்து வைத்திருந்தாலும், நிர்மால்யம் கலந்த புஷ்பங்களால் பூஜிக்கப்பட்டாலும், அந்த தேசத்தில் வசிக்கும் மக்கள் எதிரிகளால் துன்புறுத்தப்படுவார்கள். அதற்காக ஸ்தலசுத்தி செய்து, சுவாமியை விசேஷமாகப் பூஜித்து, அகோரமந்திரத்தை 1000முறை ஜபம்செய்யவேண்டும்.

சந்தனம், புஷ்பம் இல்லாமலிருந்தால் மழை இன்மை ஏற்படும். அதற்காக மூலபேரத்திற்கு ருத்ரத்தினால் அபிஷேகம் செய்யவேண்டும்.

நித்யம் பலியிடுதல் மிகவும் அவசியம். நித்யபலியானது ஒரு காலம் தடைப்பட்டால் 100முறை ருத்ரமந்த்ரத்தால் ஜபம் செய்திடல் வேண்டும். ஸ்நபனாபிஷேகமும் செய்தல்வேண்டும். இரண்டு நாட்களுக்குமேல் ஒருமாதம்வரை பலிஇல்லையேல் பிரம்மாங்க மந்திரங்களாலும் மூலமந்திரத்தாலும் தனித்தனியே 100ஹோமம் செய்து, 108கலச ஸ்நபனாபிஷேகம் செய்திடல் வேண்டும்.

பலிபீடத்தில், புறா, காகம், நாய் முதலியவற்றால் அசுத்தம் செய்யப்பட்டிருக்குமானால், அந்த தேசத்தில் லக்ஷ்மிகடாக்ஷம் குறைவதுடன் வைசூரியும் உண்டாகும். அதன்பொருட்டு புண்யாஹ ஜலத்தாலும் பஞ்சகவ்யத்தாலும் புரோக்ஷித்து, வில்வம், துளசி ஆகியவைகளால் நன்றாகத்தேய்த்து ஜலத்தினால் சுத்தம்செய்ய வேண்டும். பலிபீடம், பலிநாதர், மூலபேரத்திற்கும் ஸ்நபனாபிஷேகம் செய்வித்து பலிஇடுதல் வேண்டும்.

பலிஅன்னம் எடுத்துவரும் பாத்திரம், கீழே விழுந்துவிட்டால், தேசத்தில் துர்பிக்ஷம் ஏற்படும். அதற்காக அகோரமந்திரம் 100 முறை ஜபித்து மறுபடியும் வேறு அன்னம் எடுத்து வந்து, பஸ்மசுத்தி செய்து மூலமந்திரத்தால் புரோக்ஷித்து பலிதானம் செய்து, பூர்த்தி செய்யவேண்டும்.

பலிஇடும் சமயத்தில் கையில்உள்ள அன்னத்தை காகம் முதலிய பக்ஷிகளால் ஸ்பரிசனம் ஏற்பட்டால் அதனால் எஜமானருக்கு ரோகம்

உண்டாகும். அந்த அன்னத்தையும் பாத்திரத்திலுள்ள அன்னத்தையும் விடுத்து ஆசார்யனும் பரிசாரகனும் ஸசேலஸ்நானம் செய்து உடுத்திய வஸ்திரத்துடன் ஸ்நானம்செய்வது, அகோரமந்திரத்தை 100முறை ஜபித்து சாந்திஹோமம் செய்து, ருத்ரத்தால் மூலபேரத்திற்கு அபிஷேகம்செய்து பலிஇடுதல் வேண்டும்.

பலிநாதர் இல்லாமல் பலியிட்டால் ஆலயத்திற்கு கெடுதியுண்டாகும். மூலமந்திரத்தை 100முறை ஜபிக்கவேண்டும். அடுத்தகாலத்தில் இருமடங்கு செய்யவேண்டும்.

பலிஇடும் போதோ நித்யோத்ஸவத்தின் போதோ வழியில் ஆசார்யருக்கு கல் முதலியவைகளால் அடிப்பட்டு ரத்தம்வந்தால், எஜமானருக்கு ஜ்வரம் முதலிய வ்யாதிகள் வரும். அதற்காக பஞ் சசுத்தி செய்து, கொண்டு, அடிபட்டஇடத்தில் ஸ்தலசுத்தியைச் செய்து சாந்திஹோமம் செய்து, ருத்ர மந்திரத்தினால் பலிநாதரான சந்திரசேகரருக்கு அபிஷேகம்செய்து, மூலலிங்கத்திற்கு 25 கலச ஸ்நபனாபிஷேகம் செய்யவேண்டும்.

மேலும் அக்காலத்தில் மணி ஓசையில்லாமலிருந்தால் அரக்கஸ்வபாவம் கொண்டவர்கள் அதிகரிப்பர். அதன் பொருட்டு ருத்ரத்தால் அபிஷேகிக்க வேண்டும்.

பேரீவாத்யத்தில் தோலானது கிழிந்து சப்தம் இல்லாமல் போனால், பயிர்கள் நாசமடையும். பஞ்சாக்ஷர மந்திரம் 100முறையும் அஸ்திர மந்திரம் 100முறையும் ஜபித்து, வேறுதோலால் சரிசெய்து, வாசிக்கச் செய்யவேண்டும்.

மூலஸ்தானபூஜை முடித்து, மஹேஸ்வராதி அதாவது நடராஜர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் முதலானவர்களுக்கு பூஜையை செய்து பிறகு பரிவாராலயபூஜை செய்யவேண்டும். இதற்கு மாறுதலாக செய்யப்பட்டால் மூலலிங்கத்திற்கு 25கலச ஸ்நபனமும் அம்பாளுக்கு 16கலச ஸ்நபனமும் ருத்ரபாராயணத்துடன் செய்யவேண்டும்.

நித்யோத்ஸவம் இல்லாமலிருந்தால் மனிதர்களுக்கு தோஷங்களும் ஏற்படும். அதற்காக அகோரமந்திரத்தால் 100முறை ஜபிக்க வேண்டும். நித்யோத்ஸவத்தை முறைப்படி செய்விக்கவேண்டும்.

CENTRE FOR ... Puducherry

நித்யோத்ஸவத்தில் ஸ்வாமி கீழேவிழுந்தால், கர்த்தாவிற்கு நாசம் ஏற்படும். மேலும் அத்தேசத்தில் கலகம் உண்டாகும். ஸ்வாமியை முன்பிருந்த இடத்தில் எழுந்தருளச் செய்து, மூலலிங்கத்திற்கு 16 கலச ஸ்நபனம் செய்யவேண்டும். உபாங்கமானது உடைந்து பின்னப்பட்டிருந்தால் தின, வார, முஹூர்த்தங்களை எதிர்பாராமல், ஸந்தானம் செய்து, உடன் சம்ப்ரோக்ஷணம் செய்யவேண்டும். மூலலிங்கத்திற்கு 16கலச ஸ்நபனம் செய்யவேண்டும்.

நித்யோத்ஸவம் செய்யும்போது, பேரீதாடனம் செய்யவேண்டும். பேரீவாத்யம் இல்லையேல் ஆலயத்தில் செல்வதற்கு குறைவு உண்டாகும். அதற்காக மூலலிங்கத்திற்கு ருத்ரத்தால் அபிஷேகம் செய்யவேண்டும்.

அக்காலத்தில் தீவட்டி எரியாமலிருந்தாலும் கண்களுக்கு ரோகம் உண்டாகும். மூலபேரத்திற்கு ருத்ரத்தால் அபிஷேகிக்கவேண்டும். அகோரமந்த்ரத்தால் 100முறை ஜபிக்கவேண்டும்.

நித்யோத்ஸவம் செய்யாமல் தான்யங்களுக்கு நாசம் ஏற்படும். 1காலம் தவறினால் மூலமந்திரஜபம் 100முறையும் பஞ்சகவ்யாபிஷேகமும் ஸ்நபனமும் செய்யவேண்டும். 2 காலம் தவறினால் முன்புபோல் இருமடங்கு செய்யவேண்டும். 10 நாட்கள் நித்யோத்ஸவம் தடைபட்டால் சாந்திஹோமம் செய்யவேண்டும். 15 நாட்கள் தடைப்பட்டால் மூர்த்திஹோமமும், செய்யவேண்டும். 1 மாதம் நின்றால் பஞ்சபிரம்ம மந்திரம் வித்யாதேஹ ஹோமமும் அங்க மந்திரம் இவற்றால் ஹோமம்செய்யவேண்டும். 1 மாதத்திற்கு மேல் போனால் திசாஹோமமும் மூலமந்த்ர ஜபம் 100 முறையும் செய்யவேண்டும். 6 மாதம் முதல் 1 வருஷம் வரை தடைப்பட்டால் திருடர்களால் பயமும் துர்பிக்ஷமும் உண்டாகும். அங்கமந்திரம் மூலமந்திரம் இவைகளை 300முறை ஜபம்செய்து ஒவ்வொரு மந்திரத்தாலும் தனித்தனியே 300முறை ஹோமம்செய்து மூலமந்திரத்தால் 100முறை ஹோமமும் செய்து, 108, அல்லது 1008 கலசங்களால் ஸ்நபனாபிஷேகத்தையும் செய்யவேண்டும்.

சங்கீதம், வாத்யம், நர்த்தனம், இவைகள் இல்லாமல் இருந்தால் அகோரமந்திரத்தை 1000முறை ஜபிக்கவேண்டும். சம்ஹிதா ஹோமமும் செய்யவேண்டும். மேற்சொன்ன உபசாரங்களை இருமடங்காக செய்யவேண்டும்.

மூலஸ்தானத்தில் விதானம், மண்டபம், மேல்கட்டு அதாவது வண்ண சித்திரம் அமைந்த துணிகளோ, ருத்ராக்ஷவிதானமோ பழுதடைந்தால், அகோரமந்திரத்தை 300முறை ஜபம்செய்யவேண்டும்.

ஆசௌசம் அதாவது தீட்டு உள்ளவர்கள் லிங்கம், பிம்பம் இவற்றை தொட்டுவிட்டால் புத்ர பௌத்ர விநாசம் ஏற்படும். அதற்காக புண்யாஹவாசனம் செய்து, மூலமந்திரத்தால் 100ஆஹுதி ஹோமம் செய்து, சாந்திஹோமம் செய்யவேண்டும்.

ஆலயத்தின் உள்ளேயோ, மண்டபத்திலோ, அதிகநேரம் இருக்கக்கூடாது. அசுத்தமான பொருட்களை கீழே போடவும் கூடாது. பிரசவம் சம்பவிக்ககூடாது. அவ்வாறு நேர்ந்தால் அவ்விடத்தை சுத்தம் செய்து சாந்திஹோமம் செய்யவேண்டும்.

ஸ்வாமியோ அல்லது அம்பாளோ இவற்றில் ஏதேனும் ஒன்று திருடுபோய்விட்டால், காணாமல் போனதை மட்டும் புதியதாக செய்து பிரதிஷ்டை செய்யவேண்டும். திருக்கல்யாணமும் செய்யவேண்டும்.

ஸ்வாமி மூலபேரங்களோ அல்லது உற்சவபேரங்களோ திருடப்பட்டு காணாமல்போனால் அந்ததேசத்திற்கும் ராஜ்யபரிபாலனத்திற்கும் ஆபத்து ஏற்படும். உடனடியாக மூலமந்திரத்தால் 100முறை நெய் யினால் ஹோமமும், நெய், எள், ஹவிஸ் இவைகளால் தனித்தினயாக 100 முறை ஹோமமும், தேன், பால் சர்க்கரை, அருகம்புல் இவற்றோடு 1000 ஆஹுதிகளும், ஹோமம்செய்து தற்காலிகமாக பாலஸ்தாபனம், செய்து பூஜிக்கவேண்டும். 1 மாதம் முதல் 3 மாதத்திற்குள் கிடைக்காவிடில் தினமும் சாந்திஹோமம் செய்துவரவேண்டும். அதற்கு மேலும் கிடைக்காவிடில் பாலஸ்தாபனம் செய்து, மூன்று வருடம்வரை பொறுத்திருந்து, கிடைக்குமானால் அதையே ஸ்தாபனம் செய்யயவேண்டும். அப்படி கிடைக்காவிடில் காணாமல் போன மூர்த்தங்கள் எவ்வாறு இருந்தனவோ அவ்வாறே புதியபேரம் அமைத்து பிரதிஷ்டை செய்யவேண்டும்.

ஸ்வாமிக்கு அஷ்டபந்தனம் இல்லாமல் இருந்தால் ராஜ்ய பரிபாலனம் தடுமாற்றத்தை அடையும். அதற்காக உடனடியாக அஷ்டபந்தனம் சாற்றி ஸ்நபனாபிஷேகம் செய்யவேண்டும்.

ஆலயத்தில் பாம்பு புற்று, பெரிய எறும்புகள், கொடி, வண்டுகள் மற்றும் விஷஜந்துக்கள் தரையிலிருந்து வெளிக்கிளம்பினால், எல்லாவிதமான தோஷங்களும் ஏற்படும். அவ்விடத்தில் உப்பு மண் முதலானவற்றை சுத்த மணலோடு கலந்து நிரப்பி மறுபடியும் உண்டாகாதவாறு பாதுகாப்பாக செய்து, புண்யாஹவாசநமும், பஞ்சகவ்யமும் செய்து புரோக்ஷித்து மூலபேரத்திற்கு மூர்த்தி ஹோமமும் செய்யவேண்டும்.

ஆலயத்தின் வெளியில் 12தண்டஅளவு (சுமார்72அடி) அளவுக்கு உட்பட்டதான இடத்திலோ மேலும் சிலஇடங்களில் சன்னதித் தெருவையும், சிலவிடங்களில் மாடத்தெருவையும் எல்லையாக நிர்ண யித்திருப்பார்கள். அவ்விடங்களில் மரணம் சம்பவித்தால் நித்ய பூஜைகள் நிறுத்தப்பட்டு, கோவில் நடையையும் சாத்தவேண்டும். சவத்தை அப்புறப்படுத்திய பிறகே, நடைதிறந்து நின்றுபோனபூஜையை முதற்கொண்டு பூஜைகளை முடிக்கவேண்டும்.

பூஜையின்நடுவில் பூஜைசெய்பவருக்கு ஆசௌசசெய்தி தெரிந்தால், அக்காலபூஜையைமுடித்து, பிறகு, ஆசௌசம் அனுஷ்டிக்க வேண்டும்.

ஆலயத்தினுள் மரணம் சம்பவித்தால் வாஸ்துசாந்தி செய்து சாந்திஹோமம் செய்து, ஸ்நபனத்துடன் அபிஷேகித்து, பூஜையை துவங்கவேண்டும்.

ஆலயத்தில் திருமஞ்சன கிணற்றில் பிணமானது தென்படுமானால் அதை வெளியே அப்புறப்படுத்திவிட்டு, கிணற்றிலுள்ள ஜலத்தை பாதிக்கு இறைத்துவிட்டு, பஞ்சகவ்யத்தினாலும் புண்யாகவாசன ஜலத்தினாலும், தெளித்துவிட்டு, குறையாமல் முன் கூறப்பட்டவைகளைச்செய்து, பூஜையை துவக்கவேண்டும். பிராகாரங்களில் மனிதர்கள் இறந்துவிட்டால் வைசூரி உண்டாகும். மேலும் புத்ர, பௌத்ரர்களுக்கும் நாசம் ஏற்படும். ஆகையால் அந்த தோஷநிவிருத்தியின்பொருட்டு, மரணம்சம்பவித்த இடத்தில், ஒருமுழஅளவுக்கு பூமியைத்தோண்டி, அங்குள்ள மண்ணை அப்புறப்படுத்திவிட்டுப் புதியதாக மணலை நிரப்பி, நன்றாக சுத்தம்செய்து புண்யாஹவாசனமும், பஞ்சகவ்யமும் புரோக்ஷித்து, வாஸ்துசாந்தியும் செய்து, மூர்த்தி ஹோமமும் ஸ்நபனாபிஷேகமும் செய்யவேண்டும்.

ஹீநாதிகாங்கைர்வேஜ்யா க்ருதாயாம் விசிகைஸ் து வா |
ராஷ்ட்ரக்ஷோபாய ஸா பூஜா பவேந் நிஷ்க்ருதி ருச்யதெ ||

குறைந்த அவயவம் உடையவர்களாலும், அதிக வளர்ச்சியடைந்த அவயவங்களை உடையவர்களாலும், சிகையில்லாதவர்களாலும், செய்யப்பட்டபூஜை, தேசத்தில் குழப்பம்ஏற்பட காரணமாக அமைகின்றன.

அதற்கு பிராயச்சித்தமாக ஆசார்யன் 100முறை அகோரமந்திரத்தை ஜபம்செய்யவேண்டும். ஒரு மாதத்திற்கு மேல் போனால் சாந்திஹோமம் செய்யவேண்டும். ஆறுமாதம் வரையினாலானால் சாந்திஹோமமும், மூர்த்திஹோமமும் செய்யவேண்டும்.

மேலும் இந்த ப்ரகரணத்தில் வேறுஇடத்தில் கூறுகையில்,

விசிகைர் வார்ச்சிதே தேவே ஸந்த்யாதி க்ரமணே ததா |
ஆதிசைவ குலோத்பூத வ்யதிரிக்தைச் சிவேர்சிதெ ||
அதிகார விஹீநைர் வா தேவலைர் வார்சிதே சிவே |
ஏவம் நித்ய விதௌ ப்ரோக்த: ப்ராயச்சித்தே ஹ்யநுக்ரம: ||

சிகையில்லாதவர்கள் ஒருகாலம் முதலாக பூஜைசெய்தாலும், ஆதி சைவரல்லாதவர்கள் பூஜைசெய்தாலும், அதிகாரமற்றவர்கள் பூஜை செய்தாலும், சம்பளம்வாங்கி பூஜைசெய்பவர்களாலும் பூஜையில் குறைகள் ஏற்படுகின்றது. சிகைஇல்லாதவர்கள் விஷயத்தில் உத்தமமான ஆலயத்தில் மூர்த்திஹோமமும் அதமபக்ஷமான ஆலயத்தில், சாந்திஹோமமும் செய்யவேண்டும். குருக்கள் அல்லாதவர்கள், தேவலகர்கள், அதிகாரம் அற்றவர்கள் விஷயத்திலும் பிராயசித்தம் இவ்வாறே கடைபிடிக்கவேண்டும்.

சயனாலய (பள்ளியறை) பூஜை இல்லையென்றால், பெண்களுக்கு உபத்ரவம் ஏற்படும். அகோரமந்த்ரத்தால் 200முறை ஜபமும் மூர்த்திஹோமமும் செய்யவேண்டும்.

சயனாலயத்தில் சர்க்கரை, பால், தாம்பூலம், பழம், புஷ்பம், அப்பம் முதலானவைகள் இல்லையேல் மக்களுக்கு சௌக்யம் ஏற்படாமல் நாசமடைவார்கள். அதற்காக மூர்த்திஹோமமும் பஞ்சகவ்யாபிஷேகமும் செய்து பூர்ணமான உபசாரத்துடன் பூஜை செய்யவேண்டும்.

ஆலயத்திலுள்ள கோபுரங்களோ, மண்டபமோ, அரசமரமோ எதிர்பாராமல் விழுந்தாலும் அபசகுனங்கள் உண்டானாலும்

அந்த கிராமத்திற்கு தோஷம் உண்டாகும். அதற்காக 21 நாட்கள் சாந்திஹோமம் செய்து விரைவில் முன்பு இருந்த நிலைக்கு கொண்டுவரவேண்டும்.

கர்ப்பகிருஹத்தில் புறா, கோழி, குரங்கு, நாய், ஆந்தை, காகம் போன்றவைகள் பிரவேசித்தாலோ, ருதுவான பெண்கள், திருடன், பாபம் செய்தவன், குருத்ரோகம் செய்தவன், சண்டாளன் ஆகியோர் பிரவேசித்தாலோ சாந்திஹோமமும் ஸ்நபனாபிஷேகமும் செய்யவேண்டும்.

மந்திரங்களை சொல்லும்போது அவசப்தம் அக்ஷரப்பிழை, உச்சரிப்பு சரியாக இல்லாமலும் ஸ்வரம் பிழையுடனும் ஏற்படுவது தோஷமாகும். அதற்கு பரிகாரமாக அந்தந்த மந்திரங்களை சரியான முறையில் 108முறை ஜபம்செய்து பின்னர் மந்திரங்களை சரியாக உச்சரித்து கிரியைகளை மீண்டும் செய்யவேண்டும்.

சுவாமிக்கு தாம்பூலம் சமர்ப்பிக்கவில்லை என்றால் வாயில் வியாதி உண்டாகும். மேலும் திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் தடைப்படும். அதற்காக தத்புருஷ மந்திரத்தை 100 முறை ஜபிக்க வேண்டும். பின்னர் இருமடங்காக சமர்ப்பிக்கவேண்டும்.

அருகம்புல், புஷ்பம், அக்ஷதை இல்லாமல் இருந்தால் ஹ்ருதய மந்திரத்தால் 100 முறை ஜபம் செய்யவேண்டும்.

மழை காலத்தில், புயல்காற்றிலும், அரசாங்க குழப்பத்திலும், எங்கும் பயம் நிறைந்த சமயத்திலும், ஸ்வாமியை வீதிவழியாகக் கொண்டு செல்லக்கூடாது. தேவாலயத்தை பிரதக்ஷிணம் செய்தால் போதும்.

ஒரே ஆலயத்தில் பூசை ஒரே ஆசார்யனால் செய்யப்படவேண்டும். பூஜைகள் பலஆசார்யர்களின் சேர்க்கை ஏற்பட்டால் ஆசார்ய கலப்பு உண்டாகும். ஆசார்ய கலப்புஏற்பட்டால் ராஜ்யபரிபாலனம் செய்பவருக்கு அழிவுஏற்படும். ஆகையால் ஆசார்யகலப்பு கூடாது.

காலையில் பூஜைதுவங்குவதற்கு முன்பு முதல்நாள் இரவு மூலஸ்தானத்தில் திருடர்களால் தொடப்பட்டிருந்தாலும், அக்னியால் தஹிக்கப்பட்டிருந்தாலும், தேசத்தில் உள்ளவர்கள் மயக்கத்தினால் கலக்கமடைவார்கள். அரசனுக்கோ ஜ்வரம் முதலான வியாதிகள் உண்டாகும். சயனாலயத்திலிருந்து ஸ்வாமியை எழுந்தருளச்செய்து,

சயனாலயமூர்த்திக்கு ஸ்நபனாபிஷேகம் செய்வித்து, கர்ப்பக்ரஹத்தை சுத்திசெய்து மூலலிங்கத்தில் சம்யோஜித்து, சாஸ்திரங்களில் கூறப்பட்ட பரிகாரம் செய்யவேண்டும். அம்பாள் சன்னதியிலும் ஸ்நபனாபிஷேகம் செய்யவேண்டும்.

பூகம்பம், ஜலப்பிரளயம் முதலியவற்றால் பாதிக்கப்பட்டு ஆலயமோ, கர்ப்பக்ரஹமோ, விழுந்துவிட்டால் அங்குள்ள லிங்கம் பிம்பம் முதலியவற்றை வேறு தகுதியான இடத்தில் பிரதிஷ்டை செய்யவேண்டும்.

அத்புதங்கள் எனப்படும் விபரீதமான நிகழ்வுகள் எப்படிஎல்லாம் தோன்றும் என்றால் உல்காபாதம் முதலிய நக்ஷத்திரங்கள் ஆகாயத் திலிருந்து விழுவது, தொற்றுவியாதிகளால் ஒரேசமயத்தில் அனேகம்பேர்கள் இறத்தல், பூகம்பம், அதிவிருஷ்டி, அநாவிருஷ்டி முதலியவைகள் ஏற்படுத்தல், ஆகாயத்தில் வாத்யகோஷம் கேட்பது, தீயில்லாமல் புகை ஏற்படுதல், இரண்டு சூர்யன்கள் தென்படுதல், காரணம் இல்லாமல் பச்சைமரம் விழுவது, தீ பற்றி எரிதல், மலை உருண்டுவிழுதல், ஓர் மரத்தில் வேறு பழம் உண்டாகுதல், ஓர் செடியில் வேறு பூக்கள் பூத்தல், கல்மாரி பொழிதல், ரக்த மழை பொழிவது, தடாகங்களில் ரக்தபாசி உண்டாகுதல், பசு, மனிதன் முதலியவைகளுக்கு இருதலை உள்ள பிரசவம் ஏற்படுதல், ஆலயத்திலுள்ள விக்ரஹங்கள் சிரித்தல், அழுதல், வியர்வை, ரத்தம் முதலியவைகள் உண்டாகுதல் முதலியனவாம். இவ்வாறு தோன்றினால் அற்புதசாந்தியில் கூறியவாறு செய்யவேண்டும். பூஜிக்கும் அர்ச்சகர்களுடைய அனுஷ்டானங்களாலும் பிராயச்சித்தம் ஆசாரம் இவற்றாலும், விக்ரஹங்களின் அழகாலும், பூஜைக்கு உபயோகிக்கும் பொருள்களாலும், தைவசான்னித்யம் நாளுக்குநாள் வளர்ந்துவரும்.

ஆலயங்களில் பூஜைக்கு செல்லும்முன்னர் அர்ச்சகராகிய நாம் கடைபிடிக்கவேண்டிய நெறிமுறைகளை நம்மால் முடிந்தவரை சரிவர பின்பற்றவேண்டும்.

ஸ்வஸ்யா சாரஸ்ய லோபேந மாநுஷோ நரகம் வ்ரஜேத் |
லுப்தா சாரஸ்ய சுத்யர்த்தம் ப்ராயச்சித்தம் வதேத் குரு: ||

நாம் நமது ஆசார அனுஷ்டானங்களிலிருந்து விலகுவோமானால் நாம் நரகத்தை அடைவது உறுதி. மேலும் பிரஜைகள் துன்பமடைய நாம் காரணமாகின்றோம். நாம் சுத்தியடைவதற்கும் பிரஜைகள்

சௌக்யத்திற்கும் பிராயச்சித்தம் செய்வது இன்றியமையாததாகும்.

பரார்த்த ஆலயபூஜையை செய்பவர்கள் ஆசார்யாபிஷேகம் செய்துகொள்வது மிகவும் முக்யமானது. வெண்மையான வஸ்திரத்தினால் பஞ்சகச்சத்துடனும் உத்தரீயத்துடனும் இருப்பது, சிகையுடன் இருப்பது, ருத்ராக்ஷம் அணிவது, ஸ்ரீ ருத்ரம் மனனமாக சொல்லும் வன்மையுடன் இருப்பது, ஆகியவைகள் இன்றியமையாததாகும்.

ஈரவஸ்திரத்துடன் பூஜைசெய்வது, உத்தரீயம் இல்லாமல் ஒரு வஸ்திரத்துடன் இருப்பது, சிகையில்லாமல் இருப்பது, சாயவஸ்திரம் அல்லது கலர்வேஷ்டி அணிந்து கொள்ளுவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

ஆலயங்களில் பூஜை சம்பந்தமாக ஏற்படும் எலலாவிதமான குறைபாடுகளுக்கும் அந்தந்த அர்ச்சகர்தான் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். உதாரணமாக சன்னதியில் தீபம் ஏற்றுபவர் தீபம் ஏற்ற தவறினால் தீபம் இல்லாத குற்றத்திற்காக அர்சசகர்தான் பிராய்சசித்தம் செய்கின்றார்.

மேலும் பரிசாரகம் அபிஷேகத்திற்கு குறைந்த அளவு ஜலம் சேகரித்து அதிலேயே அபிஷேகம் செய்துவிடுங்கள். ஜலம்இல்லை என்றால், நாமும் வேறு வழியின்றி குறைந்தஅளவு ஜலத்தினால் அபிஷேகம் செய்யவேண்டியுள்ளது. அதனால் ஏற்படும் தோஷத்திற்கு அந்த அர்ச்சகர்தான் பிராயச்சித்தம் செய்யநேரிடுகிறது. மடைப்பள்ளியில் நைவேத்யத்திற்கு அன்னம் தயாரிப்பவர் அரிசியை களையாமலும், சரியாக அலம்பாமலும், கற்களுடனும், புழுபூச்சிகளுடனும் சாதம் தயாரித்து எடுத்துவந்தால் அதற்கும் நாம்தான் பிராயச்சித்தம் செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு ஆலயத்தில் அர்ச்சகரே முக்கிய நிலையில் இருக்கின்றார். ஆகையினால் அந்தந்த ஆலயங்களில் பூஜைசெய்பவர்களே அதற்கு தேவையான பரிகாரங்களை செய்துகொள்ளவேண்டும். தவிர தனியாக ஒருஆசார்யர்தான் செய்யவேண்டும் என நினைக்கக்கூடாது.

மேலும் “ஏகாசார்யேண கர்த்தவ்யம்” என்பதால் அந்த ஆசார்யர்தான் செய்ய வேண்டும் என்பது உறுதியாகின்றது. சிலசமயம் பிராயச்சித்தங்களில் அனேகம் பேர் உதவி தேவைப்படுகின்றதே என்றால், அதற்கு அவரது மகனோ, உறவினர்களோ அல்லது அவர்களால் தீக்ஷை செய்விக்கப்பட்ட சிஷ்யர்களோ உதவிசெய்யலாம் எனக்கூறுவதால் அந்தஆசாரியருக்கே பொறுப்பும், அதிகாரமும்

உள்ளவராகின்றார். ஆகையினால் அதற்கு தகுந்தவாறு நம்மை நாம் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும்.

தற்போது கூறப்பட்ட பரிகாரங்கள் அனைத்தும் மிகவும் அத்தியாவசியம் செய்யவேண்டியதே என்றபோதிலும், தற்கால சூழ்நிலையில் இவற்றினை எவ்வாறு செய்திடஇயலும். தினசரி பூஜையையே நம்மால் முடிந்தவரை சிறிதுநேரம் செய்யலாம் என்று ஒருசிலர் நினைத்தபோதிலும், அவ்விடத்திய சூழ்நிலைகளால் அவர்களும் பாதிப்படைகின்றார்களே இதற்கு என்னதான் வழி? தற்போதைய சூழலுக்கு ஏற்ப சுலபமான மார்க்கம் ஏதேனும் உண்டா? என்று சிந்திக்கும்போது, ஆசாரமும், நித்யானுஷ்டானமும் அடிப்படை என்பதால், இவற்றை நாம் கட்டாயம் பின்பற்றவேண்டும். தினமும் நாம்செய்யும் பூஜையில் நமக்குத்தெரிந்தும் தெரியாமலும் பல குறைபாடுகள் ஏற்படலாம். நித்யாக்னி செய்யும் ஆலயமானால் தினசரி நித்யாக்னிஹோமம் செய்யும்போது தனியாக மூலமந்திரத்தாலும், அஸ்திரமந்திரங்களாலும் அவகாசத்திற்கு ஏற்ப, குறைந்தபக்ஷம் பத்து, பத்து, ஆஹுதிகள் ஹோமம்செய்து இறைவனிடம் சமர்ப்பித்து, பிரார்த்தித்து கொள்ளலாம். நித்யாக்னி இல்லாதஆலயங்களில் பூஜையின்முடிவில் மேற்கூறிய மந்திரங்களை முடிந்தஅளவுக்கு ஜபம் செய்து சமர்ப்பித்து, மனம் உருக பிரார்த்திக்கலாம். இவைகளை நாமே சுதந்திரமாக செய்யமுடியும். இவ்வாறு செய்வதானது ஆபத்து கால தர்மமாகவே கொள்ளவேண்டுமேயல்லாது, இதுவே போதுமானதாக நினைக்கக் கூடாது. முடிந்தபோது விதிகளில் கூறியவாறு தெளிந்து செய்வதே சாலச்சிறந்ததாகும்.

வாழ்க சீர்அடியார்எல்லாம்

சுபம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

சைவாகமோக்த லோகசாந்திகர கிரியாபேத விவரணம்

ஸ்ரீமத் தேசிகபாதேப்ய: ஸசக்திப்யோ நமோ நம: |
ஸதாசிஷ்டாத்ம சித்வ்யக்தி காரணேப்யோ நமோ நம: ||

கட்டுரையாளர்
திருப்பரங்குன்றம். ஆகமசிரோமணி.
சிவஸ்ரீ எஸ்.கே. ராஜாபட்டர் (எ) சந்திரசேகரபட்டர்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற வாக்கிற்கிணங்க, கருணையேவடிவான காளிகாம்பிகையின் திருவருட்துணையோடும், ஸமஸ்ததேச ஸர்வஸாதகஸம்ராட் சிவஸ்ரீ. டி.எஸ். ஸாம்பமூர்த்தி சிவாசார்ய ஸ்வாமிகள் அவர்களின் குருவருளோடும், துவங்கி நடைபெற்றுவருகின்ற இந்த அற்புதமான நிகழ்வுகளின் தலைவர், சிவாகம ப்ரவீணர் சிவஸ்ரீ ஸோமசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், சைவாகமகலாசார வித்யாகேந்த்ரம், சிவாசார்யர் அறக்கட்டளை, ஸ்வாமி ஸதாசிவோம் பவுண்டேஷன் ஆகிய அறநிறுவனங்களின் அமைப்பாளர்களான, சிவாசார்யஸ்வாமிகளின் புத்ரரத்னங்களாகிய சிவஸ்ரீ ஸதாசிவோம் சிவாசார்யர், சிவஸ்ரீ காளிதாஸ சிவாசார்யர், சிவஸ்ரீ ஷண்முக சிவாசார்யர் ஆகியோருக்கும் அவையில் வீற்றிருக்கும் பெரியோர்களுக்கும் முதற்கண் எனது நமஸ்காரத்தையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாம்வல்ல அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணலையும் எனது குருநாதர் அவர்களின் திருவடிக்கமலங்களையும், மனம், மெய், மொழிகளால் வணங்கி, சைவாகமங்கள்கூறும், உலக அமைதிக்கான செயல்வகைகளின் விளக்கம் எனும் தலைப்பில் பேச முயற்ச்சிக்கிறேன்.

சிவாகமங்களும் அவை அருளப்பட்டதன் நோக்கமும்

சிவபெருமானைப் பரமாகவைத்துப் பேசும் நூல்கள் சிவாகமங்கள். அவை உபதேசம் செய்யப்பட்டதன் நோக்கம் அல்லது காரணம் என்ன

என்பது சிவாகமங்களில் பல இடங்களில் காணப்படுகிறது. அவற்றுள் சில பின்வருமாறு,

ஸ்ருஷ்டிகாலே மஹேசான: புருஷார்த்த ப்ரஸித்தயே |
விதத்தே விமலம் ஜ்ஞானம் பஞ்சஸ்ரோதோபிலக்ஷிதம் ||
(ஸ்ரீமந் ம்ருகேந்த்ராகமம், சத்ரத்ன ஸங்க்ரஹம்)

பொருள்: உலகத்தை தோற்றுவிக்கும் காலத்தில் சிவபெருமானானவர் உயிர்களுக்கு (அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு) புருஷார்த்தங்களும், (மனிதனால் வேண்டத்தக்க மேற்கூறிய நான்கு பொருள்களே புருஷார்த்தங்கள் எனப்படுபவை) ஏற்படும் பொருட்டு, தனது ஐந்துமுகங்களிலிருந்து வெளிப்பட்டதூய்மையான (அறிவினை) ஞானத்தினை (அளிக்கக்கூடிய சிவாகமங்களை) தோற்றுவித்தார்.

அதாத்ம மல மாயாக்ய கர்மபந்த விமுக்தயே |
வியக்தயே ச சிவத்வஸ்ய சிவாத் ஜ்ஞானம் ப்ரவர்த்ததே ||
(ஸ்ரீமத் ஸ்வாயம்புவஸூத்ரம்)

பொருள்: ஆன்மாக்களின் ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் ஆகிய மூன்று கட்டுகளும் (ஆத்மாக்களை விட்டு) தனித்தொழியும் பொருட்டும்(ஆன்மாக்களின் உள்ளே மறைந்திருக்கும்) சிவத்தன்மை யானது வெளிப்படும் பொருட்டுமே, சிவனிடமிருந்து ஞானம் என்பதாகிய சிவாகமம் வெளிப்பட்டது.

"அத ஜகதி மலத்ரய பிஹித த்ருக்க்ரியதயா துஸ்தர பவஜலதி மத்ய நிமக்னானாம் ததுத்தரணோபாய மஜாநந்தம், அகிலானாம் ப்ராணிணாம் அனுக்ரஹாய, பரமகாருணிகோ, பகவாந் பரமசிவ: – காமிகாதி வாதுளாந்தான் திவ்யாகமான் நாதாத்யாத்மதயா ப்ரணிநாய ததனு – பகவான் ஸதாசிவோபி – நாதாத்யாத்மதயா – ஆகதம் ததேவ தந்த்ரம் – அனேக சந்தோரூபதயா விபஜ்ய – காமிகாதி ஸம்ஹிதா க்ரமேண – ப்ரணவாதிப்ய: – தசப்ய: சிவேப்ய: – அநாதிருத்ராதிப்ய: – அஷ்டாதசேப்ய: – ருத்ரேப்யச்ச உபதிஷ்டவான்"

ஊலகில் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் மறைக்கப்பட தனது ஞானம் மற்றும் க்ரியைகளை உடையதும், கடப்பதற்கு மிகவும் அரிதான ஸம்ஸாரம் என்னும் கடலில் மூழ்கி யிருப்பவைகளுமாகிய ஆன்மாக்களுக்கு அனுக்ரஹம் செய்யும் பொருட்டு, பரமகருணாமூர்த்தியாகிய பரசிவம், காமிகம் முதல் வாதுளம் ஈறான திவ்ய ஆகமங்களை முதலில் அருளினார்.

பிறகு அப்பரமேச்வரன் ஸதாசிவமூர்த்தியாக உருக்கொண்டு அவ்வாகமங்களை பல்வேறு சந்தங்களாகப் பிரித்து காமிகம் முதலான ஆகமங்களை ப்ரணவர் முதலான சிவர்கள் பத்துநபர்களுக்கும், அனாதிருத்ரர் முதலான பதினெட்டு நபர்களுக்குமாக உபதேசம் செய்தார். (ஸ்ரீ மத் பௌஷ்கராகமம். முதல்ஸூத்ரஉரை, ஸ்ரீமத் உமாபதி சிவாசார்யர்)

மேற்கூறிய வாக்யங்களின்மூலம் சிவாகமங்கள் அருளப்பட்டதன் நோக்கம் உலகநன்மை அல்லது உலகஅமைதியே என்பது விளங்குகிறது.

ஆத்மார்த்த பரார்த்த பூஜைகள்.

அச்சிவாகமங்கள், சர்யை, க்ரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களின் மூலமாக பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையை விளக்குகின்றன. மேற்கூறிய நாற்பாதங்களுள் க்ரியாபாதத்தில் பூஜைஎனப்படுகின்ற வழிபாடானது **ஆத்மார்த்தம், பரார்த்தம்** என இருவகையாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் வழிபடக்கூடியவனுக்கு மட்டும் பலனளிக்கவல்லது **ஆத்மார்த்தம்.** உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பலனளிக்கவல்லது **பரார்த்தம்** எனப்படும். இவற்றுள் **பரார்த்தலிங்க ப்ரதிஷ்டா மற்றும் பூஜைகள்** உலகநன்மையின் பொருட்டே செய்யப்படுகின்றன என்றகருத்தை சிலச்லோகங்கள் விளக்குகின்றன. அவற்றைப் பார்ப்போம்.

ஸர்வேஷாம் ரக்ஷணார்த்தாய க்ராமாதிஷு விசேஷத: |
ஸ்தாபிதம் விதிநா லிங்கம் ஸூரைர் வா முனிபிர் நரை: |
ஸ்வய முத்பூத லிங்கஞ் ச ப்ரதிமாஞ் சேச்வராத்மிகாம் |
தத் பரார்த்தம் ஸமாக்யாதம் ஸர்வேஷாம் ஆத்மநப் பலம் |

(ஸ்ரீமத் பூர்வகாரணாகமம்)

பொருள்: (உலகிலுள்ள) அனைவரின் நல்வாழ்வின் பொருட்டு க்ராமம் (நகரம், பட்டணம்) போன்ற இடங்களில், விசேஷமான முறையில் தேவர்களாலோ, முனிவர்களாலோ அல்லது மனிதர்களாலோ, லிங்கத்தினையோ, முறைப்படி தான் ஸ்தாபிக்கப்பட்ட தோன்றியாகிய ஸ்வயம்புலிங்கத்தினையோ, இறைத்தன்மை பொருந்திய சிலைகளையோ பூஜை செய்வது என்பது பரார்த்தம் எனப்படும் (அந்த பரார்த்த பூஜையின்) பயன் அனைத்து உயிர்களுக்கும் உரியதாகும்.

லிங்க ப்ரதிஷ்டாம் வக்ஷ்யாமி போக மோக்ஷகரீம் ந்ருணாம் |

(ஸ்ரீமத் அஜிதாகமம்)

பொருள்: மக்களுக்கு போகத்தையும் மோக்ஷத்தையும் தரவல்லதான லிங்கப்ரதிஷ்டாவிதியைக் கூறுகிறேன்.

அதாதஸ் ஸம்ப்ரவக்ஷ்யாமி ஸர்வலோக ஹிதாய ச |
ராஜராஷ்ட்ரா பிவ்ருத்யர்த்தம் சிவ ஸ்தாபந முத்தமம் ||

(ஸ்ரீமத் உத்தரகாரணாகமம்)

பொருள்: உத்தமமானதும். அனைத்துலகிற்கும் நன்மையைத் தரவல்லதும், அரசனுக்கும் ராஜ்யத்திற்கும் நன்மையைத் தரவல்லதுமான சிவஸ்தாபனத்தை இப்பொழுது கூறுகிறேன்.

யஸ்மிந் ராஷ்ட்ரே க்ருதம் ஹ்யேவம் ராஜா விஜய மாப்னுயாத் |
புத்ர பௌத்ராச் ச வர்தந்தே தத் ராஷ்ட்ர மபி வர்ததே |
ஸுபிக்ஷம் க்ஷேம மாரோக்யம் வர்தந்தே ச ஸதா புவி |

(ஸ்ரீமத் தீப்தாகமம்)

பொருள்: எந்த நாட்டில் இவ்விதமாக (சிவஸ்தாபனமானது) செய்யப்பட்டதோ அந்த நாட்டின் அரசன் வெற்றியடைவான். குழந்தைச் செல்வங்கள் அபிவிருத்தி ஆகும். பூமியில் ஸுபிக்ஷம், நன்மை, ஆரோக்யம், ஆகியவை அதிகரிக்கும்.

அத வக்ஷ்யே விசேஷேன லிங்கஸ்தாபன முத்தமம் |
தன்யம் யசஸ்கரம் சாயுர் வர்தனம் புத்ர வர்தனம் |
புக்தி முக்தி ப்ரதம் சைவ ஸர்வ யக்ஞ பலப்ரதம் |

(ஸ்ரீமத் நிச்வாஸாகமம்)

பொருள்: பிறகு உத்தமமானதும், செல்வம், புகழ், ஆயுள், குழந்தைகள், போகம், மோக்ஷம் ஆகியவற்றைத் தரவல்லதும், அனைத்து யாகங்களின் பலனைத் தரவல்லதுமான, லிங்கஸ்தாபன விதியை விசேஷமாகச் சொல்கிறேன்.

மேற்கூறியவை மட்டுமின்றி, நித்யோத்ஸவம், மஹோத்ஸவம், ஸ்னபனம் போன்ற அனைத்துக் க்ரியைகளும் உலகநன்மையைக் கருத்தில்கொண்டே செய்யப்படுகின்றன என்பது விளங்குகிறது. எனவே சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள க்ரியைகள் யாவுமே உலக அமைதிக்கான க்ரியைகளே என்றுகூறி நிறைவு செய்யலாம்.

ஆனால் தனிமனிதனுக்கு நன்மையைத் தரவல்லதான ஆத்மார்த்தபூஜையும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளதே. பிறகு எப்படி

ஆகமத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துக் கிரியைகளுமே உலக அமைதிக்கானவையே என்று கூறமுடியும் என்ற கேள்வி எழுகிறது. ஆனால் தனிமனிதன் என்பவன் உலகிற்கு அப்பாற்பட்டவன் அல்லவே. ஒவ்வொரு தனிமனிதனின் பங்கும் உலகஅமைதிக்கு அவசியம்தான். எனவே ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவரவர்கள் செய்த பூஜாபலன்களைத் தந்து அவர்களைப் பக்குவப்படுத்தவல்லதான ஆத்மார்த்தபூஜையும் உலகஅமைதியைக் கருத்தில்கொண்டு அமைந்ததே எனில் அது மிகையாகாது. எனவே சைவாகமங்கள் கூறுகின்ற க்ரியைகள் யாவுமே உலகஅமைதிக்கான க்ரியைகளே என்பது நிச்சயம்.

உலக அமைதிக்கான சாந்திகர்மாக்கள்

அப்படியானால் சிவாகமங்கள் கூறும் உலகஅமைதிக்கான க்ரியைகள் என்று தனியாக எதையும் கூறமுடியாதா? என்ற கேள்வி எழுகிறது. எனவே இவ்விடத்தில் நாம் இவ்வாறு சிந்திக்கவேண்டும். அதாவது உலகஅமைதிக்கான க்ரியைகள் என்று பொருள் கொள்ள வேண்டும். சிவபெருமான் சிவாகமங்களை உலகநன்மையின் பொருட்டே அருளிச்செய்தார். ஆனால் அவரால் உபதேசம் செய்யப்பட்ட அனைத்தும் முறையாகப் பின்பற்றப்பட்டால்மட்டுமே உலகம் முழுவதிலும் அமைதி என்பது நிகழ்வது நிச்சயம். ஆனால் அவற்றுள் சொல்லப்பட்ட விஷயங்கள் முறையாகக் கடைபிடிக்கப்படாத காரணத்தால் உலகின் பலஇடங்களில் அமைதியின்மை ஏற்படுகிறது. அவ்வாறு அமைதியின்மையானது ஏற்படும் பொழுது, இவ்வமைதியின்மையைப் போக்குவதற்கு என்னசெய்யப்படவேண்டும் என்பதையும் ஆகமங்கள் விளக்கியுள்ளன. அவையே சாந்திகர்மாக்கள் எனப்படும் உலக அமைதிக்கானக்ரியைகள் ஆகும்.

முதல்வகை சாந்தி கர்மாக்கள்

இந்த தவறு நிகழ்ந்தால் இந்த விளைவு ஏற்படும் என்று ஆகமங்கள் உலகில் ஏற்படுகின்ற அமைதியின்மைக்கான காரணங்களாகப் பலவற்றைப் பட்டியலிடுகின்றன. அதாவது அமைதியின்மை அல்லது தீயபலன்கள் ஏற்படும் முன்னரே அவற்றைத் தடுப்பதற்கான வழியாக உள்ள இதற்கு ப்ராயச்சித்தம் என்று பெயர். உதாரணமாக "நைவேத்ய ஹீனே துர்பிக்ஷம் ஸத்ய: பவதி த்ருவம்" அதாவது நைவேத்யம் இல்லாமல் பூஜை செய்யப்பட்டால் அதனால் நாட்டில் துர்பிக்ஷம் ஏற்படும் என்றும், எனவே நைவேத்யம் இல்லாமல் பூஜைநடைபெற்றதை

அறிந்தால், உடனே அதற்கான ப்ராயச்சித்தத்தைச் செய்யவேண்டும். அவ்வாறு ப்ராயச்சித்தம் செய்யப்பட்டால் துர்பிக்ஷம் ஏற்படுவது தடுக்கப்பட்டதாக ஆகிவிடும்.

மேலும் இவ்வகையில் தவறுகள் எவ்வாறு நிகழும் என்பதையும் ஆகமங்கள் கூறுகின்றன. ஸ்ரீமத் அம்சுமானாகமம் நான்குவகைகளில் தவறுகள் நிகழலாம் என்று குறிப்பிடுகிறது.

க்ரியாயா: (அ)கரணே சைவ வ்யத்யாஸே விபரீதகே |
விஸ்ம்ருதே த்ரவ்யஹீனே ச ப்ராயச்சித்தம் விதீயதே ||

அதாவது க்ரியைகளைச் செய்யும்பொழுது, முறையேசெய்யாமலோ வேறுவிதமாகவோ, மாற்றியோ, மறந்தோ, சொல்லப்பட்ட பொருள்களில் குறைவுடனோ ஒருக்ரியையானது செய்யப்பட்டால் அதற்குப் ப்ராயச்சித்தம் சொல்லப்பட்டுள்ளது என்பது இதன் பொருள்.

ப்ராயோ விநாச மித்யுக்தம் சித்தம் ஸந்தான முச்யதே |
விநாசஸ்ய து ஸந்தானம் பராயச்சித்த மிதீ ஸ்ம்ருதம் ||

அதாவது தான் செய்த தவறினை உணர்ந்து, அத்தவறால் ஏற்பட்ட பாபத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள உதவும் க்ரியையே ப்ராயச்சித்தம் ஆகும். இதிலும் ஒரு தனி மனிதன் தான் தனக்கெனச் செய்யவேண்டிய க்ரியைகளில் தவறுசெய்தால் அதன் பலன் அவனை மட்டுமே அடைகிறது. ஆனால் உலகனைத்திற்கும் நன்மையைத்தரவல்ல பரார்த்தபூஜையில் ஏற்படுகின்ற தவறு உலகனைத்திற்கும் தீங்கை விளைவிக்கிறது. எனவே இரண்டிற்குமான ப்ராயச்சித்தங்களை ஆகமங்கள் விதித்துள்ளன. கர்மங்கள் எண்ணில் அடங்காதவையாக இருப்பதால், அதற்கானப் ப்ராயசித்தங்களையும் எண்ணி வகைப்படுத்திக் கூறுதல் என்பது முடியாது என்கிறது ஸ்ரீமத் பூர்வகாமிகாகமம்.

ப்ராயச்சித்தம் விபேதேந ந சக்யம் வக்து மக்ரஜா: |
கர்மணா மப் யநந்தத்வாத் க்ரந்த விஸ்தார தோஷத: ||

என்றுகூறி, பிறகு சுருக்கமாகச் சிலப்ராயச்சித்தங்கள் கூறப்பட்டுள்ளன.

ததோ நிகத்யதே லேசாத் ப்ராயச்சித்தம் ஸனாதனம் |
ஸ்நானம் ஜபம் சிவத்யானம் ப்ராணாயாமம் ப்ரதக்ஷிணம் ||
லிங்க பேர ஆகமாதீனாம் ஸ்வ குரோர் தேசிகஸ்ய ச |
சிவஜ்ஞானா ராதானாஞ்ச தர்சனம் தந் நிரீக்ஷணம் |
நமஸ்காராத்ய மேதேஷாம் சிவதாம நிஷேவணம் ||

சிவாக்னி குரு பூஜா ச போஜனம் தீக்ஷிதாத்மனாம் |
உபவாஸ: சரோர்புக்தி: பாத்ரசேஷாசனம் ச யத் ||
சாந்திச் ச சாந்திஹோமச் ச திசாக்ய ஸம்ஹிதாஹுதி: |
மூர்த்திஹோமோ க்ருதக்ஷௌத்ர ரஸானான்னாத் யனேகதா ||
ஏகாஹாத் யுத்ஸவா: சீதகும்போ வைசேஷிகார்ச்சனம் |
ஏவமாதி ஸமுத்திஷ்டம் ப்ராயச்சித்தம் ஸனாதனம் ||

மேற்கூறியவை தவறுக்கான ப்ராயச்சித்தங்கள். இவற்றுக்கான பாபப் பட்டியலைப் பார்த்தால் நாம் இப்போது (பல்வேறு காரணங்களால்) அறிந்தும் அறியாமலும் செய்கின்ற அபராதங்கள் பலவற்றையும் கருத்தில்கொண்டு அவை அனைத்திற்கும் ப்ராயச்சித்தங்களை விதித்திருக்கும் இறைவனின் கருணைத்திறத்தை நினைக்கும்போது பெரும் வியப்பும், அதை பின்பற்ற வேண்டுமென்றால் ஒவ்வோரு நாளும் நித்ய, நைமித்திகாதி பூஜைகளைவிட ப்ராயச்சித்தத்திற்கே அதிகநேரம் செலவிடவேண்டி வருமோ என்ற எண்ணமும் தோன்றுகிறது. இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படும் என்பதையும் உணர்ந்தவன்தானே முற்றுமுணர்ந்த ஸர்வேச்வரன். அதனால்தான் கருணாமூர்த்தியான அப்பரமேச்வரன், நீ செய்தது தவறு என்று உணர்ந்து அதற்கு ப்ராயச்சித்தம் செய்யமுடியாதபோது முடியவில்லையே என்று கவலைப்படாதே,

அபராத ஸஹஸ்ராணி க்ரியந்தே அஹர்நிசம் மயா |
தாஸோ(அ)யம் இதி மாம் மத்வா க்ஷமஸ்வ பரமேச்வர ||

என்று மனமுறுகி ப்ரார்த்தனை செய் என்று அந்தப் ப்ரார்த்தனையையும் அருளியுள்ளானோ எனத் தோன்றுகிறது. இது முதல்வகை

பவித்ரோத்ஸவம்

இம்முதல்வகை ப்ராயச்சித்தம் மட்டுமின்றி "பவித்ரோத்ஸவம்" என்ற ஒரு க்ரியையும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது நித்யம், நைமித்திகம், காம்யம் ஆகிய மூவகைக் கர்மாக்களிலும் தவறுகள் ஏற்பட்டது. நமது அறிவிற்கு எட்டினால் மட்டுமே நம்மால் அதற்கு ப்ராயச்சித்தம் செய்ய இயலும். ஆனால் நிகழ்ந்த தவறுகள் நம் அறிவிற்கு எட்டாவிட்டால் அதற்கு என்ன செய்வது? அதற்கும் தீயபலன் ஏற்படத்தானே செய்யும். அதுபோன்ற சூழ்நிலைகளிலிருந்து உலகை (நம்மை) காக்க எழுந்ததே பவித்ரோத்ஸவம் என்பதாகும்.

ப்ராயச்சித்தகர்மா என்பது தவறுக்கான தண்டனை போன்றதேயன்றி தவறை நிறைவு செய்யக்கூடியது அல்ல, ஆனால் பவித்ரோத்ஸவமோ **"கர்மலோப பிதுரம் கர்மபூரகம்"** அதாவது கர்மத்தில் ஏற்பட்ட குறைவைப் போக்ககவல்லது வஜ்ரம் போன்றது மற்றும் கர்மாவினைப்பூரணமாக ஆக்குவது ஆகும். பவித்ரோத்ஸவ காலத்ததில் பவித்ரஸமர்ப்பணம் செய்யும்பொழுது சொல்லப்படுகின்ற மந்த்ராத்மகமான ச்லோகத்தின் பொருளைப் பார்த்தால் இறைவனின் கருணைத்திறத்தை நம்மால் ஓரளவாவது புரிந்துக்கொள்ளமுடியும் அதை இனி பார்ப்போம்.

ஓம் காலாத்மனா த்வயா தேவ யத் த்ருஷ்டம் மாமகே விதௌ |
க்ருதம் க்லிஷ்டம் ஸமுத்ஸ்ருஷ்டம் ஹ்ருதம் குப்தஞ்ச மத் க்ருதம்||
ததஸ்து க்லிஷ்டம் அக்லிஷ்டம் க்ருதம் புஷ்டம் அஸத்க்ருதம் |
ஸர்வாத்மனா (அ)முனா சம்போ பவித்ரேண த்வ திச்சயா ||

பொருள்: எனது பூஜைகளில் குறைபாட்டுடன் அனுஷ்டிக்கப்பட்டவை (க்லிஷ்டம்க்ருதம்) சில இருக்கலாம். ஆஜ்ஞானத்தால், சில ஸம்ஸ்காரம் செய்யபடாமலேயே, செய்யப்பட்டிருக்கலாம் அல்லது விடப்பட்டிருக்கலாம். (ஸமுத்ஸ்ருஷ்டம்) சில வேலைப்பளுவின் காரணத்தால், ஏனோதானோ என்று செய்யப்பட்டிருக்கலாம் (ஹ்ருதம்) சில கருமித்தனத்தோடு சிக்கனமாகச் செய்யப்பட்டிருக்கலாம். (துஷ்க்ருதம் குப்தம்) அல்லது தவறாகச் செய்துவிட்டு, ப்ராயசித்தம் செய்யாததால், வெட்கத்தால் மறைக்கப்பட்டிருக்கலாம். (குப்தம்) கால வடிவினனாகி, நான்செய்கின்ற அனைத்து கர்மாக்களுக்கும் ஸாக்ஷியாக விளங்குகின்ற உன்னால் எனது பூஜாதிகள் (மேற்கூறிய வகைகளில்) செய்யப்பட்டது பார்க்கப்பட்டிருப்பின், ஹே சம்புவே! உனது இச்சையால், ஆத்ம, வித்யா, சிவ தத்வஸ்வரூபமாயும், ஸர்வ வ்யாபகமாயும் (கங்காவதார பவித்ரம்) எல்லா குற்றங்களையும் நீக்கி, நிரப்பவல்லதாயுமுள்ள பவித்ரத்தால் எனது க்லிஷ்டகர்மா, (குறைவானகர்மா குறைவற்றதாயும்) அக்லிஷ்டமாயும் ஸமுத்ஸ்ருஷ்டம், ஹ்ருதம், குப்தம் ஆகிய அஸத்க்ருதங்கள் புஷ்டமாயும் மாறவேண்டும்.

இரண்டாவது வகை சாந்திகர்மாக்கள்

அடுத்தது என்ன காரணத்தால் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடியாத நிலையில், பூகம்பம், வெள்ளம், நெருப்பு, புயல், பெருவ்யாதிகள் போன்ற அஸம்பாவிதங்களை மட்டும் கண்டு அச்சமயத்தில் அமைதி ஏற்படவேண்டிச் செய்யும் சாந்தி மற்றொரு வகை. இதுவும் ப்ராயச்சித்தமே என்றாலும் இது காம்யப் ப்ராயச்சித்தம் எனப்படும். முதல்வகை ப்ராயசித்தமானது தவறு நிகழ்ந்த இடத்தில்

மட்டுமே செய்யப்படவேண்டும். இது கண்டிப்பாகச் செய்யப்படவேண்டும். ஆனால் இரண்டாவதான ப்ராயச்சித்தமானது பல இடங்களில் செய்யப்படலாம். இதுசெய்யப்படவேண்டும் என்று அவச்யம் இல்லை. யாரால் எங்கு முடியுமோ அங்கு செய்யலாம். இவற்றையே இங்கு நாம் லோகசாந்திகரக் க்ரியைகள் எனக் குறிப்பிடலாம்.

லோகசாந்திகர க்ரியைகளின் விவரணம்

ஸ்ரீமத் பூர்வகாமிகாமம் க்ராம சாந்தி, ப்ரவேசபலி, வாஸ்து சாந்தி என்ற க்ரியைகளையும், ஸ்ரீமத் உத்தரகாமிகாகமம் பல்வகையான ஸ்னபனங்கள், சாந்தி, சாந்திஹோமம், திசாஹோமம், மூர்த்திஹோமம், ஸம்ஹிதாஹோமம், வ்யாதிநாசவிதாநவிதி, புஷ்யாபிஷேகவிதி, துலாரோஹாதி ஷோடசதானவிதி போன்ற பல க்ரியைகளைக் கூறுகின்றது.

இவற்றுள் க்ராமசாந்தி முதலான சில சாந்திகள், ஸ்நபனம், உத்ஸவம், தீக்ஷை, ப்ரதிஷ்டை போன்ற பலக்ரியைகளுக்கு அங்கமாகவும் கூறப்பட்டுள்ளன. மேற்கூறிய க்ரியைகளுள், ஒருசில க்ரியைகள், க்ராமாதிகளுக்கான சாந்திகர்மங்கள், ஒருசில ஜனங்களுக்கான சாந்தியை குறிக்கோளாகக் கொண்டவை. சில பஞ்சபூதங்களினால் ஏற்படுகின்ற தீங்குகளை நிவ்ருத்தி செய்யக்கூடியவை என்று அறிக.

மேற்சொன்ன சாந்தி க்ரியைகளின் விவரங்களை பெரியோர்களின் மூலமாக அறிந்து அவற்றை முறையாக பின்பற்றி உலக அமைதிக்கு பிரார்த்தனை செய்வோமாக.

சிவ மஸ்து ஸர்வ ஜகதாம் பரஹித நிரதா பவந்து பூத கணா: |
தோஷா: ப்ரயாந்து சாந்திம் ஸர்வத்ர ஸுகீபவந்து ஸர்வலோகா: ||

சுபம்.



உ

ஓம் நமசிவாய

சிவாகமங்கள் உபதேசிக்கும் மந்திரந்யாஸமும் அதன் தத்துவங்களும்

கட்டுரையாளர்

ஆகமபண்டிதர் சிவஸ்ரீ. ஏ.எஸ். சுந்தரமூர்த்தி சிவாசார்யர், குருமுதல்வர், மஹாபாடசாலை, பெங்களூரு.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்கிற மாணிக்கவாசகரின் திருவாக்கிற்கிணங்க, போகமோக்ஷங்கள் அருளவல்ல நம்பிரானின் திருவடிதொழும் அருட்பணியினை உமாதேவி வினவ, பரமபதியான சிவபெருமான் "எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனையென உறைத்தருள" என்கிற பெரியபுராண வாக்கிற்கிணங்க, உமாதேவியார் முதல் பூசுரர்கள் ஈறாக, அத்தனை ஆன்மாக்களும் "ஆகமமாகி நின்று அன்னிப்பான்தாள் வணங்கி" உய்வுறும்வகையில் நமக்கு கிடைத்து, அரவொலி என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் மொழிந்த "சிவாகமங்களே" ஆகும். சிவாகமமானது

ஆங்பூர்வக கம்ல்ரு தாது நிஷ்பந்நஸ்ய

பூர்ணஞான மித்யர்தோ போத்யதே

ஆகமமானது, பூர்வமானஞானத்தினை தன்னகத்துட்கொண்டு, ஆன்மாக்களுக்கும் போதிக்கிறது. முற்றும் இது நான்கு பாதங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். இதில் நமது அத்தனை (கிரியைகளும்) செயல்பாட்டுமுறைகளும் க்ரியாபாதத்தில் வருகின்றன.

க்ரியாபாதத்தின் உணர்வின் வண்ணம் திகழும் ஆசார்யன், நிபுணன் என்று பௌஷ்கராகமம் "க்ரியா பாதேது நிபுண:" என்று கூறுகிறது. அத்தகைய நிபுணத்துவமானது, ஆசார்யன் மற்றும் அவன்நிகழ்த்தும் செயல்கள் ஸம்பூர்ணமாக அமைதலினாலும், ஆசார்ய தைவ பரஸ்பர பாவத்தினாலும் நிபுணனாகிறார். அந்த ஒரு பூஜாக்ரியைகளிலும் தெய்வத்தினுடைய வெளிப்பபாடு மிக முக்கியமான பகுதி. ஆந்த வெளிப்பாடானது, ந்யாஸம் என்கிற க்ரியை மூலமே வினையும் என்று ஸ்வாம்புவாகமம் கூறுகிறது.

ந்யா சப்தம் தேவதாஹ்வாநம் ஸ சப்தம் ஸ்தாபநம் குரு |
ஆஹ்வான காரணாத் யஸ்மாத் நியாஸ மித் யபிதீயதே ||

ந்யா – என்றது இறைவனை அழைத்தல் என்பதையும்,
ஸ: – என்றது ஸ்தாபனம் செய்வித்தல் என்பதையும் கூறுவதாகும்.

என்று கூறுகிறது. அதாவது ஸாதாரண அவயவமான கருவி யினை ஸ்பர்சித்து எப்படி இரும்பானது காந்தத்தினால் தொடத்தொட இரும்பும் காந்தமாகிறதோ அதனைப்போன்றே அவயவக்கருவியான (தேஹம், பிம்பம்) இவைகள் ந்யாஸக்ரியையினால் அதுவும் உரிய மந்திரங்களினாலே செயலாற்ற வேண்டும். ஏனெனில் நமது க்ரியாபாகமானது முழுமையாக மந்திரங்களினாலே செய்வது என்றும், மந்திரமின்றி எந்த ஒரு க்ரியையும் நிகழாது என்று பூர்வகாமிகாகமம் **"மந்த்ரம் வினா க்ரியா நாஸ்தி கர்ஷணாத் யர்சநான்திகா"** என்று கூறுகிறது.

அவ்வண்ணமே இன்று மூலலிங்கத்தின் பீட ப்ரக்ஷாளந கார்யம், நவார்ணமந்திரம் என்கிற பாசுபதாஸ்வர மந்த்ரத்தினால் என்று அர்ச்சனாவிதியில் குறிப்பிடுகிறது. அவ்வண்ணமே ந்யாஸக்ரியையும் சிறப்பான மந்திரங்களான, பீஜமந்த்ரம், அங்கமந்த்ர, மாலமந்த்ரம், வேதமந்த்ரம், காயத்ரிமந்த்ரம், பஞ்சப்ரம்ஹ மந்திரங்கள் மற்றும் ஷடத்வமந்திரங்கள் முதலானவற்றால் கற்பிக்கப்படுகிறது.

அத்தகைய மந்த்ரந்யாஸத்தின் தேவை என்ன?

அதாவது அந்தர்முகமாகவும் ஸர்வவ்யாபகமாகவும் இருக்கும் இறைவன் நிலைப்பொருள். (சாச்வதம்) அவருக்குப் பலவித கலாசக்திகளுடன் கூடிய மந்தராக்ஷரமயமாக விளங்கும் இறைவியை, ந்யாஸ ஆவாஹனாதி கார்யத்தால், இயக்கவைத்தாலே, பரார்த்தத்தில் செயல்படவேண்டிய பஞ்சக்ருதயம் முதலானக்ருத்யங்கள் வெளிப்படும்.

இறைவன் – நிலைப்பொருள் – ஸர்வவ்யாபி.
இறைவி – இயக்கம் – அந்தர்யாமினி.

(உதாஹரணம் = மரம் அதனுள் இருக்கும், அக்நியின் தன்மை இருந் தாலும் நெய்விட்டு அதனை ஜ்வலிக்க வைத்தல் போல்)

குலப்ரகாசதந்த்ரம்

ஏவம் லயான் முக்திகாமஸ் சிவ சக்த்யோஸ்து ஸம்கதி: |
விபரீத விதாநேந புக்திகாமஸ்ய ஸா பவேத் ||

என்றும் இப்படியாக சில ந்யாஸங்களின் தேவையும், ஷடத்வந்யாஸம் செய்தலின் தேவையையும் அஜிதாகமம் கூறியுள்ளது.

தத்தத் ஷடத்வாந மஜ்ஜா சுக்லாதீன்யபி கல்பயேத் |
த்வக் ரக்த மாம்ஸ மஜ்ஜாதி நாஸ்தி வை பரமேச்வரே ||
மந்த்ராத்மநச் சித் கனஸ்ய த்வகாதி உபசர்யதே |
க்ரியதே நோ ஷடத்வா சேச் சிவஸ் து அவ்யாபகோ பவேத் ||

என்றும் அதாவது தோல், குருதி, எலும்பு மஞ்ஜை, சுக்லம், மாம்ஸம் ஆகிய அத்துனை சரீரஉருப்புகளும் இறைவனுக்குக் கிடையாது. மந்த்ர சைதன்யத்தினாலே அந்த உறுப்புகள் உச்சரிக்கப்படுகின்றன. இத்தகைய ஷடத்வாவினை நியாஸம் செய்யாவிடில், இறைவன் அவ்யாபகம் ஆகிறார். பூஜைசெய்விக்கும் (கும்பம்/பிம்பம்) கருவியில் இறைவனின் வ்யாபகம் அமையாது. கர்மமும் நிஷ்பலம். ஆகையால் ந்யாஸத்தினை மிகத்தேவையான க்ரியை என்று சிவாகமங்கள் மொழிகிறது. மற்றும் இறைவனை முப்போதும் திருமேனி தீண்டுபர்களாய் விளங்கும் ஆசார்யர், தன் ஆன்மாவிலும் இறைவனை ந்யாஸித்துத்தான் வெளியில் இறைவனை பூஜிக்கவேண்டும் என்று கூறுகிறது.

தேவ ஏவ யஜேத் தேவம் நா அதேவோ தேவ மர்சயேத் |
நியாசாத் ததாத்மகோ பூத்வா தேவோ பூத்வா து தம் யஜேத் ||
(குலப்ரகாச தந்த்ரம்)

என்றவாறு தேவன்தான் தேவனை பூஜிக்கவேண்டும். தேவதன்மையற்றவன் தேவனை பூஜிக்கஇயலாது.

நியாஸத்தினாலே ப்ரக்ருதி சைதன்யமான நம் ஆன்மாவினை மந்த்ரசைதன்ய ஆன்மாவாய் மாற்றி, இறைவனை அழைக்க ந்யாஸங்கள் மிகவும் தேவையான ஓர் க்ரியையாகும். இத்தகைய ஆகமோக்த மந்த்ரந்யாஸத்தின் பலன் யாதென்று சாக்தாகம் கூறுகிறது.

ஆகமோக்தேந மார்கேந ந்யாஸான் நித்யம் கரோதி ய: |
தேவதா பாவமாப்நோதி மந்த்ர ஸித்திஸ்ச ஜாயதே ||
(குலப்ரகாச தந்த்ரம்)

யாரொருவர்நித்தியம்ந்யாஸம்செய்கிறார்களோ, அவர்கள்தேவபாவத் துடனும் மந்த்ரஸித்திபெற்ற ஜீவன்முக்தர்களாகவும், திகழ்கிறார். இத்தகைய மந்த்ரசைதன்யமான மந்த்ரமேனியின் மஹிமை யாதெனில்?

யோ நிாயஸ கவச சந்நோ மந்த்ரம் ஜபதி தம் ப்ரியே |
விக்னாத்ருஷ்ட்வா பலாயந்தே சிம்ஹம் த்ருஷ்ட்வா யதா கஜா: ||
(குலப்ரகாச தந்த்ரம்)

யாரொருவர் ந்யாஸாதி க்ரியையினால் மந்த்ரகவசத்தினை தரித்திருக்கிறார்களோ, அவர்களுக்கு யானையினைப் போன்றுவரும், தடைகள் உபாதைகள் (விக்கினம்) கூட சிங்கத்தினை கண்டவைபோல் உள்ள அவர்களைக்கண்டு அகன்றுவிடும் என்றும், அவரே சிவவேடம் பூண்டவராகிறார்.

அருளால் அரசனுக்கு அடிமை அது ஆகிப்
பொருளாம் தனது உடல் பொற்பதி நாடி
இருளானது இன்றி இருஞ்செயல் இற்றோர்
தெருளாம் அடிமை சிவவேடத் தவரே

என்றும் அத்தகைய மந்த்ரந்யாஸத்தினால் அவயவம் (அஸத்தான தேஹமானது) தன்மையைவிட்டு, பொற்பதியாய் விளங்கும் பரமபதியின் திருவடியை நாடி, இருள் மலம் இன்றித்தன்செயல் அற்று யாதும் சிவச்செயலாக கருதுவோர் ந்யாஸாதிகள் மூலம் சிவவேடம் பெற்றவராகிறார். அத்தகைய ஸ்வானுபூதிமத்தரான ஆசார்யார் கற்பிக்கும் ஷடத்வந்யாஸத்தின் மஹிமையானது,

சர்வக்ஞத்வம் கலாந்யாஸே நித்யத்ருப்திஸ்ச தத்வகே |
அநாதிபோதம் புவநே வர்ண ந்யாஸே ஸ்வாந்த்ரகம் ||
பதநியாஸே அலுப்தசக்திம் மந்த்ரே சாநந்த சக்திகம் |
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந ஷடத்வ ந்யாஸ மாசரேத் ||

என்ற வாக்கின்படி

1. கலாத்வ ந்யாஸத்தால் ஸர்வஞத்வம்,
2. தத்வாத்வ ந்யாஸத்தால் நித்யத்ருப்தித்வம்,
3. புவனாத்வ ந்யாஸத்தால் அநாதிபோதம்,
4. வர்ணாத்வ ந்யாஸத்தால் ஸ்வதந்த்ரத்வம்,
5. பதாத்வ ந்யாஸத்தர்ல் அலுப்தசக்திமத்வம்,
6. மந்திரநியாஸத்தால் அநந்தசக்தித்வம்

ஆகிய (ஷாட்குண்யமும்) ஆறுவிதகுணங்களும் (ஷடத்வாவினால்) ஆறுஅத்வாவின் நியாஸத்தால் வெளிப்படுகிறது. இத்தகைய மஹிமை வாய்ந்த ந்யாஸத்தினை செயல்படுத்தவேண்டிய காலங்கள், மிகமுக்கியமாக பூஜைகாலங்களில் தவறாது செய்யவேண்டும்.

ருத்ரேச்வர ஸதேசானாம் க்ரியாக்யா தனுகாரிணீ |
இத்யேவம் த்ரிவிதா: பரோக்தா: ருத்ரேஸ்வர சதாசிவா: |
தஸ்மாத் ஞானமயோ தேஹ: அருபஸ்ய து கீர்த்தித:|
தத்தேஹ த்ரய சித்யர்த்தம் மூர்த்திமத்ர ப்ரகல்பயேத் |

(காமிகாகமம்)

அதாவது ருத்ர, ஈச்வர ஸதாசிவாதிகளுக்கு தநுகாரண க்ரியையான ந்யாஸம் செய்தாலே, அதற்கும்மேல் இருக்கும் நாதாந்த ஞானமாய் திகழும் தேஹம், சிவதேஹம், என்று அவ்வித மூன்று மூர்த்தங்களையும் பெறவேண்டியே மூர்த்தியினை பூஜைக்காலங்களில் கற்பிக்கவேண்டும்.

கும்பம் வா பிம்பமேவா(அ)த ஷடத்வக விஹீநகம் |
மூர்த்தே ராவாஹநாத் பூர்வம் ஷடத்வானம் ப்ரகல்பயேத் ||
(அஜிதாகமம்)

ஏன்றும் (கும்பம், பிம்பம்) இவைகளில் லக்ஷ்யத்தில் ஆவாஹிக்கும் முன்னரே, ஷடத்வந்யாஸத்தினை செய்விக்கவேண்டும் என்று கூறுகிறது. மற்றும் பூஜை, ப்ரதிஷ்டை காலங்களிலும், முக்கியமாக நிகழ்த்தும் ஆவாஹனாதி கார்யங்களின் முன்னர்செய்யவும்.

ஆவாஹனாதி காலே து ஆசார்யோ குரு ரூபத்ருத் |

என்ற வாக்கின்படி ஆசார்யரானானவர் குருரூபமாய் இருந்து, ஆவாஹனத்தை நிகழ்த்தவேண்டும். அத்தகைய ந்யாஸங்கள் செய்யவேண்டிய அவயங்கள் பலவாராயின், மிகமுக்கியமாக பூஜ்ய பேரத்திலும் பூஜகபேரத்திலும் ந்யாஸம் என்றவாறு இறைவனின் உறைவிடமாக விளங்கப்படும் முக்கியமானவை பேரம், பேரத்தில் பிந்துமயமாக இருக்கும் பீடம், நாதமயமாக இருக்கும் லிங்கம். இவ்விதம் வ்யக்தாவ்யக்தமாய் இருக்கும் லிங்கரூப பேரத்திற்கும், வ்யக்தமூர்த்தங்களான ஷண்முகாதி பேரங்களுக்கும் மற்றும் அவ்யக்தமான லிங்கபேரங்களுக்கும் செய்யத்தக்கதாகும்.

மந்த்ரேண தேவதா: ஸ்தாப்யா: மந்த்ரேண யஜனாதய: |

என்ற வாக்கிற்கிணங்க, மந்திர சைதன்யத்தினாலே தெய்வங்களை ஸ்தாபித்தலும், பூஜை (யஜனம்) க்ரியைகளும் நடைபெறவேண்டும். பொதுவாக இத்தகைய மந்திர நியாஸமானது மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஸசக்திகம், விசக்திகம், ஸ்ருஷ்டியாதிகம் என்பனவாம்.

1. ஸசக்திகம் = கலாசக்தி ந்யாஸம்
2. விசக்திகம் = மாத்ருகாசக்தி விஹித ந்யாஸம்
3. ஸ்ருஷ்டி நியாஸம், ஸ்திதிநியாஸம், ஸம்ஹாரநியாஸம்

மற்றும் பூஜ்ய பூஜக பேரங்களில் முக்கியமாக பஞ்சப்ரம்ஹ ஸ்தானங்களிலும் (ஐம்பெரும் உறுப்புகள்) ந்யாஸம் செய்யலாம் என்று அஜிதாகமம் கூறுகிறது.

மூர்த்நி வக்த்ரே ச ஹ்ருதயே குஹ்ய தேசே த பாதயோ: |
ஈசாநாதி க்ரமேணைவ வின்யஸேத் பிண்ட பஞ்சகம் ||(அஜிதாகமம்)

ஷடங்கஸ்தானங்களிலும், மற்றபகுதிகளான, மூர்தாதி பாதம் வரையிலும் ந்யாஸங்கள் சிவாகமக்ரியாபாகத்திலே மொழியப் பட்டுள்ளன.

சித்தாந்தசாராவளியில் அஷ்டத்ரிம்சத்கலான்யாச பகுப்புமுறை கூறப்படுகிறது.

ஈசே நாம் த்வே ஹ்நாஸ்து வோம் ஹேஹி
த்ரயாந் நரேப்யோ த்வி ரப்ய: சர்வப் –
த்ரப்யோ கோரே வேத மோல மல மல மமோ வாமதேவே நமௌ ச |
மிமோ வேத்ரி ணிமாம் வத்விதய மவதிகம் ஸத்யமந்த்ரே கலாநாம்-
பஞ்சாப்திஸ் சாஷ்ட விச்வோ (அ)ப்யஹி ரிதி ச யதா –
– ஸங்க்ய மஷ்டாதி த்ரிம்சத் ||

இவ்வாறு இனி அஷ்டத்ரிம்சத்கலா நியாஸங் கூறுகின்றார். ஐந்து மந்திரங்களின் 38கலாந்யாசத்தில், ஈசான மந்திரக்கலைகள் ஐந்தையும், கீழ்ச்சொன்ன வேதமந்த்ர பாவங்களோடு சேர்த்து தலை முதலாக ஐந்தையும் ந்யாஸஞ்செய்யவேண்டும். இப்படியே தத்புருஷகலைகள் நான்கையும், அகோரகலைகள் எட்டையும், வாமதேவகலைகள் பதிமூன்றையும், சத்யோஜாதகலைகள் எட்டையும், அந்த அந்த வேதமந்த்ரம் கலந்து செய்யும் ந்யாசம் ஸசக்திகம் என்றும், இப்படி கலாபதமில்லாத கேவலந்யாசம் விசக்திகம் என்றும் சொல்லப்படும்.

ஈசாநஸ்ய கலா: பஞ்ச புருஷஸ்ய சதுஷ் கலா: |
அகோரஸ்ய கலாச் சாஷ்டௌ வாமதேவே த்ரயோதச |
ஸத்யோ ஜாதகலாச் சாஷ்டா வஷ்டத்ரிம்சத் கலா: ஸம்ருதா: |

இங்கு தத்புருஷகலைகள் நான்கை அப்படியே ஊர்த்வமுகம் தவிர மற்றய நான்கு முகங்களுக்கும் சொல்லப்பட்டன. என்று தெரிகிறது. இப்படி முப்பத்தெட்டு கலைகளுக்கும் ந்யாசம் செய்யும் இடம் அறிந்து செய்யவேண்டும். அஷ்டத்ரிம்சத்கலா நியாஸத்தாலேயே மந்திரமயமான வித்யாதேஹத்தில் இறைவன் இருந்துஅருள்கிறார்.

மூர்த்தாந: பஞ்ச வக்த்ரா ண்யத ஹ்ருதய கலௌ த்வ்யம்ஸ நாபிச் ச குக்ஷி:-
ப்ருஷ்டோரோ குஹ்ய சிச்நோ ருக யுக மபரம் ஜாநு யுக்மம் ச ஜங்கே |
த்வி ஸ்பிக் கட்டௌ ச பார்ச்வௌ சரண கர யுகம் க்ராண மௌலீ ச பாஹூ –
ஸ்தாநாநி ஸ்யு: கலாநாம் சிவதநுகரணே த்ரிம்சதாம் ஸாஷ்டகாநாம் ||

இவ்வாறாக உரியஉறுப்புப், பகுதிகளில் ந்யாஸங்களைச் செய்யவேண்டும். மற்றும் இதற்கு மந்திரங்களே ப்ராணணாக விளங்குகின்றன என்று மகுடாகமத்தில் கூறப்படுகிறது. அதற்கான சான்று,

ப்ராணோ மந்த்ர இதி பரோக்தோ ப்ரக்ருதிர் பிம்பமேவ ச |
ப்ராண ப்ரக்ருதி யோகந்து ஞாத்வா ஸ்தாபந மாசரேத் || (மகுடே)

அதாவது ப்ரக்ருதியாய் விளங்கும் பிம்பத்திற்கு, மந்திர சைதன்யமான ப்ராணனை கொடுக்கிறது. நியாஸம். இதுவே ஜீவநியாஸம் ஆகும். இவ்விரண்டினையும் சேர்த்திடும் முறையை அறிந்து ஸ்தாபனத்தைச் செய்யவேண்டும்.

திருமந்திரம்

உண்மைச் சிவவேடத்தார் இலக்கணமாவது,

அருளால் அரசனுக்கு அடிமை அது ஆகிப்
பொருளாம் தனது உடல் பொற்பதி நாடி
இருளானது இன்றி இருஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவ வேடத் தாரே.

சிவனது திருவருளால் அவனுக்கு அடிமையாகிப் பொருளான தனது உடலுக்குமேல் விளங்கும், பொன் ஒளிமயமான அண்டகோசத்தை உணர்ந்து, இருள்நீக்கித் தம் செயல் அற்றவரே தெளிவான அடிமைப்பூண்ட சிவவேடத்தார் ஆவர்.

உடல், பொருள், ஆவி, ஆகிய மூன்றையும் சிவனுக்கு அர்ப்பணம் செய்பவள் உண்மைச் சிவவேடத்தவர் ஆவார் என்று அறியத்தக்கது.

ஞானியர்க்கு முச்சுடரும் மூன்று கண்களாய் அமைதல் சிறப்பாகும்.

இளங்கு ஒளி ஈசன் ஒன்று மில்லி
துளங்கு ஒளி ஞாயிறும் திங்களும் கண்கள்
வளம் கொளி அங்கியும் மறைக் கண் நெற்றி
விளக்கு ஒலி செய்கின்ற மெய்காம் ஆமே,

இதன்பொருள்

விளங்கும் ஒளியையே திருமேனியாக உடைய சிவன் ஒருபோதும் பிறவி எடுக்காதவன். விளங்கும் ஒளியை உடைய கதிரவனும், திங்களும் அவனுடைய கண்கள். வளமிக்க ஞானஒளியை வீசுவதான அக்னியும் அவனது மூன்றாவது கண்ணான நெற்றிக்கண் ஆகும். இப்படி விளக்கமான ஒளியைத்தரும் மூன்றும் ஞானியர் உடலில் அமையும்.

விளக்கம்

இளங்கு = இலங்கு என்பது இளங்கு என வந்தது. அங்கி அக்னி, ஞானியர்க்கு இடக்கண் திங்கள், வலக்கண் கதிரவன், நெற்றிக்கண் அக்னி, இங்ஙனமாக உரைக்கப்படும் நெற்றிக்கண்ணின் ஆற்றல் பிடரிக்கண்ணில் இருப்பதாகும்.

சிவன் சாந்தியதீத கலையின் விளங்கும் சிவன் ஆவான்

தொழில் இச்சை ஞானங்கள் தொல் சிவசீவர்
கழிவற்ற மாமாயை மாயையின் ஆகும்
பழியற்ற காரண காரியம் பாழ்விட்டு
அழிவற்ற சாந்தாதீதன் சிவன் ஆமே

இதன்பொருள்

முன்னம் சிவமாம் தன்மை அடைந்து, சீவரின் இச்சா ஞானசெயல்கள் நீங்காத, சுத்தாசுத்த மாயை செயல்களால் உண்டாவன். அச்சிவன் பழியற்ற காரண காரிய தத்துவங்கள் பாழாக நிலைப்பேறான சாந்தியாதீதகலைகள் விளங்குபவனான சிவம் ஆவான்.

விளக்கம்

சாந்தியாதீத கலை வியாபகமானது. மற்றகலைகள் அதனுள் அடங்கியவை. வியாப்ய வியாபக பாவனை தேவை.

முடிவுரை

ஆகமவழிபாட்டில் ஆஸனமும் மூர்த்தியும் ஷடத்வாக்களின் உருவாகத்திகழ்பவை. மந்த்ரம், பதம், வர்ணம், தத்வம், புவனம் ஆகிய ஐந்துவகை அத்வாக்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டு ஸர்வவியாபகமாக, சாந்த்யதீதை, சாந்தி, வித்யா, ப்ரதிஷ்டா, நிவ்ருத்தி என்ற ஐந்து கலைகள், பிந்துவில் தோன்றிவிளங்குவன.

இந்த ஐந்துகலைகளுமே, உலகமாயும், உடலாயும், தெய்வத்திருமேனிகளாயும், துணைக்கருவிகளாயும், யாகமண்டபம், வேதிகை, ஸ்தண்டிலம், ஆஸனம், மூர்த்தி, குண்டம், ஆலயம், விமானம், அனைத்துமாய் விளங்குவன ஆகும். இதனையே ஆகம அறிஞர்கள் "கலாமய பரிகல்பனம்", கலாசோதனம், கலாநியாஸம், ஷடத்வதியாஸம் என்று கூறுகிறார்கள். இவ்வாறு சிவனின் பஞ் சாஸனமும், வித்யாதேஹமும், பஞ்சஅத்வாக்களை தன்னுள் அடக்கியுள்ள பஞ்சகலாமயமாகும். இவ்வாறு ஆஸனத்தைக் கற்பித்து, அதன்மேல் மூர்த்திகல்பனத்தை நியாஸத்தால் செய்து, பின்னர் அந்த மந்திரதேஹத்தினுள்ளே நாதமய வித்யாதேஹத்தில் மூலமந்திரத்தையே ஜீவனாக, சிவனாக, ப்ராணசக்தியாக நிலைநிறுத்தி, சைதன்யம் அதில் ஸித்தித்த லிங்கம் அல்லது பிம்பத்தில் பலவகை உபசரிப்புகளால் இறையை பூஜைசெய்து மகிழ்வித்து, போகமோக்ஷங்களான திருவருள் பயனைப்பெற்று உயிர்கள் உய்வதே சிவாகமநெறிமுறை ஆகும். இத்தகைய ஆகம அருள்நெறியில் வழிபட்டு யாவரும் பயன்பெறுவோமாக.

சுபம்.

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(அருணகிரிநாதர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

உ

ஸ்ரீகுருப்யோ நம:

சென்னை சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாச்சார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
1.	உருவத்தில் இறைவன்	தமிழ்	தமிழ்	No Stock
2.	விபூதி மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
3.	நவராத்திரி தேவியர் துதித்திரட்டு	தமிழ்	தமிழ்	No Stock
4.	புதுக்கோயில் சடங்கு ஐந்து	64–தமிழ்	தமிழ்	Rs.200/-
5.	சிவாகம கட்டுரைத் திரட்டு–1	122–தமிழ்	தமிழ்	Rs.300/-
6.	சிவாகம கட்டுரைத் திரட்டு–2	132–தமிழ்	தமிழ்	Rs.300/-
7.	காக்கும்காளியின் காருண்ய மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
8.	சிவாகம கட்டுரைத்திரட்டு–3	தமிழ்	தமிழ்	Rs.300/-
9.	சிவாகம கட்டுரைத் திரட்டு–4	168–தமிழ்	தமிழ்	Rs.300/-
10.	சிவயோகநெறி (சைவாகமத்தில்)	116–தமிழ்	தமிழ்	No Stock
11.	ஆலயாகார அர்த்த விவரணம்	64–தமிழ்	தமிழ்	No Stock
12.	புஷ்பார்ச்சன விதி	124–தமிழ்	தமிழ்	Rs.200/-
13.	திவ்யாபிஷேக விதி	136–தமிழ்	தமிழ்	Rs.200/-
14.	ஹோமலக்ஷண ஸங்கிரஹம்	340–தமிழ்	தமிழ்	Rs.500/-
15.	சண்டீயாக விவேகம்	306–தமிழ்	தமிழ்	Rs.400/-
16.	திவ்ய ஸ்தவ கதம்பம் (கிரந்தம்)	180–கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
17.	சிவாகம கட்டுரைத்திரட்டு–5	160–தமிழ்	தமிழ்	Rs.200/-
18.	நக்ஷத்ரசாந்தி விதானம்	124–தமிழ்	தமிழ்	Rs.550/-
19.	உத்ஸவபேத க்ரியாபோதம்	224–தமிழ்	தமிழ்	Rs.350/-

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
20.	நற்கூற்று மணிமாலை	352-தமிழ்	தமிழ்	Rs.400/-
21.	சிவாகம சூக்தி மஞ்ஜரீ	224-தமிழ்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
22.	காளீபூஜாப்ரபாவம்	380-தமிழ்	தமிழ்	Rs.450/-
23.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	48-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.250/-
24.	புவனேச்வரீ பூஜாகல்பம்	202-தமிழ்	தமிழ்	Rs.350/-
25.	சைவநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	No Stock
26.	சிவசக்தி ஸ்தோத்ரமாலா	320-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.350/-
27.	பத்ரகாளீ தீபபூஜையும் துதிகளும்	124-தமிழ்	தமிழ்	Rs.200/-
28.	பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம்	560-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
29.	பிரத்யங்கிரா ஸஹஸ்ரநாமம்	150-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
30.	சிவாகம கட்டுரைத்திரட்டு-6	108-தமிழ்	தமிழ்	Rs.200/-
31.	திவ்யஸ்தவகதம்பம்	180-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
32.	கோயில்விழாக்களின் வாஹனஉலா	256-தமிழ்	தமிழ்	Rs.400/-
33.	தேர்பவனிப்பெருமை	176-தமிழ்	தமிழ்	Rs.300/-
34.	சிவகாமகட்டுரைத்திரட்டு-13	136-தமிழ்	தமிழ்	Rs.300/-
35.	சிவஸ்தோத்ர முக்தாவளீ	104-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
36.	ஆகமச்சான்றுப் பேழை	186-தமிழ்	தமிழ்	Rs.300/-
37.	சண்டீயாக ப்ரயோகம்	300-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
38.	ஆகமக்கோயில் அமைப்பு முறை	576-தமிழ்	தமிழ்	Rs.750/-
39.	லக்ஷ்மீ ஆராதன சந்திரிகா	528-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.800/-
40.	லிங்கஸ்தாபனம் & அஷ்டபந்தனம்	572-தமிழ்	தமிழ்	Rs.500/-
41.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	80-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
42.	திரிகால ஸந்தியாவந்தனம்	கிரந்தம்-24	சம்ஸ்க்ருதம்	Rs.100/-
43.	சிவாகமகட்டுரைத்திரட்டு பாகம்-10	262-தமிழ்	தமிழ்	Rs.300/-

யந்திர செப்புத் தகடுகள்

ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்த எழுத்தில் ரூ.1000/-

சைவ, வைணவக் கோயிலின் அறுசமயத் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரக்தகட்டில்அளவு இஞ்ச் 3 × 3 அல்லது 5 × 5ல் ஆகம விதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரியவைக்கு மட்டுமே கிடைக்கும்.

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ) (தமிழ் - பாகம்-4)



நூல் தொகுப்பாசிரியர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசாரியார்

சென்னை, மஹரிஷி வேதாகம பாடசாலையின் முன்னாள் ஆகம பண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள், பலவற்றை பலமுறை தலைமைஏற்று நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமை அர்ச்சகரும், பாடசாலைகளின் ஆண்டுத் தேர்வுகளில் பலமுறை பரிக்ஷாதிகாரியாக பணியாற்றியவரும், சிவாகம வித்யா பீடத்தின் ஸ்தாபகரும், சமய போதகராக இருந்து பல மாணவர்களை உருவாக்கியவரும், சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவரும், சென்னை சிவாசாரியார் அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகரும், அதன் சைவாகம கலாச்சார வித்யா கேந்திரத்தின் குருமுதல்வரும், சென்னையில் 8 ஆண்டுகள் மாதந்தோறும் 96 சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தியவரும், சமயம் சார்ந்த 40-க்கும் மேற்பட்ட விளக்க நூல்களை தொகுத்து வெளியிட்டவரும் ஆவார்.

₹ 300/-